# அனுபந்தம் A.

## சென்னை மாகாண எட்டாவது கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

### அக்கிராசனர் மிஸ்டர் ஜஸ்டிஸ் T. V. சேஷகிரி ஐயர் அவர்கள் உபந்நியாசம்.

கனவான்களே,

நாமெல்லோரும் இங்கு கூடியிருக்கும் விஷயத்தைப்பற்றி பேசுமுன் எல்லோருடைய மனதிலும் தற்காலம் முதன்மையாக ஊசலாடிக்கொண்டிருக்கும் முக்கிய விஷயத்தைக் குறித்துப் பேசவிரும்புகிறேன். அப்படிச் செய்வதில், அபிப்பிராய பேதங்களுள்ள இராஜீய விஷயங்களில் கூட்டுறவினர்கள் தலையிடக்கூடாதென்ற விதியை சிறிதும் மீறி நடக்கமாட்டேன். இந்தியாவின் நூதன சட்டத்திற்கு தம்முடைய அனுமதியைக்கொடுத்து அங்கீகாரஞ்செய்த அரசர் பெருமான் இராஜசக்கரவர்த்தியவர்களுக்கு நம்முடைய நன்றியைக் காட்டுவதிலும் உற்சாகத்துடன் சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ளுவதிலும் அபிப்பிராய பேதமுள்ள இராஜீய விஷயம் ஒன்றும் வந்துவிடவில்லை. வேல்ஸ் இளவரசரவர்கள் சமீபத்தில் இந்தியாவிற்கு விஜயஞ்செய்யப் போவதில் அவர்களை உற்சாகத்துடன் வரவேற்பதில் கூட்டுறவினர்கள்தான் முதன்மையாக நிற்பார்களென்று சொல்லுவதிலும் அபிப்பிராய பேதமுள்ள இராஜீய விஷயம்றும் வந்துவிடவில்லை.

இக்கான்பரன்ஸின் அக்கிராசனத்தை வகிக்க நான்சிறிதேனும் இணங்கவில்லை. என்னுடைய இயலாமையை ஸ்ரீமான் வெங்கட சுப்பையாவிடம் பல முறையும் வற்புறுத்திச் சொன்னேன். ஆனால் என்னுடைய முயற்சி சற்றும் நிறைவேறவில்லை. அக்கிராசனம் வகிக்கவேண்டிய ஒருவர் எவ்வாறு கூட்டுறவு இயக்கத்தைத் அறிந்திருக்க வேண்டுமோ அவ்வாறு நான் இதுவரையில் கூட்டுறவு இயக்கத்தைக் குறித்து அறிந்துகொள்ளவில்லை. இது காரணங்கள் பற்றி கூட்டுறவினர்களாகிய நீங்கள் என்னிடம் அதிகம் எதிர்பார்க்கக் கூடாது. கூட்டுறவுச் சட்டத்தில் கூறிய சட்டங்களின்வரி கோணாமல் நான் நடந்து கொள்ளவாவிடினும் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளினின்று சிறிதும் பிறழாமல் நான் காத்துக்கொள்ளுவேன். இங்கு கூடியிருக்கும் கூட்டுறவினர்களும், கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும், சொற்ப வரும்படியுள்ளவர்களுக்கு கூட்டுறவு இயக்கம் என்ன செய்யக்கூடும் என்னும் விஷயங்களையே பிரதானமாக கவனித்து வருகிறார்கள். ஆனால் கூட்டுறவு இயக்கத்தின் எல்லை மிகவும் விஸ்தாரமாக இருக்கின்றது. அது போதிக்கக்

கூடிய கற்பனு பாடம் அதிகமாக இருக்கின்றது, கல்வி சம்பந்தமாக கூட்
டுறவு இயக்கம் மூல்யமாய் ஏற்படக்கூடிய நன்மைகள் அநேகம் இருக்
கின்றன. கூட்டுறவு இயக்கம் என்னும் சமுத்திரம் மிகவும் விசாலமா
னது. அதனுல் ஏற்படக்கூடிய நன்மைகள் பலவற்றிற்கு அச் சமுத்திர
த்திற்குள் மூழ்கி ஆழ்ந்துபார்க்கவேண்டும். என்படைய நோக்கங்களே
யும், கொள்கைகளேயும் நீங்கள் ஆதரிக்கவேண்டுமென்ருவது பின்பற்ற
வேண்டுமென்ருவதுநான் இப்பொழுதுசொல்லவில்லை ஆயினும்இம்முகவு
ரையை சொல்லிவிடவேண்டியது என்னுடைய கடமையென்றுஎண்ணு
கிறேன். இப்பொழுது செய்யவேண்டிய வேலை சாதாரணமேயாயினும்
இயக்கத்தின் உட்கருத்துகளே அறிவதிலும் ஆழ்ந்து பொதிந்து கிடக்
கும் லட்சியங்களேக் கவனிப்பதிலும் எனக்கு ஓர்வித திருப்தியுண்டு.
எனக்குமுன் அக்கிராசனம் வகித்தவர்களெல்லாம் இயக்கத்தின் பிரத்
தியட்ச அனுபவங்களேயும், கஷ்டங்களேயும் பிரத்தியட்சநடவடிக்கையில்
உள்ள விஷயங்களேயும் எடுத்துக்காட்டியிருக்கிருர்கள். நானே அப்ப
டிக்கெல்லாம் எடுத்துச்சொல்ல அசக்தனுயிருக்கிறேன். இதுவரைக்
கும் என்ன செய்யப்பட்டுள்ளதென்று எடுத்துக்காட்டுவதைக் காட்டி
லும் இனி என்ன செய்யவேண்டு மென்பதையே பெரும்பாலும் எடுத்
துக்காட்டுவேன். ஆனுல் என்மீது பழி சுமத்தப்படாமலிருக்கும்பொரு
ட்டு இவ்விராஜதானியில் இவ்வியக்கம் எவ்வளவு முன்னேற்றமடைந்தி
ருக்கிறதென்று ஒருவாறு சொல்லுகிறேன்.

இந்தியா முழுவதிலும் இயக்கத்தின் அபிவிர்த்தியைக் கவனிப்போ
மானுல் சென்ற வருஷக் கடைசியில் 26,465 கூட்டுறவுச் சங்கங்கள்
இருந்திருக்கின்றன. அவற்றுள் சேர்ந்திருந்த மெம்பர்களின் தொகை
10,50,000. இச்சங்கங்களின் மொத்த லேவாதேவித் தொகை 1,450
இலட்சம் ரூபாய்கள். சென்ற வருஷக் கடைசியில் சென்னை மாகாணத்
தில் மட்டும் 3676 சங்கங்கள் இருந்திருக்கின்றன. அவற்றில் சேர்ந்
துள்ள மெம்பர்களின் தொகை 2,44,297. அச்சங்கங்களின் மொத்த
லேவாதேவித் தொகை ரூ. 305,21,427, இச்சங்கங்களின் நிகர இலா
பம் ரூ. 3,58,385.

இதனுல், சென்னை மாகாணம் இதர மாகாணங்களேவிட அதிகமாக
முன்னடைந்திருப்பதாகச் சொல்ல முடியாது. சென்ற வருஷத்தில்
நூதனமாக ஆறு சென்டிரல் பாங்குகளும் 29 சூபர்வைவலிங் யூனியன்க
ளும் 960 சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. சென்டிரல் பாங்குகளும்
இதரச்சங்கங்களும் பிரைமெரி சங்கங்களுங்கு கொடுக்கும் கடன்
கள் அதிகப்பட்டிருக்கின்றன. இச் சங்கங்களின் க்ஷேமநிதி 11. 88
[illegible] 14.65 இலட்சத்திற்கு அதிகப்பட்டது. இவையெல்
[illegible] இயக்கம் அதிகமாக முன்னடைந்திருக்கிறதென்

222118



றே சொல்லக்கூடியதாக இருக்கின்றது. சென்ற வருஷக் கடைசியில்
3043 விவசாயச் சங்கங்கள் இருந்திருக்கின்றன. இவ்வகுப்புச்சங்கங்களில்
சேர்ந்துள்ள மெம்பர்களின் தொகை 1,27,253. இவர்களுள் சுமார் ஐம்
பதுனுயிரம் விவசாய மிராசுதார்கள், சுமார் பத்தாயிரம்விவசாயக்குடித்த
னக்காரர்கள், நாலாயிரம் வயல்களில் வேலைசெய்யும் தொழிலாளர்கள்.
இவ்விஷயம் மிகவும் திருப்திகரமானதென்று நான் அபிப்பிராயப்பட
வில்லை. இத்தகைய விவசாயச்சங்கங்களில் விவசாயக் குடித்தனக்காரர்
களும் வயல்களில் வேலைசெய்யும் கூலிவேலைக்காரர்களுந்தான் அதிகமா
கச் சேரவேண்டியது. ஏராளமான அநியாயவட்டி வாங்குபவர்கள் கை
யில் இத்தகைய வகுப்பினர்கள்தான் அதிகமாகக் கஷ்டப்படுவது.
காலதேச வர்த்தமானங்களின் கஷ்டத்தை முன்னிட்டு இத்தகைய வகுப்
பினர்கள்தான் அதிகமாகக் கஷ்டப்படுகிருர்கள். இத்தகையவர்களின் நன்
மையைத்தான் பிரதானமாகக் கவனிக்கவேண்டும். கூட்டுறவுச் சங்
கங்களில் இத்தகைய வகுப்பினர்கள் அதிகமாகச்சேர விவசாய மிராசு
தார்களும், இதரகனவான்களும் ஏராளமாகப் பிரயத்தனஞ்செய்யவேண்
டும். இவ்வகுப்பினர்கள் முன்னேற்றம் அதிகமாக கவனிக்கப்படாமற்
போகுமாகில் கோவாபரேடிவ் ஆக்டின் நோக்கமும் எண்ணமும் பிரயோ
சனமற்றதாகப் போய்விடும். இவ்வகுப்பினர்களுக்கு அதிகக் கடன்கள்
கொடுக்கப்பட வேண்டும். நபர் ஜாமீன்பேரில் கடன்கள் கொடுப்பதை
யே அதிகமாகப் பெருக்கவேண்டும். கூட்டுறவு இயக்கம் சித்திபெற்று
ள்ள தேசங்களிலெல்லாம் நபர்ஜாமீன்பேரிலேயேதான் கடன்கள்கொடுக்
கப்பட்டுள்ளன. ஆனுல் இத்தகைய விஷயத்தில் சிறிது அபாயமும் நஷ்
டமும் ஏற்படலாம். ஆனுல் எத்தகைய இயக்கத்திலும் இராஜீய விஷய
மானுலுஞ்சரி ஜனசார சீர்திருத்தவிஷயமானுலுஞ்சரி, கூட்டுறவு இயக்க
விஷயமானுலுஞ்சரி ஆரம்பத்தில் சிறிது கஷ்டத்தையும் நஷ்டத்தையும்
அனுபவிக்க வேண்டியதே. தட்டுத்தடுமாறி தள்ளாடி நடப்பதற்குக் கற்
றுக்கொள்ளாத குழந்தை ஒருபோதுமே நடக்கத் தெரிந்து கொள்ளாது.
அபாயம் வருமோவென்று நினைத்துக் கொண்டே மௌனமாகஇருந்தால்
எத்தகைய காரியமும் கைகூடாது. எக்காரியமும். சித்திபெருது தைரி
யத்தைக்கொண்டு காரியங்களே ஆரம்பஞ்செய்பவர்களுக்குத்தான்காரி
யம் கைகூடும். வெற்றி ஏற்படும். ஆனுல் இயக்கத்தின் நோக்கத்தை
யும் கருத்தையும் சிறிதும் பிழைவிடாமலும் நழுவவிடாமலும் காரியத்
தை ஆரம்பஞ்செய்து நடத்தவேண்டும். இப்படி காரியம் ஆரம்பித்து
கடைசியில் வெற்றி ஏற்படுமானுல் அப்பொழுது ஏற்படும் சந்தோஷத்
திற்கு அளவேயில்லை. இக்காரணங்கள்பற்றியே இவ்வகுப்பினரை ஏரா
ளமாகச் சங்கங்களில் சேரும்படிச்செய்து அவர்களுக்கு சிக்கனமும்
நல்லொழுக்கமும் போதிக்கும்படிச் செய்யவேண்டுகிறேன்.

இம்மாகாணத்தின் கூலி வேலை செய்பவர்களும், தொழிலாளர்களும் வெளி தேசங்களுக்குப் போய் விடுவதால் ஏற்படும் கஷ்டங்களை இம்மாகாணத்து மிராசுதார்கள் உணர்கிறார்கள். இக்கூலிக்காரர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வருஷம் முழுவதும்கூலி அகப்படும்படி வேலை கொடுத்தால் இவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லமாட்டார்களென்று வேறொரு சமயத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறேன். இவர்களை யெல்லாம் கூட்டுறவுச்சங்கங்களில்மெம்பர்களாக்கிஇவர்களுடையநடையுடை பாவனைகளைச் சீர்திருத்தி அவர்களுடைய நடத்தைகளை ஒழுங்குபடுத்த வேண்டும். இவர்கள் அதிக வட்டிக்குக் கடன் வாங்கி கஷ்டப்படாதபடி இவர்களுக்குக் கடன் கொடுத்துதவ வேண்டும். இத்தகைய வகுப்பினர்களுக்காக மெட்ரூஸ் "ஸோஷியல் ஸர்வீஸ் லீக்" சென்னை ஆசார சீர்திருத்தச் சபை கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்து நடத்தி வருகின்றது. இத்தகைய ஏழைவகுப்பினர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களில் மிகவும் முக்கியமானது, மிஸ்டர். வெங்கடசுப்பையாவின் ஊக்கத்தாலும் பெருமுயற்சியாலும் சிறிதும் குன்றாத சிரத்தையாலும் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிற லெதர்குட்ஸ் பாக்டரியாகும். சென்னை ஸோஷியல் ஸர்வீஸ் லீக் ஆதரணையில் இருக்கும்சங்கங்களில் கொஞ்சம் பொருள் நஷ்டம்ஏற்பட்டுள்ளது. ஆயினும் மெம்பர்களுக்கு நடவடிக்கைளிலும், வழக்க ஒழுக்கங்களிலும் அபரிமிதமான மாறுதல் ஏற்பட்டு செவ்வனே சீர்பட்டிருக்கிறார்கள். ஆகையினால் தொழிலாளர்களையும் கூலிவேலை செய்பவர்களையும் கூட்டுறவுச் சங்கங்களில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள பிரயத்தனங்கள் செய்யும்படி கூட்டுறவினர்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்,

சென்ற வருஷக் கடைசியில் இம்மாகாணத்துக் கூட்டுறவுச் சங்கங்களில் 2972 பஞ்சமர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்கள் இன்னும் அதிகமாக இருந்திருந்தால் அதிகநன்மையயிருக்குமென்று நான் விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களில் எந்த வகுப்பினரேனும் அதிகமாக இடம்பெற்று விட்டார்களென்றுச் சொல்லமுடியாது. 2000 0பிராமணர் 1,20,000 பிராமணரல்லாத இந்துக்கள், 10,000 கிறிஸ்தவர்கள் 10,000 மகம்மதியர்கள் இருந்திருக்கிறார்கள்,

உற்பத்திச் சங்கங்களும் சாமான்களை வாங்கி விற்பனை செய்யும் சங்கங்களும் சமீபத்தில் அதிகமாக விர்த்தி யடைந்திருக்கின்றன. சென்ற வருஷத்தின் ஆரம்பத்தில் இவ்வகுப்பைச் சேர்ந்த 17 விவசாயச் சங்கங்களும், விவசாய வகுப்பல்லாத 38 சங்கங்களும் இருந்தன. வருஷக்கடைசியில் இச்சங்கங்களின் தொகை முறையே 31,ம் 39 மாக அதிகரித்துள்ளன. அதாவது சங்கங்கள் வருஷ ஆரம்பத்தில் இருந்



ததைவிட ஒன்றுக்கிரண்டாய் இருக்கின்றன, உணவுப் பொருள்களின் அதிகவிலையும், மிஸ்டர் ஹெமிங்வேயின் ஊக்கமுமே இத்தகைய வளர்ச்சிக்குக் காரணமென்னலாம். இவ்வகுப்பில் நடந்த வளர்ச்சி அதிகமேயாயினும் இன்னும் ஏராளமான வளர்ச்சிக்கு இடமிருக்கின்றது. மத்தியிலுள்ள தரகர்களை நீக்கும் விஷயத்தைமட்டும் கவனிப்பது போதாது. உணவுச்சாமான்களுக்கு ஆதாரமான விளைபொருள்களின் விளைவு அதிகமாவதற்கு மார்க்கங்கள் தேடவேண்டும். நூதன இரசாயன மார்க்கப்பிரகாரம் அதிக விளைவிற்கு பிரயத்தனங்கள் செய்ய வேண்டும். விவசாயிக்கு அவசியமான அறிவுப்புகட்டவேண்டும். விளைபொருள்களை அதிகப்படுத்தும் மார்க்கம் மட்டும் போதிப்பது போதாது. நல்ல சரக்காகவும் கலப்பில்லாமலும் கொடுக்கும்படிக்கும் அவனுக்குப் போதிக்கவேண்டும். சங்கங்களெல்லாம் இந்நோக்கத்தை வைத்துக்கொண்டு வேலை செய்யுமென்று எண்ணுகிறேன். இவ்விஷயத்தையெல்லாம் குறிப்பிடுவதின் நோக்கம்; தரகர்களை விலக்குவது மட்டுமே சங்கங்களின் நோக்கமென்று கருதப்பட்டுவருவதாகத் தெரிகிறது. சாமான்களில் கலப்பில்லாமல் கிடைக்கும்படித் செய்யவேண்டியதும் முக்கியமானதோர் விஷயம். உணவுப்பொருள் சாமான்களில் கல், மண், தூசு முதலியவைகள் கலப்பில்லாமல் கிடைக்கும்படிச் செய்யவேண்டியது பிரதானமான விஷயம்.

விவசாயக்கருவிகளையும் இயந்திரங்களையும் வாங்கி மெம்பர்களுக்கு வாடகைக்குக் கொடுப்பதற்கென்று நீடாமங்கலத்தில் ஏற்பட்டுள்ள சங்கம் பெரிதும் பாராட்டத்தக்கது. இத்தகைய சங்கங்கள் நம்மாகாணத்தில் அநேகமில்லையே யென்று நான் ஆச்சர்யப்படுகிறேன். இயந்திரங்களையும் விவசாயக்கருவிகளையும் மெம்பர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கும் ஏற்பாடு மிகவும் சிலாக்கியமானது. இதை அதிகமாக விர்த்தி செய்ய வேண்டும். விவசாயிக்கு அவசியமான கருவிகளை அவன் வாங்கமுடியாமற் போகின்றது இது விஷயத்திற்காக அவன் கடன் வாங்குகிறான். அவன் கடன் வாங்கவேண்டிய அவசியமும் சமயமும் இங்கேதான் ஏற்படுகிறது. அடுத்த வருட விவசாயகாலம் வருவதற்குள் சென்றவருஷம் வாங்கிய கருவிகளெல்லாம் பாழாய்ப்போய் விடுகின்றன. இதற்காகவென்றே வாடகைக்கு விவசாயக் கருவிகள் கொடுக்கும் ஏற்பாடு சிலாக்கியமானது. விவசாய இலாகாதாரும் மிஸ்டர் ஹெமிங்வேயின் கீழுள்ள கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டாரும் இவ்விஷயமாக வேண்டியப் பிரயத்தனங்களுடன் தகுந்த ஏற்பாடுகள் செய்வார்களென்று எண்ணுகிறேன்.

கூட்டுறவு இயக்கத்தின் மற்றொரு பகுதியில் சென்னை மாகாண கூட்டுறவினர்களுக்கு இன்னும் அதிகமாக பயிற்சிஏற்படவில்லை என்றுசொல்

லவேண்டியிருக்கின்றது கூட்டுறவு. கட்டடக்சங்கங்கள்விஷயம் வளர்ச்சியடையவில்லை. சென்னை மாகாணம் முழுவதிலும் இத்தகைய சங்கங்கள் ஆறுக்கு மேல் இல்லை. பெசவாடாவில்சமீபத்தில் ஒரேஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கோயமுத்தூரில் உள்ள ஒட்டர்கள் கட்டட சங்கம் திருப்திகரமாகவே வேலை செய்து வருவதாகத் தெரிகிறது. அச்சங்கம் முனிபல் சங்கத்திலிருந்து $6\frac{1}{4}$ வட்டிக்கு கடன் வாங்கி $7\frac{1}{2}$ வட்டிக்கு கடன் கொடுக்கிறது. திருப்பிச் செலுத்தவேண்டிய மாதசந்தா மாதம் 5 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வித சங்கங்களின் நிலைமை வேறிடங்களிலும் இன்னும் விருத்தியடையாமல் இருக்கின்றது. அரசாங்கத்தாரும் ஜனங்களும் இவ்விஷயத்தின் உண்மையையும் அவசியத்தையும் சரிவர இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை என்றே சொல்லவேண்டும். நம்மாகாண கவர்னர் லார்டு வில்லிங்டன் அவர்கள் அதிக ஊக்கமும் சிரத்தையும் பாராட்டி வருகிறார். இது போலவே பம்பாய் க்வர்னரும் வங்காள மாகாண கவர்னரும் ஊக்கம் காட்டி வருவதாகத் தெரிகிறது. மாகாண தலைவர்கள் இவ்விதமாக ஊக்கம் காட்டி வருவது நற்கால குறி யென்றே சொல்லவேண்டும். இம்முயற்சிகளால் நாம் பிரயோசனம் அடைய வேண்டுமானால் நாமும் ஊக்கங்காட்டி சிரத்தை எடுத்து கொள்ளவேண்டும். சொர்ப்ப வரும்படியுள்ளவர்களுக்கு உதவி செய்வதே, கூட்டுறவு சட்டத்தின் நோக்கம் என்று சொல்லப்படுகிறது. சொர்ப்ப வரும்படியுள்ளவர்கள் யார் என்று நிர்ணயம் செய்வதுதான் கஷ்டமான காரியம். மாதம் ரூ 100 வரும்படிக்கு உள்பட்டு உள்ள மத்திய நிலையிலுள்ளவர்களுக்கு இவ்வித உதவி அத்தியாவசியமாய் இருக்கின்றது. வீட்டு வாடகை தினந்தோறும் விஷம்போல ஏறிக்கொண்டு வருகிறது. இத்தகையவர்களுக்கு கூட்டுறவு கட்டடசங்கங்கள் உதவி செய்ய முன் வரவேண்டும். வீடுகட்ட நிலங்கள் கவர்ன்மெண்டார் வாங்கி உபகரிக்கவேண்டும். பட்டணங்களுக்கு சுற்றுபக்கங்களிலுள்ள கிராமங்களுக்கு போக்கு வரவு சாதனங்கள் அதிகப்படுத்தவேண்டும். சென்னை டிராம்வே கம்பெனியார் டிராம்வே கூலி விகிதத்தை அதிகபடுத்தியிருக்கிறார்களேயொழிய துரிதமாக பிரயாணஞ்செய்வதற்கு அவசியமான அளவு வண்டிகளை அதிகப்படுத்த வில்லையென்று இருக்கும் பொதுஜன அபிப்பிராயம் உலவுவது கம்பெனியாருக்குத்தெரியாது போலும்.

தாழ்ந்த வகுப்பைச்சேர்ந்த ஏழைகளின் விஷயம் மிகவும் பரிதபிக்கத்தக்கது. அவர்களுக்கு கல்வி கிடையாது. சுகாதாரம் இன்னதெனபதே அவர்கள் அறியமாட்டார்கள். ஆர்கள். வாசம் செய்யும் இடங்களோ வியாதிகள் உற்பத்தி ஸ்தானங்கள் என்று சொல்லலாம். அவர்களிடம் பிறக்கும் வியாதி இதரர்களுக்கு பரவா



மலும் இதரர்களுக்கு தீங்கு உண்டாக்காமலும் பாதுகாக்கவேண்டியது அவசியம். இவ்விஷயத்தை கவர்ண்மெண்டாரும் ஜனங்களும்கவனிக்க வேண்டியது முக்கியம்.

மத்திய லகுப்பினர்கள் வாசம்செய்யும் வீடுகள் நெருக்கமாகவும் காற்றோட்டம் இல்லாமல் சுகாதாரவிதிகளுக்கு விரோதமாய் இருந்தபோதிலும் தாழ்ந்த வகுப்பினர்களுடைய வாசஸ்தலத்தைபோல் அவ்வளவு கெடுதலாக இல்லை. மத்திய வகுப்பினர்களுடைய நிலமை இதரர்களுக்கு அபாயத்தை உண்டாக்கக் கூடியதில்லையாயினும் நாளடைவில் இவர்களும் அதிக கஷ்டங்களுக்கு உள்பட்டு வருகிறார்கள். இவர்களுக்கு கூட்டுறவு கட்டட சங்கங்கள் ஏற்படவேண்டியது மிகவும் அவசரம். சொற்ப வட்டிக்கு பணம் அகப்படுவது தான் மிகவும் கஷ்டமான விஷயம். கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் உதவி செய்ய முன் வருவார்கள் என்று நம்புகிறேன். கவர்ன்மெண்டார் உதவி செய்வதாக தெரியுமானால்கட்டடச் சங்கங்கள் தினம்தோரும் அதிகப்பட்டுக்கொண்டே வரும்.

நடந்த வேலையைப் பற்றி இதுவரைக்கும் சொல்லிவந்தேன். இனி செய்யவேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி சில யோஜனைகளைக் குறிப்பிடுகிறேன்.

லார்ட்ஸ்கள் (பார்லிமெண்டு பிரபுக்கள்) சபையில் சமீபத்தில் பேசநேர்ந்தபோது இந்தியர்களின் புத்தி சாதுர்யத்தையும் சக்தியையும் சிலாகித்து கர்ஸான் பிரபு பேசினார். இதை படித்தபோது கூட்டுறவு இயக்க சம்பந்தமாக இந்தியர்கள்ஏராளமாக வேலைசெய்யக் கூடுமென்று எனக்கு உதித்தது. ரசாயன அபிவிருத்தியில் நூதனவிஷயங்களைக் கண்டுபிடித்துள்ள (J. C. Bose,) ஜே. ஸி. போஸ்அவர்களை மெச்சி லண்டன் டைம்ஸ் பத்திரிகையும் மிஸ்டர் பால்போரும் சொல்லிவிருக்கிறார்கள். இதனாலேயே இந்தியர்கள் செய்து காட்டக்கூடிய சக்தியின் அளவு அபரிமிதமாய் இருக்கிறது என்று தெரிகிறதல்லவா?

கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டு வேலை செய்யும் நமக்கு இது ஒரு போதனுபாடமாக இருக்கவேண்டும். எல்லோரும் ஒன்று கூடி வேலை செய்யவேண்டுமென்று போதிக்கவேண்டியது கூட்டுறவின் நோக்கமாக இருக்கவேண்டும். சங்கத்தின் மெம்பர்களின் முன்னேற்றத்திற்காக மட்டும் பாடுபடுவது போதாது. கூட்டுறவினால் இது வரையில் பிரயோசனமடையாதவர்களுக்கும், கூட்டுறவில் சம்பந்தப்படாதவர்களுக்கும் உதவி செய்யவும் அவர்களுக்குள் பிரசாரவேலை செய்யவும் கூட்டுறவு இயக்கம் முன்வரவேண்டும். கூட்டுறவு சம்பந்தமான லேவாதேவி விஷயங்களை கவனிப்பதுடன், பரோபகாரமும் கல்வி போதனையும் கூட்டுறவினர்கள் கவனிக்கவேண்டியது அவசியமாகும்.

ஆசாரச் சீர்திருத்த விஷயங்கள், மதவிஷயங்கள் முதலியவைகளைப் பற்றிய தற்கால எண்ணங்களைப் பரிசோதனை செய்வோமானால், ஜனங்களின் நிலைமையைச் சீர்படுத்தும் விஷயத்தில் கூட்டுறவின் சார்பாகவே உலகம் மாறுபட்டு வருகிறதென்பதை நீங்கள் எளிதில் ணரலாம். "லீக் ஆப்நேஷன்" என்னும் இன உரிமைச்சங்கத்திற்கு ஆதாரமாக நிற்கும் கொள்கை என்ன? கூட்டுறவே யொழிய வேறல்ல. கூட்டுறவு இயக்கத்தின் உண்மையான கொள்கைகளெல்லாம்வேலை செய்துவருதை நீங்கள்பார்க்கலாம். பிரதானமான தேசத்தார்கள் தங்களுடைய சொந்தப்பாது காப்பிற்காக ஒன்று பட உடன்பட்டிருக்கிறார்கள். தங்கள் ஆளுகைக்குட்பட்டிருக்கும் ஜனங்களின் நிலைமைகளைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்து வருகிறார்கள். பலமற்ற தேசத்தார்களை, பேராசை பிடித்த பலத்த தேசத்தார்களின் கொடுமைகளினின்றும் பாதுகாக்க இன உரிமைச் சங்கத்தார் ஒற்றுழைக்கிறார்கள். உலகத்திலுள்ள சகல தேசத்தாருக்குள்ளும் சமாதானமும் பரஸ்பர சிநேகமும் ஏற்பட வேண்டிய அவசியத்தைப்பற்றி எல்லா தேசத்தாரும் தங்களுடைய கவனங்களை ஒன்றுபடுத்தமுயன்று வருகிறார்கள். இராணுவக்கொடுமைகள் ஜனங்களி அணுகாவண்ணம் தடுத்து, ஜனங்கள் அதிக செல்வவான்களாகவும் சந்துஷ்டர்களாகவும் ஆகும்படியான சட்டதிட்டங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். இவ்வொழுக்கம் இந்தியாவைவிட வேறெவ்விடத்திலும் அதிகமாக தேவையில்லை. இந்த மகா யுத்தத்தில் ஐரோப்பிய நாடுகள் துன்பப்பட்ட அளவு நாம் துன்பப் படவில்லையென்பது உண்மையே. ஆனால் அத்தகைய துன்பம் நமது இந்தியாவுக்கு அணுகா வண்ணம் நாம் முன் ஜாக்கிரதையாயிருந்து நம்முடைய நிலைமைகளைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டுமென்பது, ஐரோப்பிய நாடுகளின் தற்கால நிலைமையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடமாக இருக்கவேண்டும். எல்லாமதங்களினுடையவும் சங்கமொன்று ஸ்தாபனஞ்செய்யவும் ஏற்பாடு நடந்துவருகிறதாக பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். இனஉரிமைச் சங்கத்தையும் மத உடன் படிக்கையையும் நான் குறிப்பிட்டது எதற்காகவென்றால் கூட்டுறவே இனி வருங்காலங்களில் நம்முடைய வாழ்விற்கும் அன்னியர்களுடைய வாழ்விற்கும் ஆதாரமாயிருக்கும் என்பதை வற்புறுத்துவதற்காகத்தான். இப்பொழுதுஅங்கங்கு வேலைசெய்யும்சக்திகளையொட்டி இங்கு கூடியிருக்கும் கூட்டுறவினர்களை, தங்கள் தங்களுடைய காலதேச வர்த்தமானங்களுக்குத்தக்கபடி சந்தர்ப்பங்களை நழுவவிடாமல் உலகப்போக்கில் ஒற்றுழைத்து கூட்டுறவு விஷயங்களை சுளுவாக்க முயலும்படி சொல்லலாமல்லவா? கூட்டுறவு ஒழுக்கங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக ஏற்பட்டுள்ள ஒவ்வொரு சங்கமும் இம்மாதிரி ஏற்பாடுகளில் நடந்துகொள்ள ஆரம்பித்தால் காரியத்தில் ஜயமுண்டாவதோடு உலகம்



தைத்தற்காலத்தைக் காட்டிலும் மேன்மையாகவும் சந்துஷ்டியாகவும் ஆகிவிடக்கூடும்.

கூட்டுறவானது அதன் முதல்தரமான ஏற்பாட்டில், நான் குறித்த அம்சங்களை உடைத்தாயிருக்கவேண்டும். கூட்டுறவைக் கெடுதலான வழியில் அனுஷ்டிக்காதபடி கூட்டுறவினர்களை எச்சரிக்கவேண்டியது அவசியம். கோவாபரேஷனுக்கு பிரகிருதிகுணம் தலைமையாகவும், புருஷகுணம் வழிகாட்டியாகவும் இருக்கமுடியும். இதர ஜனங்களின் வாழ்நாட்களைக்கெடுக்கவும், அன்னியர்களின் சொத்தை அபகரிக்கவும், அயலாருடைய சமாதனத்தையும் சந்துஷ்டியையும் கலங்கும்படி செய்யவும் கூட்டுறவு முறைகளை உபயோகிக்காமலிருப்பது அவசியம். ஜர்மனிக்கும் ஆஸ்டிரியாவுக்கும் இடையே இம்மாதிரிக் கூட்டுறவு இருந்ததினால்தான் இம்மகாயுத்தம் ஏற்பட்டது. சிலதாழ்ந்த மாதிரியான கூட்டுறவினால் தொழிலில் அசாத்தியமான தடை ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளிகளின் வாழ்வை உயர்த்த("Trade Unions")வியாபார யூனியன்கள் விசேஷமாய்ப் பாடுபட்டு வருகின்றனவென்று இங்கிலாந்தின் பிரதானமந்திரியார் சமீபத்தில் சொல்லியிருக்கிறார். அத்தேசத்தில் கூட்டுறவு முதல்தரமானவேலை செய்துகொண்டிருக்கிறது. உழைப்பாளிகளுள்ளும் முதலாளிகளுள்ளும் கூட்டுறவு கெடுதலாக ஏற்பட்டு தேசக்ஷேமத்திற்கே குறைவாகவும் தேசசக்திக்கே க்ஷயமாகவும் விஷயங்கள்நடந்துகொண்ட உதாரணங்களும் இருந்திருக்கின்றன. தற்காலம் இந்தியாவில் வகுப்புவாரிகளின் க்ஷேமத்தை விருத்திசெய்வதற்காக யூனியன்கள் ஏற்படுகின்றன. உண்மையான இந்தியர் ஒவ்வொருவரும் இவ்வியக்கத்தை நன்கு கொண்டாடவேண்டும். ஆனால் இதரக் கூட்டத்தினரையாவது, தொழிலாளிகளையாவது வகுப்பினரையாவது, அல்லது வேறுமாதிரியான பிரயத்தனங்களையாவது இம்சைசெய்யும் அல்லது கெடுதலை உண்டாக்கும் நோக்கத்தை அவர்கள் கொள்ளவே கூடாது. ஆகையால் நான் கூட்டுறவினர்களுக்குச் செய்துகொள்ளும் மனு என்னவென்றால், தங்களுக்குள் சமத்வ புத்தியையும் சகோதரத்வத்தையும் அன்பையும் தங்கள் சக்திக்கு இயன்றவரையில் விருத்தி செய்து கொடுமையையும் பிறருக்கு கஷ்டம் கொடுத்தலையும் விலக்கவேண்டும் என்பதே.

தற்காலம் மிக்கஅவசரத்தேவை யென்னவென்றால், எங்கும் சௌகரியமான வீடுகள் ஏற்படுத்திக்கொடுப்பதே. இஃது தொழில் வகுப்பினர்களுக்குமிகவும் அவசியம். அந்த ஸ்திலுள்ளவர்கள் இத்தேவையின் அவசரத்தைப் போதுமானவரையில் உணரவில்லை. இங்கிலாந்திலும் ஐரோப்பாகண்டத்திலும் இவ்விஷயத்தில் மிகக்கவனம் செலுத்தப்படுகிறது. வீடுகட்டும் விஷயத்திற்கு இவ்வளவு முக்கிய கவனம் கொடுப்பதற்குக் காரணங்கள் அநேகமிருக்கின்றன.

ஒரு கூட்டத்தினர் விருத்தியாவது என்பது, தேசத்தைச்சார்ந்த பல கூட்டத்தாருக்குள்ளும் ஒரு உறவு புத்தியிருந்தாலொழிய முடியாது. நல்ல ஸ்திதியிலிருக்கும் சிலர்களுடைய சுகங்களையாவது, சௌகரியங்களையாவது, சௌக்கியமான சுற்றுப்புறங்களையாவது பார்த்துவிட்டு ஒரு தேசத்தாரின் முன்னேற்றத்தை அளவிடக்கூடாது. செல்வமும் சௌகரியங்களும் ஒருபுறமிருந்து, தரித்திரமும், நோயும், அசிங்கமும் இன்னொரு புறமிமந்தால் ஒரு நிலைமை மற்றதைப்பாதிக்கத்தான் செய்யும் என்பதை முட்டாள் கூடத் தெரிந்து கொள்ளக்கூடும். நமக்கு வியாதி எங்கிருந்து வருகிறது? அதன் பிறப்பிடம் நமது சுற்றுப்புறமே. அங்கிருந்துதான் நமதுநன்கு அமைக்கப்பட்ட வீடுகளுக்குப் பரவுகிறது. நாம் நியமிக்கும் வேலைக்காரன் தன் வீட்டிலிருந்து நம்முடையவீட்டிற்கு படித்த டாக்டர்களால் பேசப்படும் "பாஸிலி" என்னும் புழுக்களைக் கொண்டுவருகிறான். ஆக நாம் நம் சௌகரியத்தையே நிஜமாகக் கவனித்து கொள்ளைநோய், வியாதிகள் முதலியவைகளுக்குத் தப்பவிரும்பினால் ஏழைகளுக்கு நல்லவீடுகள் அமைத்துக் கொடுப்பது நமதுகடமை. நமக்கு அதிகவீடுகளும் தேவை. நல்லவீடுகளும் தேவை. நான்முன் ஒரு சமயம் சொன்னபடி இவ்விஷயங்களில் நம்மை நாடச்செய்வது உபகார புத்தியேதான் என்பதன்று. தாழ்ந்த வகுப்பினர்களின் நிலைமையைநாம் கவனிக்கும்படி செய்ய ராஜாங்கமும் அதிலுள்ள பணக்காரர்களும் இவ்வேலையில் ஒற்றுழைக்கவேண்டும். இது என் மனதிற்குகந்த எண்ணம் என்று சொல்லலாம். ஆனால் வருஷம் ஆகஆக இவ்விஷயத்தைப்பற்றி ஜனங்கள் எவ்வளவு அறிந்துகொள்ளாமலிருலிக்கிறார்கள் என்பது தெரிய வரும். ஏழைகளுக்கு நல்ல வீடுகள் வேண்டுமென்று மன்றாடிக்கொண்டிருக்கிறேன். ஏனென்றால், நான் அவர்களுடைய வீடுகளைப் போய் நேரில் பார்த்து அவர்களுடைய வாழ்க்கையையும் தெரிந்து கொண்டிருக்கிறேன். இச்சனங்கள் அனுபவிக்கும் கஷ்டத்தையும் அசௌகரியங்களையும் கவனித்தால் கல்மனமும் கறையும். இந்த நிமிஷத்தில் சென்னை நகரானது மரணவிகிதத்தில் முதன்மையாயுள்ளது என்னும் பெயரைப் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம் நமதுகவனக் குறைவே என்றுநான் தயங்காமல் சொல்லுவேன். எனது நண்பர் ஒருவர் இவ்வார்த்தைக்கெல்லாம் அர்த்தம் வரிகொடுப்போரின் பணத்தை அதிகமாக கவர்ன்மெண்டார் செலவழிக்கவேண்டியதுதானேஎன்றார். அவர் சொன்னமாதிரியிலிருந்து இது அனாவசியமான தர்மம் என்று அர்த்தம் கொள்ளும்படியாயிருந்தது. ஏழைகளின் நிலைமையை நான் கவனித்ததுபோல் அவருக்கு கவனிக்க சந்தர்ப்பம் நேரிடவில்லை. பணத்தினால் பெறக்கூடிய சகல போகபாக்கியங்களையும் தனிமையாயிருந்து அனுபவித்துக்கொண்டிருக்கையில் தன்னைச் சுற்றிலும் ஏழைகள் அனுபவிக்கும் கஷ்டங்களையும், டாக்டரிடம் தினந்தோறும் போகும்படி ஏற்படுகிற அவசியங்களையும் கவனிக்கிறதில்லை. அவருக்கு நான் ஒரு யோஜனை சொல்லுவேன். அவர் இருபது வருஷகாலமாக தனக்கும் தன் குடும்பத்திற்குமாகச் செய்திருக்கிற டாக்டர் செலவுகளைக் கணக்கிடட்டும். வருஷவாரியில் எவ்வளவு ஆகிறது என்று பார்க்கட்டும். அத்தொகையின் ஒரு பாகத்தை தன்னுடைய வேலைக்காரர்கள் நல்ல ஸ்தலத்தில் வசிக்கட்டுமென்று ஒரு இனாமாக என்னிடம் கொடுக்கட்டும். வருஷக்கடைசியில் குறைந்த பக்ஷம் பாக்கித்தொகையின் பாதியிலிருந்து தன் குழந்தைகளுக்கு நகை செய்வதற்காகப் பணம் மிகுத்திருப்பார் என்பதில் எனக்கு சந்தேகமே



யில்லை. நான் விளையாட்டிற்காகச் சொல்லவில்லை. நல்ல ஆலோசனையுடன்தான் சொல்லுகிறேன். ஒருவருக்காக நான் சொன்னது. நாட்டிற்கும் நன்கு பொருத்தமாகும். ஏழைகளுக்கு உபகரிப்பதற்காக ஏற்பட்ட கட்டடச்சங்கங்களுச்கு ராஜாங்கம் எளிதானகடன்கள் கொடுத்து இங்கிலாந்திலுள்ள பப்ளிஸிடி சொஸைடிகளைப்போல் உபகரித்தால் தங்குமிடங்கள், ஆஸ்பத்திரிகள், மருந்துகள்முதலியவைகளுக்காக ஏற்பட்டு வரும் செலவுகள் மட்டுப்படுவது நன்கு புலப்படும் என்று நிச்சயமாய்ச் சொல்லுவேன். ராஜாங்கத்தாரும் தனிகர்களும் பாங்கிகளில்போட்டுக்கொண்டிருக்கிற தங்களுடைய பணத்தின் பெரும் பாகத்தை எடுத்து வைத்து ஏழைகளுக்கு நல்ல வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக உதவ வேண்டும்.

இம்மாதிரிக் கட்டடச் சங்கங்களின் நோக்கங்களுள் ஒன்று, போட்ட பணத்திற்குத் தகுந்த ஊதியங்கொடுத்தலே. அதன் இன்னொரு நோக்கம் தன்னிடம் சேர்ந்த ஒவ்வொருவரையும் சுவய கௌரவஸ்தர்களாக ஆக்குதல். மூன்றாவது, ஜனங்கள் தங்களுக்கிருக்கும் சுவயசக்திகளை அறிந்து தாங்களே தங்களுக்கு உதவிசெய்துகொள்ளும்படி போதித்து சௌகரியப்படும் இடங்களிலெல்லாம் நல்ல வீடுகளையும் இடங்களையும் பெறும்படி செய்தல். நாங்காவது, ஏழைகளின் கஷ்டதிசையைத் தன்னுடைய சௌகரியமாக வைத்துக்கொண்டு அப்போதப்போது வாடகையை உயர்த்தும் தனிகர்களுக்கு இடைஞ்சல் செய்து "சம்பாதிக்காத விருத்தியம்சப்பொருள்" என்று சொல்லப்படும் நிதியிலிருந்து தாங்கள் பயனடைதல். சுருங்கச் சொல்லுமிடத்து அச்சங்கங்களின் நோக்கம் ஜனங்களை விருத்திக்குக் கொண்டுவரப் பிரியப்பட்டுழைக்கும் தேசாபிமானிபோல நடத்தலே. நாடெங்கும் இருக்கிற கூட்டுறவினர்களையும் முனிசிபாலிடி, லோகல்போர்டு இவைகளின் மெம்பர்களையும் என்னுடைய இவ்வார்த்தைகளை நினைவில் வைக்கும்படி கேட்டிக்கொள்ளுகிறேன். வருகிற வருஷத்தில் ஒவ்வொரு முனிசிபாலிடியின் முதல் நோக்கம் ஏழைகளின் குடியிருப்பு நிலைமைகளைச் சீர்திருத்தும்படியான யுக்திகளைத் தேடுவதாயிருக்குமென்று நம்புகிறேன்.

இன்னொரு விஷயமாகச் சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். அது 'கைத்தொழில்கமிஷ'னுடைய ஆலோசனையிலிருந்து இந்தியர்கள் கவனிக்க வேண்டியதே. அக்கமிஷனின் சிபார்சு முற்றிலும் அமுலுக்கு வந்தால், கைதொழில், பொருட்பாங்கு, இவ்விஷயங்களில் இதுவரையில் சாத்தியம் என்று நினைக்கமுடியாத அவ்வளவு முன்னேற்றம் ஏற்படும். கல்கத்தாவும், பம்பாயும், அச்சிபார்சைப் பூர்த்தியாக அனுபவிக்கமுடியும். ஏனென்றால், அங்கேயுள்ள குடிகளுக்கு ஏராளமான நாணயமும், பொருளும், வேலைத்திறப்பழக்கமும் இருக்கின்றன. சென்னையிலுள்ள நமக்கோ அத்தகைய குணங்களில் குறைவுதானென்று வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. இவ்விராஜதானியில் கைத்தொழில் முன்னேற்றத்தைப்பற்றி ஏற்பட்ட சில சிலாக்கியமான ஆவல்கள் நிஷ்பிரயோஜனமாயின. போதுமான பொருளும் போதுமான வேலைப் பழக்கமும் இல்லாமையே அதற்குக் காரணம். ராஜாங்கத்தாரின் ஒத்தாசையும் அவர்கள் கொடுக்கத் தயாராகவிருக்கும் திரவிய சகாயமும் சென்னையில் சரிவர உபயோகிக்கப்படுவதற்கு தாராளமான கூட்டுறவு எண்ணம் நம்மிடம் மேலிட்டிருக்கவேண்டும். நமக்குப் பொருள் வருமிடங்களைச் சரி

வர ஆளுவதற்கும் நமது சம்பாத்தியத்தை பொதுவான வியாபாரத்தில் போட்டுவைக்கவும் இயக்கத்தின் தலைவர்களாக, யோக்கியர்களாகவும், சக்திவந்தர்களாகவும், தீவிர பக்தர்களுமானவர்களை நியமிக்கவும் நாம் முயலவேண்டும். நம்மிடம் உண்மையான கூட்டுறவு ஏற்பட்டால் சென்னையில் பெரிய கைத்தொழில்கள் ஏற்படுவதுசாத்தியம். பம்பாயிலாவது கல்கத்தாவிலாவது ஜனங்கள் தூங்கியெழுந்தவுடன் பணக்காரர்களாய் விடுகிறார்களென்று நான் நம்பவில்லை. பணக்காரராவதற்கு ஒரு கூட்டுறவு இருந்திருக்கவேண்டும். வருங்காலத்தில் தங்களுக்கும் தங்கள் நாட்டிற்கும் சிலாக்கியமான ஏற்பாடுகளைச் செய்வதற்காக, தற்காலசந்தோஷங்களைத் தள்ளிவிடும்படி தீர்மானம் இருந்திருக்கவேண்டும். இதுதான் சென்னைக்குத் தேவை. கமிஷனின் சிபார்சை அமுலுக்குக் கொண்டுவருமுன் கூட்டுறவினர்கள் இவ்விஷயமான ஜனங்களின் மன ஊக்கத்தை கிளப்பிவிடவேண்டும். தங்கள் பிராந்தியங்களிலுள்ள தனிகர்களை அவர்களுடைய மிகுதிப் பணத்தை இவ்விஷயங்களில் ஈடுபடுத்தும்படி செய்து கைத்தொழில் வியாபாரம் இவைகளின் விஷயமாய் கவர்ன்மெண்டார் கொடுக்கும் உபகாரத்தைப் பெறும்படி தூண்டலாம். கூட்டுறவினர்கள் இதற்காகவாவது நமது ஸ்திரீ ஜனத்தொகையின் பொறுப்பைஅவர்களுக்கு போதிக்கவேண்டியது. அவர்களுக்குக் கல்வியினால் சுகாதார விஷயங்கள் ஒருவாறு விளங்கி யிருக்கின்றது. ஆனால் வெகுநாளைய பழக்க வாசனையாகிய ஆபரணத்தேவை அவர்கள் மனதை விட்டு ஒழியவில்லை. இவ்விராஜதானியில் கைத்தொழிலுக்குப் பொருள் கிடைக்காததற்கு விசேஷ காரணம் நகைகள் வாங்கப்படுவதில் பணம் ஈடுபடுவதே. கைத்தொழிலின் க்ஷேம ஆரம்பத்தில் ஸ்திரீகள் உண்மையாய் உதவிபுரிவார்களானால் சென்னையில் வெகுவாக வேலை செய்யலாம்.

கூட்டுறவினர்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய வேலையின் ஒரு பிரிவு என்னவென்றால், திறமையும் படிப்பும்வாய்ந்த ஸ்திரீகளை நியமித்துநகை நாணயங்களில் பணத்தைச் செலவழிக்கப்பிரியப்படும் சகோதரிகளின் அறிவீனத்தை அகற்றுவதே. அவர்களைக்கொண்டு நம்நாடு கைத்தொழில் விருத்தியானால் சீக்கிரம் முன்னுக்கு வருவதற்கு ஆதாரமாயிருக்கும். திரவியம்கிடைக்காமல் தவிக்கும்பொழுது அவசியமானால் ஸ்திரீகள் தங்களுக்குள் கோவாபரேடிவ் சொஸைடிகளை ஏற்படுத்தி தங்களுடைய நகை விற்பனையினால் மூலதன முண்டாக்கி அதைக்கொண்டு மனிதர்கள் தொழில்களைக் கைக்கொள்ளும்படி பொருளுதவி செய்யலாம். ஸ்திரீகளுக்கு அறிவூட்ட கூட்டுறவினர்களுக்கு நல்ல சந்தர்ப்பமிருக்கிறது.

பள்ளிக்கூடங்களிலுள்ள நமதுசிறுவர் சிறுமிகளுக்கு உண்மையான கூட்டுறவுப் புத்தியை உண்டாக்கவேண்டும். தற்காலம் மாணவர்களுள் ஒருவாறான ஒற்றுமை ஏற்பட்டிருந்தாலும் உண்மையான பரஸ்பரக்கூட்டுறவும் நம்பிக்கையும் உண்டாக்கும்படி செய்யப்போதுமானதன்று. கூட்டுறவின் நன்மைகளும் பயன்களும் பள்ளிக்கூடங்களிலிலும் காலேஜுகளிலும் கற்பிக்கப்பட வேண்டும்.

---


# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் XI] 1920ஆம் ஜனவரிமீ [இலக்கம் 7


## பத்திராதிபரின் குறிப்புகள்.

சென்னை மாகாண எட்டாவது கோவாபரேடிவ் கான்பரன்ஸ்

(சென்னை மாகாண எட்டாவது கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.)

டிஸம்பர் மாதம் 29, 30 தேதிகளில் கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் கூடிற்று. அக்கான்பரன்ஸ் எல்லாவிதத்திலும் மிகவும் திருப்திகரமானதாகவே யிருந்தது. இராஜதானியின் பல பாகங்களிலிருந்தும் 300 டெலிகேட்டுகள் வரைக்கும் வந்திருந்தார்கள். இவ்வளவு டெலிகேட்டுகள் இதற்குமுன் எந்த கான்பரன்ஸிலும் வந்ததில்லை. கான்பரன்ஸை பார்ப்பதற்கு வேறு பல கனவான்களும் வந்திருந்தார்கள். அவர்களுள் சிலர்:— இலங்கையிலிருந்து வந்திருந்த மிஸ்டர் விக்ரமரத்னா, பூனாவிலிருந்து வந்திருந்த புரொபெஸர் காளே, கொச்சின், புதுக்கோட்டை சமஸ்தானங்களின் கோவாபரேடிவ் ரிஜிஸ்தரார்களும் வந்திருந்தார்கள். கான்பரன்ஸில் வாசிக்கப்பட்ட உபந்நியாசங்கள் மிகவும் பிரயோஜனமுள்ளவைகளாகவும், அநேக விஷயங்களில் போதனைகள் செய்யக்கூடியவைகளாகவும் இருந்தன. கான்பரன்ஸில் செய்யப்பட்ட உபந்நியாசங்கள் மிகவும் சுயேச்சையாகவும், அனுபவத்தை ஒட்டியும் இருந்தன.

கான்பரன்ஸில் இவ்வளவு சிறப்பாக நடைபெற்றதற்கும், கான்பரன்ஸின் நடவடிக்கைகள் இவ்வளவு திருப்திகரமாக முடிவுபெற்றதற்கும், கான்பரன்ஸின் வரவேற்புக் கமிட்டியாரும், புரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன் சபையாரும், அக்கிராசனம் வகித்த ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர் அவர்களும் மெச்சத்தகுந்தவை.

*
* *

**வரவேற்பு உபந்நியாசம்.**

வரவேற்புக் கமிட்டிக்காக டெலிகேட்டுகளை வரவேற்ற மிஸ்டர் வி. என். கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்களுடைய உபந்நியாசம் அனுபவத்தை யொட்டி பிரத்தியட்ச வேலைகளைப்பற்றி யிருந்தது. உபந்நியாசத்தில் ஊக்கமும், சொற்சுவையும் ஆதிமுதல் அந்தம்வரைக்கும் குறையாமல் இருந்தது. கான்பரன்ஸின் நடவடிக்கைகள் நஷ்டத்துடன் நடைபெறுகின்றனவென்றும், நஷ்டத்தை ஈடுசெய்ய பலமான பண ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்றும் அவர் தம்முடைய உபந்நியாசத்தில் குறிப்பிட்டுக் காட்டினார். ஆந்திர பொரொவின்ஷியல் யூனியன் ஒன்று தனியாக ஏற்பட்டிருப்பதை முன்னிட்டு இனி கான்பரன்ஸ் நடவடிக்கைகள் பொதுவிஷயங்கள் சம்பந்தமாகவும், கவர்ன்மெண்டாருடன் நடந்துகொள்ளவேண்டிய மாதிரியைப் பற்றியும், மாகாண சம்பந்தமான விஷயங்களைப் பற்றியுமே மாகாண கான்பரன்ஸில் பேசவேண்டுமெனறும், அந்தந்தப் பிரதேச சம்பந்தமான விஷயங்களை அங்கங்கேயுள்ள கான்பரன்ஸுகளுக்கென்று விட்டுவிடவேண்டுமென்றும் சொன்னார். உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவினர்களுடைய எல்லா இந்தியா கான்பரன்ஸ் ஒன்று கூட்டப்படவேண்டுமென்றும், இவ்விஷயத்தில் இதர மாகாணங்களும் சேருமென்றும் சொன்னார். இத்தகையக் கான்பரன்ஸின் அவசியம் தினந்தோறும் அதிகப்பட்டு வருகிறதென்றும் இந்த யோசனையை பம்பாய் முதலிய இதர மாகாணத்தார்களும் ஏற்றுக் கொள்ளுவார்களென்றும் சொன்னார். கூட்டுறவு இயக்கம் பெரும்பான்மையும் அதிகாரிகள் கைவசம் இருக்கிறதென்றும், இத்தேசத்தின் உத்தியோகப் பற்றில்லாத கூட்டுறவினர்கள் பலமான முயற்சி இல்லாவிட்டால் இயக்கத்தை சுயமாக அமைப்பது கஷ்டமாக இருக்குமென்றும் சொன்னார். இயக்கம் அதிகாரிகள்வசம் அதிகமாகக் கைவசப்பட்டு வருவதை அதிகமாகக் கண்டித்து ஸ்ரீமான் கிருஷ்ணசுவாமி அய்யரவர்கள் சொன்னார். இவ்விஷய சம்பந்தமாக ஸ்ரீமான் கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள் தம் உபந்நியாசத்தில் பின்வருமாறுச் சொல்லுகிறார். "அதிகாரிகள் கூறும் காரணங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எல்லோருக்கும் தெரிந்தவைகளே. உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவினர்கள் கிடைக்கும் விஷயத்தில் அவர்களிடம் இயக்கத்தை ஒப்புவிப்பதற்கு அவர்களுக்கு இஷ்டந்தான். ஆனால் உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவினர்கள்தான் கிடைக்கவில்லை. இது காரணம்பற்றி உத்தியோகஸ்தர்களை அதிகமாகச்செய்வது இவர்களுக்கு மிகவும் எளிதாக இருக்கின்றது. யாராவது ஒருவர் வாய் திறந்துவிட்டால்போதும் கவர்ன்மெண்டு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களும், இதர உத்தியோகஸ்தர்களும் நூற்றுக்கணக்காக நியமிக்கப்படுவார்கள். அப்படிச் செய்வது பொதுஜன அபிப்பிராயமா அல்லது பொதுஜன சம்மதமா வென்றுக் கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் அவர்களுக்



குக் கிடையாது. இயக்கத்தைக் கூடுமான அளவில் செவ்வனவே நடத்தவேண்டுமென்பது மட்டும் அவர்கள் நோக்கமேயொழிய இயக்கம் எவ்வாறு முன்னடைகிறது என்பதைக் கவனிக்கவேண்டியது அவர்களுடைய அவசியமல்லவா. ஸ்ரீமான் கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள் கூறியிருப்பதை முற்றும் நாம் அங்கீகரிக்கிறோம். இவ்விஷயத்தை விஸ்தாரமாக பின்னர் எழுதவும் உத்தேசித்திருக்கிறோம். சங்கங்களின் காரியதரிசிகளையும் பஞ்சாயத்து மெம்பர்களையும் பழக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி ஸ்ரீமான் கிருஷ்ணசுவாமி ஐயரவர் சொன்னார். சென்டிரல் பாங்குகளுக்கும், சூபர்வைஸிங் யூனியன்களுக்கும் இருக்கவேண்டிய சம்பந்தமும், முறைமையும், தானாகவே தீர்மானமாகவேண்டுமென்றும் சொன்னார்.

*
* *

**அக்கிராசனர் உபந்நியாசம்**

மிஸ்டர் சேஷகிரி ஐயரவர்களுடைய உபந்நியாசத்தில் கூட்டுறவினர்களுடைய பிரத்தியட்சக் கஷ்டங்களும், கூட்டுறவு இயக்கசம்பந்தமான விஷயங்களும் சொல்லப்பட்டில்லை யென்றாலும், உபந்நியாசத்தில் அநேக அரியவிஷயங்கள்ஊக்கத்தைக் கொடுக்கக்கூடியவைகளாகவும், அறிவூட்டக்கூடியவைகளாகவும் இருந்தன. சென்னை ஜனசார சீர்திருத்தச் சங்கத்தின் அக்கிராசனராகிய ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயரவர்கள் கிராமச்சங்கங்களில் அநேக தொழிலாளர்களும், பஞ்சமர்களும் இல்லையென்று வருத்தப்பட்டார். இவ்வகுப்பினர்களுக்காகவென்று இன்னும் அதிக சங்கங்கள் பட்டணங்களிலும் கிராமங்களிலும் எற்பட்டிலலையென்றும் சொன்னார். கூட்டுறவு முறையில் வியாபாரத்தைப் பரவச்செய்துமத்தியிலுள்ள தரகர்களை ஒழிப்பதுமட்டும் போதாது. வியாதிகள் அணுகாமல் காத்து வைத்தியர்களுக்குப் பணம் செலவழிக்காமல் இருக்கவேண்டுமானால் உணவுப்பொருள்களின் சுத்தமும், பரிசுத்தமும் கவனிக்கப்படவேண்டும். கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டிய விஷயத்தை வற்புறுத்திச் சொன்னார். இங்கிலாந்து தேசத்திலுள்ள பப்ளிக் யூடிலிடி சங்கங்களுக்கு அங்கு கவர்ன்மெண்டார் சகாயவட்டிக்கு நீண்டகாலக் கடன்கள் கொடுப்பது போலவும் ஆறுமாதத்திற்கொருமுறை ஸப்ஸிடிகள் (உபகாரநிதிகள்) கொடுப்பது போலவும், இங்கும் கவர்ன்மெண்டார் அத்தகைய உதவி செய்யவேண்டுமென்றும் வற்புறுத்திச் சொன்னார். இவ்விராஜதானியின் அநேக தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டுவதற்காக பற்பல தொழில்களை கூட்டுறவு முறையில் ஏற்பாடு செய்யும்படியாகச்சொன்னார். நம்முடைய ஸ்திரீகளுக்கு பொருளாதார நிலைமையை உண்மையாய் உள்ளவாறு போதிக்கவேண்டிய அவசியத்தையும் குறிப்பிட்டுச் சொன்னார். அப்படிச் செய்வதால் இப்போது நகைகளில் வீணே செலவழிக்கப்படுகிற பணம் தொழிலபிவிர்த்திக்காக உபயோகிக்கப்படலாமென்றுச்சொன்னார்.

*
* *

முதல்மூன்று தீர்மானங்களும் அக்கிராசனராலேயே பிரரேபணை செய்யப்பட்டன. சீர்திருத்தச்சட்டத்தை அரசர் பெருமான் அங்கீகரித்ததை

தீர்மானங்கள்.

யொட்டி அவருடைய அன்பார்ந்த பகிரங்க அறிவிப்பிற்காக நன்றியறிதலோடு கூடிய வந்தன மளித்தல் முதலாவது தீர்மானம். இராஜீய விஷயங்களும் கூட்டுறவு விஷயங்களும் தனித்தனியேதான் இருக்கவேண்டுமென்று நாம் எப்பொழுதும் சாதிக்கிறோமென்றாலும் தற்சமயம் நாடெங்கும் ஓரே ஆரவாரமாயிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நாம் சும்மாயிருத்தல் தவறாகும். அடுத்த தீர்மானம், இளவரசரை மனப்பூர்வமாய் இந்தியாவுக்கு வரவேற்பதாகும். நமது இராஜதானியில் கூட்டுறவு நிதியை ஸ்தாபிப்பதில் மதிப்பிட முடியாத ஊழியஞ் செய்த ஸர். வி. ஷி. தேசிகாசாரியாரின் மரணத்தைப்பற்றி கூட்டுறவினர்கள் விசனத்தை வெளியிட்டது மூன்றாவது தீர்மானம். மிஸ்டர் சேஷகிரி ஐயர் சொன்னபடி இத்தீர்மானம் கூட்டுறவினர்கள் அடைந்த நஷ்டத்தைப் போதிய அளவு தெரிவிக்கவில்லை. மிஸ்டர் டி. கே. ஹநுமந்தராவ் கூட்டுறவுவிஷயத்தில் ஸ்திரீகளும் கவனமெடுத்துக் கொள்ளும்படிச் செய்யவேண்டுமென்று தமாஷாகப் பேசினார். ஒரு ஒரு கிரகஸ்தன் கடனாளியானால் அவன் மனைவிதான் அதற்குக் காரணயாயிருக்கிறாள். ஒரு கோவாபரேடிவ் ஸ்டோரில் ஒருவன் சேராமலிருந்தால் அதற்குக் காரணம் அவன் பெண்சாதி ஏற்படுத்தும் கஷ்டங்களே. இங்கிலாந்தில் 'விமன்ஸ் கில்ட்' என்னும் 'ஸ்திரீகளின் சங்கங்கள்' இருந்தன. அவை கூட்டுறவிற்கு வெகு உபகாரியாயிருந்தன. இத்தீர்மானத்தை ஆமோதித்த மிஸ்டர் எக்ஞநாராயணய்யர் நகைகளை அதிகப்படுத்தும் ஏற்பாட்டினால் ஸ்திரீகளைக் கூட்டுறவினர்களாக்கலா மென்றார். ஏழைகளுக்கு வீடமைக்கும் சங்கங்களுக்காகவும், அதற்காகத் தனி உத்தியோகஸ்தரின் நியமனத்திற்காகவும் இலகு வட்டியில் பணம் தேவையென்ற ஒரு தீர்மானம் 'தனி உத்தியோகஸ்தரின் நியமனம்' என்பதை நீக்கித் திருத்தம்செய்யப்பட்டது. ஏனென்றால் அவ்வுத்தியோகஸ்தருக்குக் கொடுக்கும் தொகையை மிகவும் உபயோககரமாய் கட்டடங்களுக்கே செலவழிக்கலாம். அடுத்த தீர்மானம் உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவு ஊழியர்களைப் பழக்குவதைப்பற்றியது. அதற்கு ஆகவேண்டிய முயற்சியை மதராஸ் ப்ரொ



வின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன் எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. வேண்டிய தொகையை சங்கங்கள் சேகரிக்கவேண்டும். மாணவர்களின் சங்கங்கள் ஏற்பாடா வதைப்பற்றி இனிமையான விவாதமொன்று ஏற்பட்டது. அது ஏற்படுவது உசிதமென்று எல்லாரும் சம்மதித்தார்கள். ஆனால் அதை ரிஜிஸ்டர்செய்ய ஆக்டு தடையாயிருந்தது. மிக இனிமையும் முக்கியமுமான தீர்மானம் மிஸ்டர் கே. இராஜாராவினால் கொண்டுவரப்பட்டதே. அது, கோவாபரேடிவ் லைப் இன்ஷியூரன்ஸ் ஏற்படுத்துவதைப்பற்றிய சௌகரியங்களை ஆலோசிக்குமாறு ஐந்து பிரமுகர்களடங்கிய கமிட்டியொன்றை ஏற்படுத்துவதே. ஜனங்கள் முன் ஒருகாலத்தில் இருந்ததுபோல இதன்ஜயத்தில் அவ்வளவு நம்பிக்கை யற்றவர்களாக இப்பொழுது இல்லை. கமிட்டியின் முயற்சி நன்கு பலிக்குமென்று நாம் முற்றும் நம்புகிறோம். கோவாபரேடிவ் பாங்கின் கரண்ட் அக்கௌண்டுக்கு ஸ்டாம்புக்கட்டண மில்லாமலிருந்ததை இந்தியா கவர்ன்மெண்டார் ரத்துசெய்ததைப்பற்றி கொஞ்சம் அசமாதானம் மனதிற்கு ஏற்பட்டு அதைமறுக்க ஒருதீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எப்பொழுதும் தனிச்சௌகரியம் வேண்டுமென்று கேட்பவர்களுள் நாம் சேரவில்லை. ஆனால் எந்த சௌகரியமாவது ரத்து செய்யப்படுமுன், அதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு தங்கள் வழக்கை அதிகாரிகளிடம் எடுத்துக்காட்ட இடம்கொடுக்கவேண்டும். அதனால் அவ்வதிகாரிகள் அதைரத்து செய்யும் காலம்வந்துவிட்டதா என்று நன்கு நிர்ணயிக்கலாம். சந்தடியில்லாமல் கஜட்டில் பிரசுரம் செய்துவிடுவது தர்மமாகாது. இன்னொரு கவனிக்கத்தக்க தீர்மானம் இவ்விராஜதானிக் கூட்டுறவினர்கள் இண்டஸ்ட்ரியல் கமிஷன் செய்த சிபார்சு முழுமையையும் கைப்பற்ற வேண்டுமென்று கூறுகிறது. குடிசைக்கைத் தொழிலுக்கு இதரமாகாணங்கலிலும்உள்ளதுபோலவே எந்தவிசேஷசௌகரியம் இவ்விடத்திலும் இருக்கிறது. அத்தொழில்கள் ஸ்தாபனமாய் விட்டால் அநேக தீவிரக்கூட்டுறவினர்களின் உபகாரம் தேவையாகும். அவ்வுபகாரம் தாராளமாய் கிடைக்குமென்றும் நாம் நம்புகிறோம். அப்பொழுது தான் நாம்ஜய ஆக்ஷிக்குப் போகும்மார்க்கத்தில் புறப்பட்டவர்களாவோம்.

*
* *

சென்னை மாகாண கோவாபரேடிவ் கான்பரன்ஸ் நடந்த சமயத்தில் புரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனின் வருஷாந்தர மீட்டிங்கு நடந்தது.

சென்னை மாகாண கோவாபரேடிவ் யூனியன்.

ரிஜிஸ்தராருடைய வருஷாந்தரத் தணிப்கை உத்தரவு படிக்கப்பட்டது. ஆறு வருஷத்திற்குக் பிறகு இப்பொழுதான் ஆடிட் உத்தரவு வந்திருப்பதாகக் காரியதரிசிகள் சொன்னார்கள். யூனியனில் சேர்ந்துள்ள மெம்பர்களின் தொகை மிகவும் குறைந்திருப்பதைப்பற்றி பொதுவாக எல்லோரும் வருந்தினார்கள். யூனியன்களுக்கும், யூனியனில் அணைக்கப்படாத சங்கங்களுக்கும் இது யூனியனாக இருக்கும்படியாக இந்த யூனியன் விதிகள் மாற்றப்படவேண்டுமென்று அபிப்பிராயங் கூறப்பட்டது. இவ் விஷயமாக வாக்குவாதம் நடந்தது. கடைசியாக ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அக்கமிட்டியில் உள்ளவர்கள் ஸ்ரீமான்கள். வி. என். கிருஸ்ணசுவாமி ஐய்யர், வி. வெங்கடசுப்பையா, டி. ஆதிநாராயணச் செட்டியார், வி.பி. சுந்தர ராவ். ஓ. விஸ்வநாதராவ். இக்கமிட்டி பைலாக்களை மாறுதல்செய்து நிர்வாகக் கமிட்டியாரின் (எக்ஸிகியூடிவ்) பார்வைக்கு அனுப்பவேண்டுமென்றுத் தீர்மானிக்கப்பட்டது. புல்லடீன் பத்திரிகையை நடத்துவதும், மாகாணக் கான்பரன்ஸைக் கூட்டிவைப்பதும் தவிர புரொவின்ஸியல் யூனியன் இதுவரையில் வேறுவித வேலையொன்றும் செய்யவில்லை. பணம் இல்லாக்குறையினாலும் உதவி செய்யவேண்டிய மனிதர்கள் இல்லாக்குறையினாலும் யூனியன் இதைவிட அதிகவேலை செய்ய முடியவில்லை. தவிர டிபார்ட்டுமெண்டு தினந்தோறும் வளர்ந்து அதிகப்பட்டு வருகின்றது. கூட்டுறவு இயக்கம் தனியான இயக்கமாக நிலை நின்று சுய இயக்கமாக நிற்பது கஷ்டமாக இருக்கின்றது. இக் கமிட்டிக்கு சகல விதத்திலும் அனுகூலங்களும் சௌகர்யங்களும் ஏற்படவேண்டுமென்றுப் பிரார்த்திக்கிறோம்.

*
* *

கூட்டுறவு இயக்கத்தில் மிகவும் திறமாக வேலைசெய்கிற மிஸ்டர் கே. எம். சின்னரங்கைய கௌண்டர் (கம்பிளியம்பட்டி) மிஸ்டர் எம். கொளந்தை வேலுடையார் (கள்ளக்குறிச்சி இவ் விருவர்களுக்கும் ராவ்சாகேப் பட்டம் புதுவருஷப் பட்டங்களாக கொடுக்கப்பட்டுள்ளன.

புது வருஷப் பட்டங்கள்.

இந்த இராஜதானியில் உள்ள மிகத்திறமானவும் திருப்திகரமானவும் யூனியன்களில்



விஜயமங்களம் சூப்ரவைஸிங் யூனியன் ஒன்று. மிஸ்டர் சின்னரங்கைய கௌண்டர் இந்த யூனியனில் இரவும்பகலும் உழைப்பவர். தன்னுடைய சொந்த அலுவல்களையும் நிறுத்திவிட்டு யூனியன் வேலைகளையே பிரதானமாகக்கவனிப்பவர். கோயமுத்தூர் ஜில்லாவில் கூட்டுறவு வியாபாரம் பெருகுவதற்கு இவர் அதிகமாக உழைத்திருக்கிறார். விவசாய கூட்டுறவில் ஸ்ரீமான் கொளந்தைவேலுடையார் ஏராளமுயற்சிகள் செய்து பல வழிகளிலும் உதவிசெய்து வருகிறார். தென்னாற்காடு ஜில்லாவில் கம்போடியா பருத்தி அதிகமாகப்பயிரிடப்படுவதற்கு இவருடைய உழைப்பும் ஊக்கமுந்தான் காரணம். கூட்டுறவுமுறையில் பருத்தி ஜின்கள் (இயந்திரங்கள்) ஏற்பட்டிருப்பது ஸ்ரீமான் கொளந்தைவேலுடையார் அவர்களுடைய முயற்சியினால் தான்.

முதல்கோவாபரேடிவ்ரிஜிஸ்தாராக இருந்தகனம்திவான்பகதூர் P. இராஜகோபாலாசாரியார் அவர்களுக்கு கே. ஸி.எஸ். ஐ. பட்டமும், சென்ற கோவாபரேடிவ் கான்பரன்ஸிற்கு அக்கிராசனம் வகித்தவரும், சென்னைகோவாபரேடிவ் லெதர்குட்ஸ்பாக்டரிக்கு ஏராளபணஉதவி செய்துள்ளவருமாகிய கனம் எஸ்.ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்களுக்கு ஸி. ஐ. ஈ. பட்டமும் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு சகலபாக்கியங்களும் சம்பத்துகளும் பெருகவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*
* *

இவ்விராஜதானியிலுள்ள கூட்டுறவினர்கள் தங்களுடைய கான்பரன்சுகளைப்பற்றியும் முக்கியமாய் ப்ரொவின்ஷியல் கான்பரன்ஸைப் பற்றியும் கௌரவம் பாராட்ட நியாயமுண்டு.

கான்பரன்ஸின் செல்வநிலை

இதர மாகாணங்கள் போலல்லாமல் இது உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவினர்களாலேயே கூட்டப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. அமைப்பு வரம்புக்குள்ளாக எந்த இதர கான்பரன்ஸைக்காட்டிலும், (தேசீய, ஜாதீய, அல்லது பொருளைப்பற்றிய எதுவானாலும் சரி) இது அதிசப் பிரதிநிதித்வம் பாராட்டக்கூடும். சங்கங்களால் டெலிகேட்டுகள் சரிவரத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். சாதாரணமாய் ஒரு சங்கம் ஒரு டெலிகேட்டை அனுப்புகிறது. டெலிகேஷன் கட்டணமும் பிரயாணச்செலவுகளும் சங்கங்களே சிலசமயம் ஏற்றுக்கொள்ளுகின்றன. கான்பரன்ஸ் செலவுகள் சங்கங்களின் நன்கொடைகளாலும்

மெம்பர்களின் நன்கொடைகளாலும் பொறுக்கப்படுகின்றன. இந்தக் கான்பரன்ஸ் அதன் சரியான நிலைமையில் நிர்வகிக்கப்படவேண்டியது அவசியம். ஆனால் சென்ற இரண்டு வருஷங்களாக அது நஷ்டத்தில் வேலை செய்கிறது. ஒவ்வொரு சங்கமும், எல்லா இதரசங்கங்களும் கான்பரன்சுக்கு உபகரிக்கிறதென்றும் தான் செய்யாவிட்டால் அதிக நஷ்டமில்லையென்றும் நினைத்து சும்மாயிருந்துவிட்டால் அதன் பயன் கீழ்க்கண்ட கதை போலாகும். ஒரு இராஜாவுக்கு ஒவ்வொரு பிரஜையும் நல்லபால் ஒருபடி ஒரு சமயத்தில் கொடுக்கவேண்டுமென்று ஏற்படுத்தப் பட்டது. இவ்வளவு ஜனங்கள் நல்லபால் ஊற்றியிருக்கும் இப்பெரிய பாத்திரத்தில் நாம் நீரைஊற்றினால் எப்படிகண்டு பிடிக்கமுடியுமென்று நினைத்து ஒவ்வொருவரும் தண்ணீரை ஊற்றி நிரப்பினார்கள். ப்ரொவின்ஷியல் யூனியன் செகரிடேரிகள் அவர்களுடைய 1918-19-வது வருஷ ரிபோர்டில் காட்டியபடி, கான்பரன்ஸ் செலவுகள் கூட்டுறவு விருத்தியிலும் விலைவாசி யேற்றத்தினாலும் வருஷாவருஷம் அதிகரித்துக் கொண்டேவர சங்கங்களின் நன்கொடைகள் குறைந்துகொண்டே வருகின்றன. 5-வது கான்பரன்சுக்கு 104 சங்கங்கள் நன்கொடைகள் அனுப்பின. 6-வதுக்கு 93, 7-வதுக்கு 80 தான். இம்மாதிரி நிலைமை நீடிக்கக்கூடாது என்று ஒவ்வொருவரும் நிச்சயமாய் சம்மதிப்பார்கள். ஆனால் இலாபத்தில் வேலை செய்யும் ஒவ்வொரு சங்கமும் இந்தப்ரொவின்ஷியல் கான்பரன்சுக்கு ஒன்று அல்லது, இரண்டு ரூபாய் கொடுக்கத் தீர்மானிப்பார்கள் என்று நம்புகிறோம்.

---



# கூட்டுறவு இயக்கத்தில் கல்வி போதனை.

[சென்னை கோவர்பரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ராருக்கு உதவி உத்தியோகஸ்தரான (Personal Assistant) டாக்டர் ஜான்மதே அவர்களால் எழுதப் பட்டது. (முதலாவது தென் கன்னடம் ஜில்லா கோவாபரேடிவ் கான்பரன்ஸிற்கு அனுப்பிய வியாஸம்.)]

கூட்டுறவு இயக்கத்திற்கும் பொதுவான வித்தியா விஷயத்திற்கும் உள்ள சம்பந்தம் ஒரு முக்கியமான பிரசனையாயிருந்துகொண்டு நாம் அடிக்கடி அதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டியதாயிருந்த போதிலும், 'கூட்டுறவில் கல்வி' என்பதை நான் இப்பொழுது இவ்வாறு அருத்தம் கொள்ளவில்லை. ஆனால் 'கூட்டுறவின் கொள்கைகளிலும் முறைகளிலும் கல்வி போதித்தல்' என்றே அருத்தங் கொண்டேன். இந்த அருத்தத்தில் இரண்டு விஷயங்கள் ஏற்படுகின்றன. (1) பரவவைத்தல். (2) பழக்குதல். முதலாவதற்கு அருத்தம், சாதாரண ஜனங்களுக்கு கூட்டுறவினால் சாத்தியமாகக் கூடியதைப் போதித்தல். இரண்டாவதற்கு அருத்தம், ஏற்கனவே கூட்டுறவினர்களாக இருப்பவர்களுக்கு அவர்களுடைய வேலையை எம்மாதிரிகளில் விருத்தி செய்து நடத்தலாம் என்பதைப் போதித்தல்.

### 1. பரவவைத்தல்

நன்றாய் முன்னேற்றமடைந்த உண்மையான கூட்டுறவுச் சங்கத்தின் தூண்டுதலும் உதாரணமுமே முதல்தரமான பரவைவக்கும் வேலையாகும். அதற்கடுத்த படியிலிருந்து உத்தியோகமுறையிலுள்ளவும் இல்லாதவுமான கூட்டுறவினர்களின் வேலை. கோவாபரேடிவ் கான்பரன்ஸுகள், கோவாபரேடிவ் பத்திரிகைகள், சாதாரணப் பொதுப்பத்திரிகைகள் ஆகிய இவைகள் செய்யும் வேலைகளாகும். இந்நாட்டின் கூட்டுறவைப் பத்திரிகைகள் மிக உற்சாகமாய் ஆதரித்துப் பேசுதல், இந்தியக் கூட்டுறவில் மிகவும் வியக்கத்தக்க அம்சங்களிலொன்று. இம்முறைகளிலெல்லாம் வெகு சிலாக்கியமான வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. இதற்கு அறிகுறியாக நம்மது என்று கௌரவமாய் நாம் சொந்தம் பாராட்டுகிற இந்தப் பெரிய, வளர்ந்துகொண்டு வருகிற, ஜீவியக் கூட்டுறவு இயக்கம் நிலைபெற்றிருப்பதே. ஆனால் இந்த வேலையை ஏற்பாடு செய்வதிலும் ஒழுங்கு படுத்துவதிலும் முக்கியமாய் அதிக வேலை செய்யக்கூடும். இந் நோக்கத்தோடு தான் கீழ்கண்ட ஆலோசனைகளை வரையத் துணிந்தேன்.

(a) நாம் மாணவர்களிலிருந்து வேலையை ஆரம்பிக்கவேண்டும். பரவவைக்கும் வேலைக்கு சிலாக்கியமான ஆரம்பஸ்தானம் அவர்களே. அவர்கள் விஷயமாய் இரண்டு காரியங்கள் நடை பெறலாம்.

(1) ஸெகண்டரிப் பள்ளிக்கூடங்களில் கூட்டுறவு விஷயங்களை ஒரு தீர்மானமான போதனைப் பாடமாக வைக்கும்படி முயல

வேண்டும். கூட்டுறவைக் கற்பிப்பதிலுள்ள கஷ்டம் தகுதியான டெக்ஸ்ட் புத்தகம் இல்லாமையும் தகுதியான உபாத்தியாயர்களின் குறைவுமே. கூட்டுறவு இலாகா இப்பொழுது தயாரித்து வருகிற 'மானுவல் ஆப் கோவாபரேஷன்' என்னும் புத்தகம் பிரசுரமானவுடன் புத்தகத்தைப் பற்றிய கஷ்டம் நீங்குமென்று நினைக்கிறேன். அது எளிய நடையாகவும், அருத்த புஷ்டியாகவும், ஸாரமாகவும் எழுதப்பட்டுள்ள சிறிய புத்தகம். அதை எழுதினதில் எனக்கு அதிக சம்பந்தமில்லையாகையால் நான் இப்படி தெளிவாய்ப் பேசக்கூடும். உபாத்தியாயர்களைப்பற்றி கொஞ்ச காலம்வரையில் கஷ்டம்தானிருக்கும். ஆனால் கூட்டுறவில் சிரத்தையெடுத்துக்கொள்ளும் உபாத்தியாயர்களின் சங்கியை அதிகமாய்க் கொண்டுவருகிறபடியால் இக்கஷ்டம் சீக்கிரம் நிவர்த்தியாய்விடும். சில பரிசோதனைகள் செய்ய ஏற்கனவே சாதனங்களிருக்கின்றன. கூட்டுறவில் இப்பொழுது சேர்ந்திராத உபாத்தியாயர்களுக்கு இது அதில் சேரும்படியான தூண்டுதலைக் கொடுக்கும்.

(2) புஸ்தகங்களையும், ஸ்டேஷனரிகளையும் கூட்டுறவில் வாங்குவதற்காக, பள்ளிக்கூடங்களிலும் காலேஜுகளிலும் இன்னம் அதிகமாக மாணவர் ஸ்டோர் சொஸைடிகளை அமைக்க முயலவேண்டும். வயதைப் பற்றிய சட்டங்களையொட்டி அவைகளுள் அநேகம், ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்படாமலிருக்கும். ஆனால் இது ஒரு பெரிய விஷயமல்ல. எப்படியிருந்தாலும் சங்கங்களின் போதனுமகிமை விசேஷமாயிருக்கும். ஒருவேளை பையன்களுடைய எதேச்சையான முயற்சிகளின் நிர்வாகம் இலாகாவின் வசம் இருப்பதற்குப் பதிலாக பள்ளிக்கூட உத்தியோகஸ்தர்களின் வசமே இருக்கும்படி விடுவது வித்தியாமுறையில் சிலாக்கியமாயிருக்கும்.

(b) எனது அடுத்த ஆலோசனை அர்பன் சொஸைடிகளையும், பெரிய கிராமச்சங்கங்களையும் (யூனியன் தலைமையிடங்களிலுள்ளது போன்ற சங்கங்கள்) பற்றியது.

(1) அடிக்கடி 'காலக்ஷேபங்கள்' வைப்பதை ஒரு வழக்கமாக ஏற்படுத்தி அதற்கு எல்லாரையும் வரும்படி அழைப்பதோடு, அவர்களைத் தூண்டுதலும் செய்யவேண்டும். என்மனதில் தோன்றுகிறபடி அது "பாட்டுக்கச்சேரி," முதலிய தமாஷ் பொழுது போக்கு என்று இந்தியப் பேச்சில் வழங்குகிறது. சங்கத்தின் பஞ்சாயத்து மெம்பர்களும் அவ்வூர் மகாஜனங்களுக்காக இம்மாதிரி ஏற்பாடு செய்து கூடியவரையில் ரமணீயமாயிருக்கும்படிக்கும் எல்லாருக்கும் தெரியும்படிக்கும் நடத்தவேண்டியது. சங்கீதங்களும் ஆட்டங்களும் கூட்டுறவு சம்பந்தமாக வைத்து, கூடுமானால் சிற்றுண்டிகளும் உதவுதல் முக்கிய அம்சமாயிருக்கவேண்டும். இச்சந்தர்ப்பத்தில் பார்க்கவருபவர்களுக்கெல்லாம்



கூட்டுறவின் நோக்கங்களை விஸ்தரித்துரைக்கலாம். ஆனால் சரியான சந்தர்ப்பம் சகஜமாய் வந்தால்தான் அப்படி செய்யவேண்டும். முக்கிய நோக்கம், அவர்களுக்கு சங்கத்தில் இன்பமானகாலம் கழித்தலாக இருக்கவேண்டும்.

(2) கூட்டுறவைப்பற்றி எளிதும், அனுபவமுமான வார்த்தைகளைக் கூடியவரையில் பாஷாந்தரங்களில் பேசுவதற்கு ஏற்பாடுசெய்யவேண்டும். என் அபிப்பிராயப்படி முதல்தரமான முறை எப்படியிருக்கலாமென்றால், பொதுக்கவனமான விஷயங்களை அதாவது சுகாதாரம், ஜனசௌக்கிய விஷயம் முதலிய சாதாரண விஷயங்களில் சம்பாஷணைகள் நடந்து கொண்டிருக்கையில் கூட்டுறவு விஷயமும் கலந்துவரவேண்டும். கூட்டுறவு விஷயத்தையே ஆதியோடந்தமாய்ப் பேசுவதற்குப் பதிலாக இம்முறை சிலாக்கியம். இம்முறையில் கூட்டுறவுச்சங்கங்கள் சுகாதாரம் சௌக்கியம் இவைகளில் உபயோகமாய் ஈடுபடச்சந்தர்ப்பமுண்டாகிறது. பிரஸ்தாபித்தமாதிரிகளில் பேசுவதினால் ஜனங்களுக்குக் கூட்டுறவைப் பற்றி அடிக்கடி பேசும் சந்தர்ப்பம் ஏற்படுவதோடு சங்கத்திற்கும் ஒரு மதிப்பையும் கௌரவத்தையும்கொடுக்கும். பரவவைக்கும் முறையில் இவ்வேற்பாடுமிகவும் சிலாக்கியம்.

கூட்டுறவுச் சங்கங்கள் கட்டாயமாய் விலக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு. அவைகள் மதமும், இராஜீய விஷயமுமே. இவ்விரு விஷயங்களில் தலையிட்டதனால் ஐரோப்பாவிலும், அமெரிக்காவின் சில பாகங்களிலுமுள்ள கூட்டுறவினர்களுக்கு விசேஷ கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கூட்டுறவு பொதுவாய் எந்த ஒழுக்கத்திற்கென்று ஏற்பட்டதோ அதை உண்மையாய் கௌரவிக்கும் நம்முள் எவரும், மேற்கூறிய குழப்ப விஷயங்களை அதில் புகும்படி செய்யவிடமாட்டார்கள் என்று நம்புகிறேன். மதமும், இராஜீய விஷமும் மனித வாழ்க்கையில் மிக்க அவசியமானவைகள்தானென்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் அவ்விஷயங்கள் சுபாவமாகவும் சரித்திர சம்பந்தமாகவும் ஏற்பட்டவாசனையினால், மனிதனுடைய சண்டை உணர்ச்சியைக் கிளப்புகின்றன. இம்மாதிரி உணர்ச்சிக்குக் கூட்டுறவில் இடமேயில்லை.

## 2. பழக்குதல்.

பழக்கம் தேவையாயிருப்பவர்கள் யார் என்பதை நாம் முதலில் தீர்மானிக்க வேண்டும். அத்தகையோரை கீழ்க்கண்ட இனங்களாகப்பாவிக்கலாம்:—

(1) கிராமச்சங்கங்களின் மெம்பர்கள்.

(2) சூபர்வைசர்களும், இன்ஸ்பெக்டர்களும்,

222118

(3) கௌரவ ஸ்தாபகர்களும், கௌரவ அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார்களும்.

ஒவ்வொரு இனத்தின் முக்கியத்தேவையையும் கீழ்க்கண்டவாறு கூறலாம் :—

இனம்.—1. கூட்டுறவு எண்ணங்களையும் ஸ்தாபனங்களையும் பற்றிய சாதாரண எண்ணங்கள்.

இனம்.—2. கணக்குவைக்கும் மாதிரியும் தொழில் முறையும்.

இனம்.—3. கூட்டுறவின் படிப்பைப்பற்றிய பொதுவான முறை, கூட்டுறவின் சரித்திரம், ஏற்பாடுகள், அதனால் சாத்தியமாகக் கூடியவைகள்.

இதர மாகாணங்களில் செய்யப்பட்டிருப்பது போலவும், அல்லது பிரஸ்தாபித்திருக்கிறது போலவும்,சாதாரண கிராம, நகரச் சங்கங்களின் செகரிடேரிகளுக்கு தனியான பழக்கமுறை வேண்டுமென்று நான் பிரஸ்தாபிக்காமலிருப்பதை கவனிக்கலாம். சென்ற சென்னை மாகாணக் கான்பரன்ஸில் கூட்டுறவு நிபுணர்களை நமது சாதாரணச் சங்கங்களில் புகவிடுதல் அனுவசியமென்றும், அபாயமென்றும், மிஸ்டர் மொல்ஹல்லி சிவராவ் தர்க்கித்ததில் விசேஷ பலமிருக்கிறதாக எனக்குத் தெரிகிறது. அவர்களுடைய வேலையில் தனியான பழக்கம் வேண்டிய அவசியமில்லை. தவிர, மூலதனக்காரனுக்கு எப்படி பொருளில் சுதந்தரமோ, அப்படியே நிபுணர்களுக்கு அறிவில் சுதந்தரம். தடுக்கமுடியாத சந்தர்ப்பம் ஏற்பட்டாலொழிய கூட்டுறவினர்கள் இவ்விரு திறத்தினரையும் விலக்க முயலவேண்டும். கிராமச்சங்கங்களிலிருப்பதுபோல நகரச் சங்கங்களில் அதன் கெடுதல் அவ்வளவு அதிகமில்லை. ஏனென்றால் கிராமச் சங்கங்களில் நிபுணர்களை அடக்கத்தகுந்த சக்தியுள்ள அதிக ஜனங்களைப் பார்ப்பது சாதாரணமாய் அருமை. சரியானபடி அடக்கிவைத்திருந்தாலொழிய ஒரு நிபுணன் குடியாக்ஷிக்கு அபாயமாய் விடுவான்.

இனம்.—1. முதல் இனத்தைச்சேர்ந்த கிராமச் சங்கத்தின் மெம்பர்களை, அவர்களை (1) நல்ல மெம்பர்களாக்குவதற்காகவும் (2) நல்ல பிரசாரகர்களாக்குவதற்காகவும், (3) நிர்வாகத்தை நன்கு அமைக்கும் முறையில் குற்றங்களை ஆராய்பவர்களாக ஆக்குவதற்காகவும், அவர்களுக்குப் போதனை செய்யவேண்டியது அவசியம். என்றாலும் தற்காலம் இக்கல்வி ஏற்பாட்டை ஸ்தாபிக்க நான் முயலமாட்டேன். ஒரு யூனியன் பஞ்சாயத்தாராவது, இன்ஸ்பெக்டராவது, சூபர்வைசராவது, லோகல் சங்கங்களைப் பார்வையிடப் போகும்பொழுது அங்குள்ள மெம்பர்களைச் சேர்த்து அவர்களுடன் கூட்டுறவைப்பற்றிப் பேசுதலை தங்களுடைய கடமைகளிலொன்றாகப் பாராட்டச் சொல்லுவேன். கிராமச் சங்க விஷயங்களை ஒழுங்காக



வும் நிதரிசன முறையாகவும் எடுத்துக் காட்டக்கூடிய சிறிய புஸ்தகம் ஒன்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு அம்மாதிரிப் பேச்சுகளைப் பேசலாம். இங்கேகூட இனி வெளிவருவதா யிருக்கிற மதராஸ் கோவாபரேடிவ் மானுவல் புத்தகம் உபயோகமுள்ளதா யிருக்கும்:

இனம்.—2. சூபர்வைசர்களையும், இன்ஸ்பெக்டர்களையும் குறித்து எனதபிப்பிராயம் என்னவென்றால் புது ஏற்பாடுகளைக் கொண்டு பழக்குவதற்குப் பதிலாக தற்காலம் இருக்கிற சௌகரியங்களை விசேஷ பிரயோஜனகரமாக உபயோகிக்கலாம். கூட்டுறவிற்கும் வியாபாரத்திற்கும் விசேஷ வித்தியாசமுண்டு. ஆனால் இரண்டுக்கும் பொதுவாயுள்ள ஆதாரம் வெகுவாயுண்டு. அதைக் கூட்டுறவு உத்தியோகஸ்தர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். வியாபாரப் பழக்கம் பெறாத சூபர்வைசர்களும், இன்ஸ் பெக்டர்களும் 'பாங்கிங்கும்' 'புக் கீபிங்கும்' கற்றுக்கொள்ளும்படி சிறிதுகாலம் 'கம்மர்ஷியல்' பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படலாம். சௌகரியமுள்ள இடங்களிலெல்லாம் இவ்வேற்பாடு செய்யமுடியும். அஸிஸ்டெண்ட் ரஜிஸ்ட்ரா ராபீசிலும் ஸெண்ட்ரல் பாங்கி ஆபீஸிலும் வேலை கற்றுக்கொள்ளும் காலத்தில் இவைகளையுங்கூட கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யலாம். அவர்கள் பிரத்தியட்சமாய் பழக்கத்திலிருக்கும் பொழுதுதான் கூட்டுறவின் தெளிவான பழக்கங்களையும் நோக்கங்களையும் கற்கமுடியும்.

இனம்—3. நம்முடைய வேலைவிஷயமாக நமக்கு உபகாரம் செய்யும்பொருட்டு முன்வந்துகொண்டிருக்கிற ஏராளமான கௌரவ ஊழியர்களின் போதனை தனியாய் கவனிக்கத்தக்கது. அவர்கள் சாதாரணமாய் அனுபவசாலிகள். தொழில் ஸ்தாபன வேலையில் அனுபவ அறிவுள்ளவர்கள். அவர்கள் விஷயத்தில் தொழிலுக்கென்று பள்ளிக்கூடப்பழக்க முறைகள் ஒன்றும் வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு வேண்டியது என்னவென்றால், அவர்களுடைய நோக்கங்களைக் கூர்மையாகவும், விரிவாகவும் உயர்த்தி கூட்டுறவில் ஆழ்ந்த ஆராய்ச்சியான நம்பிக்கையை உண்டுபண்ணி, புதுமாதிரியில் விருத்தியாக்கக் கூடும் முறைகளை அவர்கள் உணரும்படிச் செய்வதே என்பது எனதபிப்பிராயம். அம்முறையில், ஐரோப்பிய நாடுகளின் கூட்டுறவுச் சரிதங்களிலுள்ள விசேஷங்களைப் படித்தல், பொருளாதாரத்தின் ஆரம்ப முறைகளைக் கற்றல், சென்னை இராஜதானியில் கைத்தொழில், விவசாயம் இவைகளை விருத்தி செய்யும் மார்க்கங்களைத் தெரிதல் ஆகிய இவைகள் அடங்கி யிருக்கவேண்டும்.

இவ்வேற்பாடுகள் விடுமுறை நாட்களில் நடைபெறுகிற பள்ளிக்கூட முறையை அனுசரிக்கலாம் என்பது எனது ஆலோசனை. அப்பொழுது ஜனங்களுக்குச் சென்னையில் சிலவாரங்கள் கழிப்பது எளிதாயிருக்கும். பள்ளிக்கூடம் ஒருமாதம் அல்லது ஆறு வாரங்கள் நடைபெறலாம். ஒவ்

வொரு முழுப்பழக்கமும் இரண்டு வாரங்களில் முடியலாம் ஆகவே ஆறு வாரங்கள் கொண்ட கிளாஸில் மூன்று கூட்டத்தார்கள் முறையே கற்க லாம். முதல் பக்ஷத்தில்நடந்தபாடமே பிந்தியகிளாசுகளில் நடைபெறும்.

முதல் மூன்று வருஷங்களுக்கு இவ்வேற்பாடு பரீட்சார்த்த முறை யாகவே யிருக்கவேண்டும்.சங்கங்களின் பிரதிநிதிகள் இவ்வளவு பெயர்கள் தான் என்றாவது அல்லது இவ்வளவு தொகைகள்தான் கொடுக்கப்பட வேண்டுமென்றாவது ஒரு தீர்மானமான ஸ்தாபனமுறை தற்காலம் உதவாது. பள்ளிக்கூடத்திற்குத் தேவையான தொகை, இவ்வெண்ணத் தில் சிரத்தைகாட்டும் மெம்பர்களாவது சங்கங்களாவது தாமே மனமார வருஷாவருஷம் கொடுக்கும் சந்தாவினால் வசூலாக வேண்டியது. சந்தா வசூலாகும் பான்மையிலிருந்து இவ்வேற்பாட்டின் அவசியத்தையும் உபயோகத்தையும் சோதித்துவிடலாம். ஒரு வருஷத்திற்குப் பள்ளிக் கூடச்செலவு, பிரயாணச்செலவும் இதரச்செலவுகளும் நீங்கலாக, ரூ. 75 முதல் ரூ. 1000 வரையில் ஆகுமென்று ஒரு வாறு மதிப் பிடுகிறேன். ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ்யூனியன் செக்ரிடெரியை இவ்விஷயத்தில் நிர்வாகியாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளலாம். அவர் கள், சில பிரமுகர்களான கூட்டுறவினர்களையும், யூனிவர்ஸிடி எகனா மிக்ஸ் ப்ரொபஸரையும் கோவாபரேடிவ் சங்கங்களின் ரஜிஸ்ட்ராரவர்களை யும் கலந்துகொண்டு நிர்வாகத்தை நடத்தவேண்டும். பள்ளிக்கூடத்தின் முக்கியமான ஏற்பாடானது அதன் வகுப்புகள் தர்க்கமுறையினதாயிருக்க வேண்டும். அதன் நோக்கம் போதனைகொடுப்பதோடு இராமல், இராஜ தானியின் நானாபாகங்களிலுமிருந்து வரும் கூட்டுறவு ஊழியர்களுக்கு ஒரு சாவகாசம் கிடைக்ககாத கான்பரன்ஸ் சந்தர்ப்பம் போலல்லா மல், சாவகாசமாய்க் கலந்து தங்களுடைய பரஸ்பர அபிப்பிராயங்களை ஒப்பிட்டுப்பார்த்து தீர்மானமான ஆராய்ச்சி செய்துகொள்ளத் தக்க தாயிருக்கும்.

பள்ளிக்கூடம் இங்கிலீஷில் நடத்தப்படும். நமது முதல்தரமான கௌரவ ஊழியர்களில் அநேகருக்கு இங்கிலீஷ் தெரியாதென்று நினைக்கி றேன். ஆகையால் இவ்வேற்பாடு அவர்களுக்குப் பயன்படாது. இது வருத்தப்படத்தக்கதே.இக்கிளாஸில் கற்றுக்கொண்டவர்கள் நாளடைவில் அந்தந்த ஜில்லாக்களில் இம்மாதிரி ஏற்பாடுகளை தேசீய பாஷாந்தரங்களில் உண்டாக்கி தாங்கள் அடைந்தபயனை அங்குள்ளவர்களும் பெறும்படிச் செய்வார்களென்று நம்புகிறேன்.

கடைசியாக இக்கடிதத்தில் கண்டவிஷயங்கள், ஒரு சாதாரணக் கூட்டுறவினனைப்போல என் மனதிற்பட்ட சொந்த அபிப்பிராயங் களே ஒழிய, ஒரு உத்தியோக தோரணையான அதிகாரம் அதில் கொஞ்ச மாவது இருப்பதாக ஜனங்கள் தப்பருத்தம் கொள்ளாமலிருக்கும் பொருட்டு கேட்டுக்கொள்ளுகிறேன்.



# எட்டாவது சென்னை மாகாணக் கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

## முதல்தினம். 1919-ம் வருஷம் டிசம்பர் மீ 29-உ

சென்னைமாகாணக்கோவாபரேடிவ்யூனியனால் ஏற்பாடுசெய்யப்பட்ட எட்டாவது வருஷக்கான்பரன்ஸ் வெஸ்லிகாலேஜில் 1919-ம் வருஷம் டிசம்பர்மீ 29, 30, தேதிகளில் நடைபெற்றது. ஹாலுக்குள் போகும் வாயலில்'மதராஸ் கோவாபரேடிவ் லெதர் குட்ஸ்பாக்டரி'யாரால்செய்யப் பட்டபெல்டுகள், செருப்புகள், பூட்ஸுகள், பணப்பைகள் முதலிய அநேக விதமான தோற்சாமான்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன. கான்பரன்ஸில் 290 டெலிகேட்டுகள் ஆஜராயிருந்தார்கள், அவர்களு டைய ஜாபிதா அடுத்தமாதச் சஞ்சிகையின் அனுபந்தத்தில் காணப்படும். ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனுடைய வருஷாந்தர மீட்டிங்கு 12 முதல் 2 மணி வரையில் நடைபெற்றது. அதன் பிறகு யூனியன் மெம்பர்கள் சிற்றுண்டி உதவப்பெற்றார்கள்.

பகல் 3 மணிக்கு கான்பரன்ஸ் துவக்கிற்று. மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். ஆஜராயிருந்த வர்களுள் கீழ்க்கண்டவர்கள் பிரபலமானவர்கள் டாக்டர் கில்பர்ட்ஸ்லேடர் ராவ்பகதூர் வி. கோவிந்தன், சேலம் டி. ஆதிநாராயண செட்டியார், சேலம் காலேஜ் பிரின்ஸிபாலான எஸ். கே. எக்நாராயணய்யர் எம்.ஏ., என். பட்டாபிராமராவு, கோயமுத்தூர் ஹைகோர்ட்வக்கீல், டி.ஏ. ராம லிங்கம் செட்டியார், டி. எஸ். சுப்பிரமணிய அய்யர் எம். ஏ. எல். டி., கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜைச் சேர்ந்த டி. கே. ஹனுமந்த ராவ், சென்னையிலுள்ள, சாதுல்லாபாஷாசாயபு, பி. ராமனாதன்,ஸொலி ஸிடர், கோயமுத்தூர் ஸி. வி. வெங்கட்டரமண அய்யங்கார், ஜி.எப். பாடி துரை ஐ. ஸி. எஸ், வி. ஸி. ரங்கஸாமி, உத்திரமேரூர் ஓ. எம். வெங் கடநாத அய்யங்கார், தஞ்சாவூர், டி. ஆர். ஸ்ரீனிவாசய்யங்கார், சென்னை டி. அரங்காசாரியார், பி. நாக பூஷணம், திருக்கோயிலூர் ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார், விஜயமங்கலம் சின்ன ரங்கப்யா கவுண்டர், கம்பயநல்லூர் ஸி. பி. சுந்தரராவ், திருவண்ணாமலை கௌரவ அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட் ராரான எம். எஸ் சேஷாசல அய்யர், சீர்காழி கௌரவ அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரான ஸி. எஸ். ஸ்ரீனிவாசபிள்ளை, பி. ஏ.சுப்பிரமணிய அய் யர், கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்த ராவ்பகதூர் ஏ. வேதாசலய்யர் ஸி. என். சுப்பிரமணிய அய்யர், கே. தேவசிகாமணி முதலியார், டாக் டர் ஜான்மாதே, டி. அருளானந்தம் பிள்ளை, ஏ. ராதாகிருஷ்ணய்யர் (புதுக்கோட்டை கோவாபரேடிவ் சொஸைடி ரிஜிஸ்ட்ரார்) காயத்ரி நாத

அய்யர்(கொச்சி) கான்பரன்சுக்கு ஆஜராயிருக்கவேண்டு மென்றே இலங்கையிலிருந்து வந்த விக்கிரம ரத்னா.

## வரவேற்பு உபன்னியாசம்.

வரவேற்புக் கமிட்டியின் பெயரால் டெலி கேட்டுகளுக்கு நல்வரவு கூறின மிஸ்டர், வி. என். கிருஷ்ணஸாமி அய்யர் கீழ்க்கண்ட வியாஸத்தைப் படித்தார்:—

சகோதர டெலிகேட்டுகளே, கனவான்களே,

வரவேற்புக்கமிட்டி மெம்பர்கள் அவர்களுடைய மனதிற் பட்ட காரணங்களைக் கொண்டு இந்தத் தடவை என்னை அவர்களுடைய அக்கிராசனராக இருக்கும்படி ஆக்ஞாபித்தபடியால் நானும் இன்று பகல் நடவடிக்கைகளை எனது சக்தியானுசாரப்பிரகாரம் ஆரம்பிக்கத் துணிகிறேன். சென்ற பல வருஷங்களாக நமது யூனியனின் கீர்த்தி வாய்ந்த பிரசிடெண்ட் ராவ்பகதூர் கே. பி. இராமனுதய்யர் இவ்வேலையை வழக்கமாய்க் கவனித்து வந்திருக்கிறாரென்பது உங்களுக்குத் தெரியும். என் சொந்த அபிப்பிராயப்படி அவரே இப்பொழுதும் நமக்குத் தலைமைவகித்து இக்குழப்பக் காலங்களில் கூட்டுறவு விஷயமாய் இனி நடைபெற வேண்டியிருக்கிற பெரிய விஷயங்களைப்பற்றி அவரையே கவனிக்கும்படி விட எனக்கு மிகவும் திருப்தியாயிருந்திருக்கும். ஆனால் இது என்னுடைய கடமையாய் ஏற்பட்டிருக்கிறபடியால் எட்டாவது சென்னை மாகாணக் கோவாபரேடிவ் கான்பரன்சுக்கு வரவேற்புக் கமிட்டியாரின் பெயரால் எனது மனமார்ந்த நல் வரவைத்தங்களுக்குக் கூறுதல் ஒரு கௌரவமான பாக்கியமென்று உணருகிறேன். அவ்வாறு கூறுகையில் இவ்வேலையில் நடக்கக் கூடிய அநேக குற்றங் குறைகளைத் தாங்கள் பாராட்டாமலிருக்க வேண்டுமென்று வரவேற்புக் கமிட்டியார் தங்களைக் கேட்டுக் கொள்ளச் சொன்னார்கள். குறைகளுக்குக் காரணம் அவசரம் என்று சொல்வது வழக்கமுண்டு. இது அவ்வளவு அதிகமில்லை. அவர்கள் வசமுள்ளபணத்திற்குத் தக்கபடியே ஏற்பாடுகள் சாத்தியமாயிற்று. எதிர் பார்த்தபடியும் விரும்பியபடியும் பணம் கிடைக்கவில்லை. போதுமான பணம் கையிலிருந்தால், ஆஸ்திரியாவிலும் வேறிடங்களிலும் சில தனிகர்களான கூட்டுறவினர்கள் செய்வதுபோல் வாணவேடிக்கைகள் கூட ஏற்படுத்தலாம். ஏப்ரல் மாதக் கான்பரன்சு செலவினால் நமக்குக் கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டது. அது அப்படியிருக்கக் கூடாது. ஆகையால் மறுபடியும் நமக்கு அப்படிப் பட்ட அசந்தர்ப்பம் ஏற்படக்கூடாத வழிகளை ஆராயவேண்டும். என் மனதில் முதலில் பட்ட கீழ்க்கண்ட அபிப்பிராயத்தை தங்களுடைய ஆலோசனைக்கு இலக்காக்குகிறேன். அதாவது ஒரு தீர்மானமும் ஒழுங்குமான வழியில் நாமே கொஞ்சம் சிரமத்தை மேற்போட்டுக்கொண்டு



பணத்தை ஏற்பாடாய் வசூலும் செய்துவிட்டோமானால் வரவேற்புக் கமிட்டியாரின் வேலை சுலபவாய் விடும். எட்டு வருஷம் கடந்து விட்டது. இன்னும் நாம் ஒரு ஸ்திரமற்ற நிலையில்தான் இருக்கிறோம். தற்காலப் பொழுதைப் போக்குகிறோமே ஒழிய வருங்காலத்தைப்பற்றி நினைப்பது அபூர்வமாகவே யிருக்கிறது. சாத்தியமாய் யாரிடமிருந்து நமக்குப் பணம் கிடைக்கிறதோ அவர்களிடம் மட்டும் வாங்குகிறோம் ஆனால் நமது ஏற்பாட்டில் சரியான ஏற்பாடுகள் குறைவு. இக்கான்பரன் சானது நல்ல ஏற்பாட்டுடன் ஸ்திரமாயும், ஒழுங்காயும், வருஷா வருஷ முறைமையாயும் இருக்கவேண்டு மென்பது எல்லாருக்கும் சம்மதமாயிருக்கும்பக்ஷத்தில் அதற்கு உறுதியான பொருளாதாரம் ஏற்படுத்த வேண்டுமென்பது அத்தியாவசியம். கான்பரன்ஸை நடத்தத் தேவையான தொகையும் அது கிடைக்கக்கூடிய வழிகளும் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனுக்குத் தெரியும்படிச் செய்யவேண்டும். பட்ஜட் முன்னாடியே தயாரிக்கப் படவேண்டும். (எப்படி யிருந்தாலும் வாணவேடிக்கைகள் வேண்டாம்). இதை அனுசரித்து வேலை செய்வதில் யாதொரு முரணும் இருக்கக்கூடாது. ஆகையால் தயவுசெய்து இதுவிஷயமாய் சாத்தியமான யுக்தியைச் சொல்லுங்கள். அப்படிச் செய்தால் கான்பரன்சுக்கு ஒரு வலுவான பொருளாதாரம் ஏற்படுத்தியதாகும். வருங்காலத்திய வரவேற்புக் கமிட்டிகளுக்கு தகைமையுண்டாகும்:— நல்வரவுவார்த்தைகளை இம்மட்டோடு நிறுத்திக்கொண்டு கான்பரன்ஸின் பிரசிடெண்டைத் தங்களைக்கொண்டு அவருடைய ஸ்தானத்தில் வீற்றிருக்கச்செய்து அவருடைய வியாஸத்தினால் கான்பரன்ஸை ஆரம்பிக்கும்படி செய்தால் எனக்கு மிக நல்லதாய்விடும். ஆனால் அது மனமாறக் கடமையைக் கவனிக்காமல் அசட்டை பண்ணினதாகு மாகையாலும் அநேக சிக்கலான விஷயங்கள் அவசியம் கவனிக்கப்பட இருப்பதாலும் அவைகளில் சிலவற்றைப் பொதுவாய் ஆங்காங்கு குறித்துக் காட்டுகிறேன். தீர்மானமான விவகாரத்திற்கு வரக்கூடாததும் ஆனால் ஒரு நிச்சயமான வழியில் பிரஸ்தாபிக்கத் தக்கதுமான விஷயங்களை குறிப்பிட்டுக் காட்டுவது எனது நோக்கம். நிதரிசனமாய் உழைப்பவர்கள் கூடும் கான்பரன்ஸ் நம்முடையது. நாம் இங்கு வருஷாவருஷம் கூடுவது சிங்காரமான வார்த்தைகளையே கேட்பதற்கல்ல. நமக்கும் பிறருக்குமுள்ள வித்தியாசத்தை ஒப்பிட்டுச் சுட்டிக்காட்டி நம்முன்னேற்றம் எப்படி யிருக்கிறது, எங்கே யிருக்கிறது என்பதை அறிந்து திருப்தி யடைவதற்கே. நமது கொள்கைகளும் ஏற்பாடுகளும் எங்கெல்லாம் இலாகாவினை தோடுமாறு படுகின்றனவோ அங்கெல்லாம் நமது நியாயங்களை அவர்களும் பொது ஜனங்களும் கவனிக்கும்படி பகிரங்கப்படுத்தி நாம் சீர்திருத்திக் கொள்வதற்காக கண்டன்களைக் கோருகிறோம். நம்மது

போன்ற ஜன சம்மதமான ஒரு தொழிலில் நாம் கூடும்போதெல்லாம் யாராவது அறிமுகமான பழைய சிநேகிதர்களையும் தீரரான சகோதரர்களையும் இவ்வுலகில் காணமுடியாமற் போவது சகஜம் போலிருக்கிறது. கூட்டுறவு வேலையில் நம்முடைய மத்தியில் வெகுகாலமாய், கௌரவமாகவும், அந்நியோந்நியமாகவும், விசேஷப் பிரயோஜனகரமாகவும் இருந்து உழைத்துவந்த ஸர், வி. ஸி. தேசிகாசாரியாரின் ஆத்மா நம்மைவிட்டுப் பிரிந்து அவ்வுலகுற்றதற்காக அனுதாபம் காட்டவேண்டியது நமது கடமையாயிற்று. அவருடைய உழைப்பின் அரி குறியாக மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கி விளங்கிவருகிறது. இனி அது மாகாண பாங்காகவாவது, அல்லது இன்னம் அதிக அந்தஸ்திலாவது உழைக்க ஏற்பட்டால், அது எப்படிப்பட்ட உண்மையும் ஏற்பாடுமான ஆதாரத்துடன் அமைக்கப்பட்டது என்பதை எப்பொழுதும் மறவாமல் நினைக்கக்கடவோம். தைரியமான தீர்மானமும், நிர்ப்பயமும், ஒரே கொள்கையும், அவர் தன்னுடைய வேலைகளில் பிரபலமாக வைத்த பல நல்லொழுக்கங்களுள் சில. நமது முன்னேற்றப் போக்கில் அவர் இல்லாமற்போனதை நினைத்து வெகுகாலம் உருகவேண்டியிருக்கும். அந்த தீரபுருஷனுடைய உதாரணமானது நம்மையும் அவ்வாறு உழைக்கும்படி தூண்டட்டும் என்று நாமும் நாடுவோம்.

இதைவிடக் குறைந்த பத்தியில் காலஞ்சென்ற மிஸ்டர். கே. ஜி. வெங்கடசுப்பய்யர் தன்னால் இயன்றவரையில் படாடோபமில்லாமல் உழைத்துவந்தார். அவருடைய அகாலமரணத்தினால் சேலத்தின் இயக்கத்திற்கு குறைவே. அவரிடம் நெருங்கிப் பழகினவர்களுக்குக் கூட்டுறவின் அன்பும் உதாரகுணமும் பொருந்திய அந்நேசரின் பிரிவு வெகுநாள் மறக்க முடியாமலிருக்கும். இன்னம் அநேக உண்மையான ஊழியர்கள் பல இடங்களிலிருந்துகொண்டு தங்கள் பக்கங்களில் கூட்டுறவு முறையில் பல உபயோகமான வேலையைச்செய்து காலஞ்சென்றிருக்கிறார்கள். அவர்களைப் பற்றிப் பகிரங்கமாய் எல்லோருக்கும் தெரியாவிடினும் அவர்களுடைய ஆத்மாக்களுக்கு கடவுளின் அனுக்கிரகம் உண்டாகுமாறு வேண்டுதல் நமது கடமை. நாமும் அவ்வாறேவேண்டுவோம்

இனி ஜீவிய உலகத்தை நாடுவோம். கொஞ்சம் கவனிப்போமானால் சென்ற சில வருஷங்களுக்குள் பிரபஞ்சப்போக்கு அசாதாரணமாய் மாறியிருக்கிறது தெரியவரும். மகாயுத்தம் நின்றபிறகு கடந்திருக்கிற வருஷத்தில் அநேகவிதமான அபிவிருத்திகள் சம்பவித்திருக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் இந்தியக் கூட்டுறவினர்களாகிய நமக்கு ஏற்பட்ட பெரிய பொதுப் பிரயோஜனம் என்னவென்றால்,நம்முடைய ஏப்ரல் மாதக் கான்



பரன்சு முடிந்தபிறகு சீர்திருத்தச் சட்டத்தினால் இந்தியாவின் ஆளுகை முறையில் ஏற்பட்ட மாறுபாடே. அம் மாறுபாட்டைப்பற்றி அபிப்பிராய பேதம் வியக்தமா யிருந்தது நமக்குத் தெரியும். ஆனால் நாம் சம்பந்தப்பட்ட வரையில் அம்மாறுபாடு கூட்டுறவிற்கு அனுகுணமாயிருப்பதாக நாம் நம்பலாம். அதனால் நாம் ஏதோ புதிய ஏற்பாட்டில் ஆரம்பித்துவிட்டதாக நினைக்கவேண்டாம். ஏனென்றால், இந்தியா கவர்ன்மெண்டின் முக்கியமான நோக்கம் 1858-ம் வருஷம் முதல் ஒரே மாதிரிதான் இருந்திருக்கிறது. அந்நோக்கம் ஒப்பற்ற அழகமைந்த கீழ்க்கண்ட வசனத்தினால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது "அவர்கள் செல்வவந்தர்களா யிருத்தலே நமக்கு பலம், அவர்கள் திருப்திகரமாயிருத்தலே நமக்குப் பலம், அவர்கள் நன்றியறிதலுள்ளவர்களா யிருத்தலே நம்முடைய மேலான கைம்மாறு." ஆனால் நமது பதவி இம்மாதிரி தெளிவாய் விளக்கப்பட்டிருந்தபோதிலும், காலம், கருவி, முதலிய பல ஏற்பாடுகளுக்குத் தக்கபடி பல மாதிரியில் முயற்சித்திருக்கிறோம்.எல்லாம் கடைசியில் ''சமாதானம்'' என்னும் ஒரே வார்த்தையைத்தான் நன்கு விளக்கிக் காட்டுகின்றது. இந்தச் சீர்திருத்த ஏற்பாடுகூட தெளிவாய் விளக்கப்பட்டிருப்பது ஒரு அதிக அதிசயமல்ல. நாம் அதை அங்கீகரித்து மேற்காரியத்தை நடத்தவேண்டும். என்றாலும், இவ்விஷயங்களுக்கு முடிவு இல்லை என்பதையும் ஒவ்வொரு முன்னேற்றமும் அடுத்த உன்னத பதவியில் நன்மைக் கூட்டிப்போகும் பெருமை வாய்ந்த படிக்கட்டு என்பதையும் நாம் நினைத்துக் கொள்ளக் கடவோம்.

தற்போது, கூட்டுறவிற்கு இரண்டு கண்கள் போல நாம் பாராட்டும் ''சுய உதவி'' ''பொறுப்பு'' என்னுமிவைகள் இதரபெரிய இலாகாக்களுக்குக்கூட கண்கள் என்று தீர்க்கமாய் வற்புறுத்தப்படுகின்றன. ஆகவே இது நமக்கு ஒரு விளக்கமான இலாபம்.

சீர்திருத்தச் சட்ட விஷயமானது இங்கே பேசத்தகுந்தது. அதில் பேசப்படும் இதர விஷயங்களுக்காக அவ்வளவு தகைமை யில்லை. நமது பொறுப்பை நன்கு விருத்தி செய்கிறது என்னும் இவ்வொரு விஷயமே தகுதியானது. கூட்டுறவு ஜனங்களின் வேலையென்றும்,அவர்களே அதைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்றும் கவர்ன்வெண்டார் நாட்டின் நிலைமையை அனுசரித்து, கொஞ்ச ஆரம்ப உதவி கொடுத்தபோதிலும் சரியான காலம் வந்த உடன் வழிக்காட்டியைப்போல், அல்லது போஸ்ட் ஆபீஸைப்போலத்தான் இருக்கத் தீர்மானித்திருக்கிறார்களென்றும், இவ்வளவு வருஷங்களாகப் பேசக்கேட்டிருக்கிறீர்கள். என்றாலும் இப்பொழுது புதிய ஆக்டுப்படி அரசாக்ஷி மாறுகிறதை யொட்டி கூட்டுறவினர்களுக்கு தங்களுக்குள் அனுஷ்டிக்கவேண்டிய கடமைகள் நன்கு விளங்குகின்றன. இவ்வாறு கூட்டுறவானது உண்மையாகவே நம்மு

டைய வசம் ஒப்புவிக்கப்பட்டுவிட்டது. அதை நாம் உருக்கமாய் வகிக்க வேண்டியது. அதை ஒட்டிய பொறுப்பெல்லாம் அநேகமாய் நம்முடையதே. இனி நமது முன்னேற்றப்பாங்கை நாமே கைக்கொள்வோமாக.

சற்று முன்குறித்த அந்த சில விஷயங்களை நாடி இம் மாறுபாடான நிலைமைகளுக்குத் தக்கவாறு ஒவ்வொன்றாகச் சுருக்கமாய் கவனிப்போம். அப்படி கவனித்தல் எளிதல்ல. ஏனென்றால் நாம் இதுகாறும் அடைந்திருக்கிற முன்னேற்றத்திற்குத் தக்கவாறு நமது மந்திரிகளும் கூடப் பெருகியும் பெருகிக்கொண்டு மிருக்கிறார்கள். விஷயங்களும் மேன்மேலும் சிக்கலாய்க்கொண்டு வருகின்றன. சுபாவத்தில் இம்முறைகள் வந்துதான் ஆகவேண்டும்போலும். எல்லாப் பக்கங்களிலிருந்தும் நாம் விளக்கத்தைக் கோரவேண்டி யிருக்கிறது. இவ்விஷயத்தில் ஏப்ரிலுக்கும் டிசம்பருக்கும் இடையிலுள்ள காலம் நமக்கு அதிர்ஷ்டகாலமா யிருந்திருக்கிறது. மிஸ்டர் உல்ப்துரை நமக்கு அவருடைய "இந்தியாவில் கூட்டுறவு" என்னும் புத்தகத்தை நமக்குக் கொடுத்தார். சில பிரதமக்கொள்கைகளிலுள்ள ஒவ்வொரு சிக்கலான விஷயத்தையும் எவ்வளவு அழகாய் அப்புத்தகம் ஒழுங்குபடுத்திக் கொடுக்கிறது என்பதை அதைப் பார்த்த ஒவ்வொருவரும் நன்றியறிதலுடன் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆகையால் மாகாணத்தில் வழங்கும் முக்கிய பாஷைகளில் அதை மொழிபெயர்க்க நன்கு பிரயத்தனம் செய்து சீக்கிரமாக நமது கூட்டுறவினருள் பரவவைக்க ஏற்பாடு செய்யலாம்.

விருத்தியாய்க் கொண்டுவரும் இச் சங்கடங்களை மனதில் வைத்துக் கொண்டு நமக்கு முன் தென்படுகிற நிதரிசனமான முதல் விஷயத்தை ஆலோசிப்போம். அது இந்த ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் கான்பரன்ஸையே வேறுமாதிரியில் மாற்றி அமைக்கவேண்டுமென்பது என தபிப்பிராயம். இதுவரையில் நாம் ஏற்பாடான ஒழுங்கில்லாமல் கூடி, வார்த்தையாடி பிரிந்துபோய்க்கொண்டிருந்தோம். ஆனால், ஏப்ரிலுக்கும் டிசம்பருக்கும் இடையில் ஆந்திரா ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனின் ஏற்பட்டிருப்பது உங்களில் அநேகருக்குத் தெரியும். நமது ஆந்திர நேயர்கள் இவ்விஷயத்தைப்பற்றி வெகு காலமாய் ஒரு மனத்தாங்கலை அனுபவித்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. அதாவது இம்மாகாணக் கான்பரன்ஸ் ஏறக்குறைய தமிழர்களதாய் விட்டதென்றும் ஆந்திரஜனங்களுக்கே உரித்தான சில விஷயங்கள் கவனிக்கப்படவில்லை யென்றும் அல்லது ஏனோதானோ என்று கவனிக்கப்பட்டதென்றும் முறைப்படுகிறார்கள் இதை யெல்லாம் விளக்கினால் நமது முன்னேற்றம் மாகாணக் கான்பரன்ஸின் சம்பிரதாய முறைகளை மீறியிருக்கிறதாக எனக்குப்படுகிறது. இது சரியான அபிப்பிராயமா யிருந்தால் நமது நிலைமையைத் திரும்பவும் ஆலோசித்துப்பார்த்து அதற்குத்



தக்கபடி ஏற்பாடு செய்துகொள்ள வேண்டிய காலம் வந்திருக்கிறது. எனது அபிப்பிராயம் என்னவென்றால், நாம் இப்பொழுது ஒரு நிலைமைக்கு வந்திருக்கிறோம். அந்நிலையிலிருந்து இரண்டு மார்க்கங்கள் நமக்குத் தேவை. ஒருபுறம் லோகல் விஷயங்களும் தனி விஷயங்களும் கவனிக்கப்படவேண்டும். இன்னொருபுறம் பொதுவான விஷயங்களில் மனம் ஒற்றுமைப்பட்டு கவனிக்கவேண்டும். இம்மாதிரியான பிரிவை நன்கு அறியக்கூடிய முதல்தரமான ஏற்பாடு அந்தந்த பாஷை ஆதாரத்தில் போவதே என்று எனக்குப் படுகிறது. பல இதர ஏற்பாடுகளைவிட இது சிலாக்கியம். ஏனென்றால் எந்த முயற்சியாவது லோக ஸங்கிரஹத்தை தன் ஜயத்திற்கு முதற்காரணமாகக் கொண்டிருந்தால் அது கூட்டுறவே. ஜனங்களுக்கு அவர்களுடைய பாஷையிலேயே பேசாமல் அதை எப்படி நாம் நன்குபெற முடியும்? இது நன்கு புலப்படுகிறபடியால் நாம் பல மத்திய ஸ்தலங்களில் பாஷாந்தரத்தில் கான்பரன்ஸ் கூட்டவேண்டும், ஆந்திரர்கள் தங்கள் விஷயங்களுக்காக ஒன்று அல்லது இரண்டும் வைத்துக்கொள்ளலாம். தமிழர்கள் இரண்டு அல்லது அதிகமாகவும் வைத்துக்கொள்ளலாம். மலையாளிகள் ஒன்றும், கன்னடர்கள் ஒன்றும் வைத்துக்கொள்ளலாம். அவர்களுடைய வேலையின் பெரும்பாகம் சகஜமாய் கூட்டுறவின் பிரதம ஒழுக்கங்களை தெரியாதவர்களுக்கும், அம்மாதிரி ஏற்பாடு நாம் செய்யாவிடின் ஒருக்காலும் தெரிந்துகொள்ள முடியாதவர்களுக்கும் போதிப்பதாகும். இப்படியெல்லாம் செய்யும்பொழுதே பொதுச் சம்பந்தமான விஷயங்களும், பரஸ்பரக் குறிப்புகளை ஒப்பிடுதலும் கவர்ன்மெண்டுக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தைக் கவனிக்கும் விஷயங்களும் சாதாரணமாய் இந்த ஐக்கிய மாகாணக் கான்பரன்ஸில் வழக்கம்போல் வரவேண்டும்.

இப்பிரிவினை யுக்தமானதுதான் என்று மனதிற்பட்டால் இத்தகைய கான்பரன்ஸைக் கூட்டவேண்டிய மாதிரியை அனுசரிக்கவும், அதை நடத்தவேண்டிய சௌகரியங்களைச் சேகரிக்கவும், வருஷாவருஷம் ஆகும் தீர்மானங்களை நிறைவேற்றவும் ஏதாவது ஒரு ஏற்பாட்டைக் கைக்கொள்வது நமது கடமை. இங்கேகூட என்னுடைய ஆலோசனை என்னவென்றால், லோகல் யூனியன்களும் இராஜதானியிலுள்ள முக்கியமான யூனியனைச் சாராத சங்கங்களின் பிரதிநிதிகளும் தற்காலம் இக்கான்பரன்ஸின் முக்கிய மெம்பர்களாகலாம். இவர்கள் விசேஷமாய் இங்கிலீஷ் தெரிந்தவர்களா யிருப்பார்க ளாதலால் நமது வேலை மிகச் சுளுவாகவும் பிரயோஜனகரமாகவும் ஆகும். தவிர அவைகளை பல பாஷையில் மொழிபெயர்க்கும் சிரமமும் சாவகாசமும் இல்லாமற் போகும். மாகாணக் கோவாபரேடிவ் யூனியன் இன்னம் இத்தீர்மானங்களைப் பூர்த்திசெய்யும் ஏஜன்ஸியாக விருக்கும்.

இவ்வேற்பாடு ஒரு சார்பிற்கும் ஒருமுறைமைக்கும் தகுதியென்று காணப்பட்டால் இன்னொருமுறைமையில் இந்தியாமுழுமைக்கும் தகைமையுள்ளதாகக் காட்ட மேன்மேலும் விசேஷமான மன உருக்கம் தேவை. அம்மாதிரி இந்தியா முழுமைக்கும் உத்தியோகப்பற்றில்லாத முறையில் கான்பரன்ஸ் கூட்டத் தகுதியான காலம் வந்துவிட்டது. உத்தியோகப் பாங்கில் அப்போதப்போது ரஜிஸ்ட்ரார்களின் மீட்டிங்குகள் கூடுவது உங்களுக்குத் தெரியும். அப்பொழுது சில பிரமுகர்களான கூட்டுறவினர்கள்கூட சில சமயங்களில் ஆஜராக விடப்படுகிறார்கள். சில சமயம் அவர்களுக்குப் பேசும் சந்தர்ப்பம்கூடக் கொடுக்கிறார்கள். இம்மாதிரி சௌகரியம் கொஞ்சமும் போதாது என்பதை நீங்களெல்லாரும் ஒப்புக்கொள்ளுவீர்கள். நம்மது போன்ற மாகாணக் கான்பரன்ஸில் தேர்ந்தெடுக்கப்பட்ட டெலிகேட்டுகள் இந்தியா முழுமையையும் பற்றிய விஷயங்களை விவகரித்து அபிப்பிராய பேதங்களைச் சீர்தூக்கி தற்காலம் எண்ணிக்கையிலும் சிக்கல்களிலும் அதிகப்படுவதற் கேற்றபடி விஷய ஆராய்ச்சி செய்யக்கூடிய காலம், மிஸ்டர் சிவராவ் சமீபத்தில் காட்டியபடி வந்துவிட்டது. ஸிமலா அல்ல டில்லிதான் அம்மீடிங்கு கூடும் இடமாகும். தகுதியானபடி காலத்தையும் தீர்மானித்து இதர ஏற்பாடுகளையும் செய்யலாம். இது விரும்பத்தகுந்ததென்றும் அவசியமென்றும் உங்கள் மனதிற்பட்டு தயவுசெய்து உங்களபிப்பிராயத்தை உறுதியாய்த் தெரிவித்து அவ்வேற்பாட்டை நிறைவேற்ற யூனியனால் ஆகும்படி செய்வீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

நாம் அவசரமாய் கவனிக்கவேண்டிய இன்னொரு விஷயம் கூட்டுறவு வேலையில் ஜனங்களைப் பழக்குதலே. கூட்டுறவு ஊழியர்களுக்குள் இதுவரையில் காணப்படும் குறைகளுக்குக் காரணம் ஒரு ஏற்பாடான பழக்கமில்லாமையே என்று இப்பொழுது பொதுவாய் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. படிப்பில்லாக் குறையை நிவர்த்தி செய்யவேண்டும். இவ்விஷயமாய் கூட்டுறவு வெகுகாலம் ஊசலாவேண்டியிருக்கும். இவ்விஷயத்தில் போராட கணக்கில்லாத பணமும் மனிதர்களும் தேவை. இக்குறையைத் தவிர கூட்டுறவு வேலைக்காக வந்திருக்கிற அல்லது வந்துகொண்டிருக்கிற ஜனங்களை உடனே பழக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஏனென்றால், அப்படிப்பட்டவர்கள் உத்தியோகக் கூட்டுறவினர்களுக்கும் உத்தியோகப் பற்றில்லாக் கூட்டுறவினர்களுக்கும் மிகக் கவலையை விளைவித்து விட்டார்கள். அதற்குக் காரணம் ஏற்பாடான பழக்கமின்மையே. நாம் அசையாமல் உட்கார்ந்து கொண்டு இத்தகைய விஷயங்களை அவைகளின் போக்கின்படி விட்டுக்கொண்டிருந்த காலம் தாண்டிவிட்டது. மேலும் மேலும் அதிகமாகப் பழக்கவேணும் என்பது நமது கவனக் கொள்கையின் வார்த்தையாயிருக்க



வேண்டும். அப்பழக்கத்தை ஆரம்பிக்க ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனுக்கு தீர்மானமான போதனை கொடுக்காமலிருந்தால் பிசகு. நமக்காக வேலைசெய்ய ஒரு ஸப்கமிட்டி ஏற்படுத்தலாம். வேலை ஆரம்பிக்கவேண்டிய ஏஜென்ஸியான யூனியன், அதை நடத்தப் பொருளாதாரம், கைக்கொள்ளவேண்டிய முறை, பஞ்சாயத்தார்கள் சிகரிடேரிகள், சூபர்வைசர்கள் முதலியோர்களைப் பழக்கவேண்டிய விஷயங்கள் முதலிய இவைகளை அது ஏற்பாடு செய்யலாம். பம்பாயும் வங்காளமும் ஏற்கனவே இவ்விஷயத்தில் முன்னுக்கு வந்து, சிலாகிக்கத்தக்க ஆரம்பங்கள் சில செய்துவிட்டன. நாமும் அப்படியே செய்யக்கடவோம். இராஜாங்கமும் வெகு சந்தோஷமாய் உதவி புரியும். ஏனென்றால், நமக்கு உதவி செய்துகொள்ளும் முயற்சியே அவர்களுக்கும் உண்மையான உதவி புரிவதாக ஆகிறது. பம்பாய் கவர்ன்மெண்டு ஏற்கனவே இதற்காக ரூ. 4,000 இனாம் கொடுத்திருப்பதனால் நமது கவர்ன்மெண்டு தயங்குவதற்கு யாதொரு காரணமுமில்லை, ஆகையால் நாம் தீவிரமாய் வேலையை ஆரம்பிப்போம். எல்லாம் திருப்திகரமாய் முடியும்.

மேற்சொன்ன மாதிரி ஜனங்களை வேலையில் பழக்கவேண்டிய அத்தியாவசியத்தைத் தவிர்த்து இன்னொரு முக்கிய அம்சமும் அவ்வாறே கவனிக்கவேண்டியதாக இருக்கிறது. அதாவது, தற்காலக் கூட்டுறவினர்களுக்கும் கூட்டுறவினர்களாகக் கூடியபொது சமூகங்களுக்கும் கூட்டுறவின் ஒழுக்க முறைகளையும் சக்திகளையும் கற்பிக்கவேண்டியதே. இம்மார்க்கத்தில் வெகு கொஞ்சமாகத் தான் வேலை நடந்திருக்கிறது. அதன் அவசியமும் போதிய அளவு உணரப்படவில்லை. என்றாலும், நாணயப் பாங்கைத்தவிர்த்து இதர விஷயங்களில் கூட்டுறவைச் சம்பந்தப்படுத்த முயன்ற நம்மமவர்கள், இம்முறையில் துவக்கம் செய்யுமுன் ஏராளமான அறியாமைக் கடல்களையும் ஒழுக்கக் குறைகளையும் கடந்தே ஆகவேண்டியிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இக்குறைகள் நீங்கினால்தான் இவ்விஷயத்தில் உபயோகமான ஆரம்பம்செய்யலாம். உதாரணமாக, சேணியர்களின் விஷயத்தை எடுத்துக்கொள்வோம். மில் விஷயத்தையும் கைத்தறி விஷயத்தையும் பற்றிய அபிப்பிராயம் எப்படியிருந்தபோதிலும் தற்கால ஸ்திதி சேணியர்களுக்கே விசேஷ னனுகூலமாக இருக்கிறதென்று ஒவ்வொரு உண்மையான கூட்டுறவினரும் கூறலாம். இவ்வனுகூலம் கூட்டுறவினர்களே பருத்தி விளைவு, நெசவு, அச்சரக்குகளின் கிரய விக்கிரயம் முதலிய இவைகளைக் கையாடுவதனால்தான். என்றாலும் இவ்விஷயம் எங்கே ஆரம்பஞ் செய்யப்பட்டாலும் அங்கே போட்டி ஏற்பட்டு விடுகிறது. அப்போட்டி தங்கள் சௌகரியத்திற்குத் தடங்கலெ

ன்று உணரக்கூடியவர்களால் மாத்திரமல்ல, விஷயத்தில் யாதொரு சம்பந்தமுமில்லாதவர்கள் கூட இடைஞ்சல் செய்யவருகிறார்கள். அல்லது கூட்டுறவு ஆசுபத்திரிகளின் விஷயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். சென்ற ஏப்ரல் மாதத்தில் இவ்விஷயமாய் ஒரு தீர்மானமானபொழுது ஆங்காங்கு இவ்வேலை துவக்கமாகி நன்மைகளுண்டாகுமென்று தான் நீங்கள் நம்பி யிருந்தீர்கள். அநேக முறையில் ஆசாரச்சீர்திருத்தம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சென்னையில் சில நேசர்களின் உதவியைக்கொண்டு இவ்விஷயத்தைப் பரவவைக்கலாமென்று முயன்றபொழுது அத்தொழிலிலுள்ளவர்களெல்லாம் வெகு தீவிரமாய்த் தடுப்பார்களென்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். இது இப்மாதிரி இருக்கக்கூடாது. அநேக கூட்டுறவினர்களுக்கு இது யுக்தம் என்று படுவதாலும், அவசியமான தேவையாயிருப்பதாலும், இம்மாகாணமல்லாமல் இதர இடங்களில் கூட அப்படியேயிருப்பதாலும் மேற்கண்ட தடங்கலான நோக்கம் மிகவும் இரங்கத்தக்கது. உதாரணமாக, இவ்விஷயமாக நம்மை பம்பாய் தீவிரமாய் கவனிக்கிறது. வங்காளம் ஏற்கனவே இம்முறையில் கொஞ்சம் வேலையும் செய்து இவ்வேலையில் முழுநம்பிக்கையும் வைத்து வருகிறது. அல்லது திருவல்லிக்கேணி ஸ்டோருக்கு ஒரு மொத்தக் கிடங்கு ஏற்படுத்தும் விஷயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். சென்ற ஏப்ரல் மாதம் முதல் முதல் இவ்விஷயம் ஆலோசனைக்கு வந்த பொழுது அது எப்படி விவகரிக்கப்பட்டது என்பதை கவனித்தவர்களுக்கு நமது தலைவர்களே இன்னம் கூட்டுறவு வியாபாரத்தில் எவ்வளவு தூரம் பின்னடைந்திருக்கிறார்கள் என்பது நன்கு புலப்படும்.

அடுத்தவிஷயம் "உத்தியோகப் பான்மையைப் பலப்படுத்தல்." ஜூன் மாதம் முதல் புல்லடின் பக்கங்களில் இவ்விஷயமாய் வரையப்பட்டுள்ள சம்பாஷணைகள் எங்குமுள்ள கூட்டுறவினர்களுடைய கவனத்தையும் கவர்ந்திருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். உதாரணகாக, 'பம்பாய் குவார்டர்லி'ப் பத்திரிகை ஒரு பத்திராதிபர் குறிப்பில் 'உத்தியோக, முறைமையாக ஆக்குவதற்கு முடிவேயில்லை' என்கிறது. பங்காள ஜர்னல்கூட இங்குள்ள உத்யோக முறையிலில்லா கூட்டுறவினர்களை அநுசரித்தே பேசுகிறது. 'சாப்பிடுவதனால் பசிவருகிறது' என்னும் முறை இது. என்பதில் யாதொரு சமுசயமுமிருக்கமுடியாது. உத்தியோகப் பான்மையின் கக்ஷிதான் தெரிந்தேயிருக்கிறது. உத்தியோகப் பற்றில்லாதவர்களின் வசம் அத்தகையோர் கிடைக்கும்பக்ஷத்தில் நிர்வாகத்தை ஒப்புவிக்க அவர்களுக்கு சர்வ சம்மதம்தான். ஆனால், அவர்கள் அப்படிச் செய்கிறதில்லை. உத்தியோக சிப்பந்திகளை பலப்படுத்துவதென்றாலோ வெகு எளிதாயிருக்கிறது. பழய ரோமாபுரி வீரன் கதைபோல யாராவது ஒருவர் பூமியை உதைக்க மாத்திரம் வேண்டியது. அஸிஸ்



டெண்ட் ரஜிஸ்ட்ரார்களும்,இதர உத்தியோகஸ்தர்களும் கணக்கில்லாமல் கிளம்பிவிடுவார்கள். அம்மார்க்கமாகத்தான் கூட்டுறவு ஜனசம்மதமான நிஜமுன்னேற்றம் அடையுமா என்பதை அவர்கள் கவனிக்கவேண்டியதில்லை. அவர்களுடைய வேலை யென்னவென்றால், சாத்தியமான வழிகளில் பரிபாலனத்தை நடத்துவதே யொழிய தீர்க்கமாக இனி வரக்கூடியவற்றை கவனிப்பதில்லை. உத்தியோக முறையின் மந்திரஜாலம் உத்தியோகப்பற்றில்லாதவர்களுடைய நோக்கங்களைக்கூட ஒரு நொடியில் மாற்றப் போதுமானதாயிருக்கிறது. மிகவும் சமீபத்தில்தான் நியமனமாகி இன்னம் வேலைப்பழக்கத்தில் முற்றிலும் தேர்ச்சியடையாத ஒரு கௌரவ அஸிஸ்டெண்ட் ரஜிஸ்ட்ராரின் அபிப்பிராயம் இதுவிஷயத்தில் எப்படியிருக்கிறதென்று ஒப்பிட்டுப்பாருங்கள். சமீபத்தில், இன்னம் 9 அஸிஸ்டண்ட் ரஜிஸ்ட்ரார்களும், 50 இன்ஸ்பெக்டர்களுக்கு அதிகமாகவும், ஜாஸ்தியாக டிபார்டுமெண்டிற்கு நியமனமாக வேண்டுமென்று கோவாபரேடிவ் உத்தியோகஸ்தர்கள் கவர்ன்மெண்டைக் கேட்பதற்கு நியாயம் என்ன சொல்லுகிறார்களென்றால், யூனியன்கள் அநேக உதாரணங்களில் பிரயோஜன மற்றிருக்கின்றன, தற்காலம் இருப்பதுபோலவே விட்டுவிட்டால் ஜனங்களுடைய நாணயத்திற்கு பங்கம் வரும், ஆகையல் சூத்திரக்கயிற்றை நெருக்கிப்பிடித்துக்கொண்டே மறுபடியும் அவர்களைக் காலவரை சொல்லாமல் ஆட்டிவைக்கவேண்டும், என்பதே. இவையெல்லாம் உண்மையாயிருக்கலாம். ஆனால் இதற்குச் சிகிட்சை வேறுமாதிரி யிருக்கவேண்டும். அந்த மாதிரியானது இப்பொழுது கவர்ன்மெண்டைத் தூண்டியிருக்கும் மாதிரிக்கு நேர் எதிரிடையா யிருக்கலாம். நாம் இப்பொழுது முறையிடுவது என்னவென்றால் சிறிய தவறுகள் செய்யச் சுதந்தரம் நமக்கு வேண்டும் என்பதே. இவ்விஷயத்தைத் தீர்மானிக்கும்படி உங்களையும் கேட்பார்களென்று நினைக்கிறேன். நீங்கள் அந்த வேலையை அசட்டை செய்யவாவது அவசரமாய்த் தீர்மானிக்கயாவது மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

கடைசியாக கூட்டுறவுப் பொருளுதவி விஷயம்கூட இப்பொழுது மாகாணசம்பந்தமாகி யிருக்கிறது. அது சீக்கிரம் அரசாக்ஷியினதாகவே ஈசுவர கிருபையினால் ஆகும். ஸெண்டிரல் பாங்குகளும் ப்ரொவின்ஷியல் பாங்குகளும் அவைகளுடைய முறையில் மாறுபாடுகளை அடைந்துவருகின்றன. அநேக ஸெண்ட்ரல் பாங்கிகள், பாங்கிங் யூனியன்களாக துரிதமாய் மாற்றப்படுகின்றன. இம்மாறுபாட்டில் ஒரு ரகசியம் இருக்கிறது. அது சாதாரணஜனங்களுக்குப் புலப்படாது. அது என்னவென்றால், வாடிப்போன பிரபு ஆதிக்கம் இம்முறையினால் ஜன ஆதிக்கத்திற்குத் தலைமை வகிக்கிறது. ஏன் என்னும் கேள்விக்கு ஒருவரும் பதில் சொல்லமுடியாது. அதைப்பற்றி நமக்கு யாதொரு சச்சரவும்

வேண்டாம். ஏனென்றால், அதைப்பற்றிய தற்கால நோக்கம் எப்படியிருந்தாலும் அவர்களுக்குத் தெரிவதைவிட எவ்வளவோ சிலாக்கியமான ஏற்பாடே செய்கிறார்களென்பது திண்ணம். செண்ட்ரல் பாங்கிகளாவது, பாங்கிங் யூனியன்களாவது அணைககப்பட்ட சங்கங்களை எந்த மாதிரியான மேல் பார்வையாவது வைத்து ஆளுவதை இப்பொழுது தடுப்பதுபோல அவர்கள் தடுப்பதைப் பரிந்து பேச 'உல்ப்' என்னும் பெரிய கிரந்தகர்த்தா இருக்கிறார். தகுந்த பணமில்லாமலிருந்தால் முதலாளிக்கும் கடனாளிக்குமுள்ள சம்பந்தத்தை யொட்டின பழைய பாபம், கூட்டுறவில் கூட அடிக்கடி தலை யெடுக்கலாமென்பதை நாமும் அங்கீகரிக்கலாம். ஆகையால் லோகல் ஏகாதி பத்தியத்தை பக்தியுடன் கவனித்து ஆதரவுடன் காப்பதே நலம்: ஆனால் பாங்கிகள் பாங்கிங் யூனியன்களாகி, நிர்வாகம் கலந்துவிட்டால் அப்பொழுது மாறான கொள்கைகளுள்ள இரண்டு கக்ஷிகள் சாசுவதமா யிருக்க வேண்டாம். பரஸ்பர விஷய விளக்கத்திற்கும் உபகாரத்திற்கும் இரண்டு ஸெக்ஷன்களும் ஒன்றுகூடி உழைத்தல் நலம். லோகல் ஏகாதிபத்தியம் தன்னைச் சார்ந்த சங்கங்களைச் சரிவரக் கவனிக்கிறவரையில் அதில் தலையிடாதிருக்கலாமென்று இம்மாதிரி இன்னொரு பக்ஷத்தார் சொல்லலாம். ஆளுகை அங்கம் அமைப்பதைப் பற்றிய கடைசி வார்த்தைக்கு நாம் வந்துவிடவில்லை. அபாயத்திற்கு ஆதாரம் பலமா யிருக்கிறது. அதை விலக்குவதற்குத் தகுதியான சட்டங்களேற்படுத்துவதே சரியென்று எனக்குத் தோன்றுகிறதே ஒழிய, கடவுளால் சேர்க்கப்பட்ட இருபான்மைகளையும் பிடிவாதமாய்ப் பிரிப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை. நாம் முன்னேறிச் செல்லச் செல்ல விஷயத்தின் அவசியமும் அதிகப்படும். ஏனென்றால், இதுவரையில் கடன்களுக்கு சிபார்சுசெய்யவேண்டிய அவசியமான பொறுப்பு என்னும் சுமையை கவர்ன்மெண்டு நீக்கிக்கொள்ள விரும்புகிறது. யூனியன்கள் மெதுவாய் அந்த ஸ்தானத்திற்கு வருகிறது. பத்திரம் ரிஜிஸ்டர்செய்வது முதலிய சட்ட சம்பிரதாயங்களைக் குறைக்கப்பார்க்கிறார்கள். நாணயச் சங்கங்கள் விருத்தியாகி முன்னுக்கு வரவேண்டுமானால் ஏழை எளியவர்களுக்கு இதுவரையில் செய்ததையும் இப்பொழுது செய்துகொண்டிருப்பதையும் விட எவ்வளவோ மடங்கு அதிகமாய் உபகாரம் செய்யவேண்டும். பொருளுதவி செய்யும் யூனியன்களுக்கு சமதையாய் விளங்கிவரும் சூபர்வைசிங் யூனியன்கள் பொருதவி செய்யும் விஷயமாய் அவ்வளவு திறமை வாய்ந்ததாகக் காணப்படவில்லை. இம்மாதிரி நம்முள் பல பிரமுகர்களான கோவாபரேடர்கள் நினைப்பதோடும், பங்காளத்திலும் பம்பாயிலுமுள்ள கோவாபரேடர்கள் கூட அப்படியே நினைக்கிறார்கள். இந்நினைப்பிற்குக் காரணமில்லாம லிருக்காது. நீங்கள் இதை எந்த வழியிலாவது தீர்



மானிக்க வேண்டும். அல்லது தீர்க்கமாய் ஆலோசித்து கொஞ்ச காலத்திற் குள்ளாவது தீர்மானத்திற்கு வரவேண்டும்.

என தபிப்பிராயப்படி இவைகள் மிக்க அவசரமான மாகாண அவசிய விஷயங்களுள் சில. (இராஜாங்க அவசிய விஷயமென்று கூட அநேகமாய் சொல்லிவிட்டேன்) இவைகளை எல்லாம் உள்ளிருந்து பார்க்கும் முறையால் தெரிவித்திருக்கிறேன் என்று நம்புகிறேன். வெளிப்பார்வைக்குத்தோன்றுகிறபடி நமது விஷயம் இன்று அஸ்தமனக்திற்குள் விளக்கப்படும். பிறர் நம்மைப் பாப்பதுபோல நாமே பார்த்துக் கொள்ளக் கற்று நாளைக்கு நமக்கு முன் வைக்கும் தீர்மானங்களை நன்கு கவனிக்கும் பாங்கில் முறையில் திருத்திக்கொள்ளுங்கள். அதற்குள் உங்களுக்கு இன்னொரு முறை வரவேற்புக்கமிட்டியின் பெயரால் மிக்க சந்தோஷத்துடன் நல்வரவு கூறுகிறேன். எங்கள்சக்திக்கியன்றவாறுசெய்யும் உபசரணைகளை ஏற்று அதற்குத்தகுந்தபடி நீங்கள் சௌகரியம் செய்துகொள்ளும்படி வேண்டுகிறேன். இம்மட்டோடு நிறுத்திக் கொண்டு நாம் கேட்டு, கவனித்து அனுபவித்து மிகவும் கொண்டாடுவதற்காக அவர் வைத்திருக்கும் அருமையான வியாசத்தை உங்களுக்காகவும் எனக்காகவும் சொல்லும்படி நமது கீர்த்திபெற்ற பிரசிடெண்டைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### அனுதாபக் கடிதங்கள்.

காரியதரிசி மிஸ்டர். வி. வெங்கடசுப்பையா, கீழ்க்கண்ட பிரமுகர்கள் தாங்கள் வரக்கூடாமைக்கு வருந்தி ஆனால் கான்பரன்ஸை ஆசீர்வதித்து,; எழுதிய கடிதங்களைப் படித்தார்.—திவான் பகதூர், கே. கிருஷ்ணசாமி ராவ் சி. ஐ. இ., ராவ்பகதூர் கே. ராமஸ்வாமி அய்யர், ராவ் சாஹேப் வி. கருணாகரமேனன், திருவாங்கூர் ரஜிஸ்ட்ராரான மிஸ்டர் கிருஷ்ணய்யங்கார், மதுரை பி. எஸ். வெங்குசாமி அய்யர், சட்ரபூர் வ. சூரியநாராயணமூர்த்தி, மலையாளம் டிஸ்ட்ரிக்ட் பாங்கின் சிகரிடேரி, தேக அசௌகரியத்தினால் வரமுடியாமலிருந்த ரஜிஸ்டரார் மிஸ்டர் எப். ஆர். ஹெமிங்வே.

## இரண்டாவது நாள் நடவடிக்கைகள்.

1919-ம் ௵ டிசம்பர்௴ 30௳ செவ்வாய்க்கிழமை.

ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் 12 மணிக்கு கான்பரன்ஸின் நடவடிக்கைகள் மறுபடியும் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் 300 டெலிகேட்டுகளும் அநேக உத்தியோகஸ்தர்களும், பூனாவிலிருந்து வந்த ப்ரொபசர் வி. ஜி. காளே அவர்களும் வந்திருந்தார்கள்.

### சங்கங்களின் ரிபோர்டுகள்.

இன்றைய வேலைக் கிரமத்தின் முதல் இனம், சில குறிப்பிட்ட சங்கங்களின் ரிபோர்ட்டுகளைப்படிப்பதாக குறிப்பிட்டிருந்தது.

சேலம் முனிஸிபல் சிப்பந்திகளின் கோவாபரேடிவ் சொஸைடியின் ரிபோர்ட்டை மிஸ்டர், எஸ். கே. எக்னநாருயண அய்யர் படித்தார். பிறகு மதருஸ் ஸோஷல் ஸர்விஸ் லீக்கின் பார்வையில் நடந்தேறி வருகிற ஹைகோர்ட்டு ப்யூன்களுடைய சங்கத்தின் வர்த்தமானத்தைப் பற்றி மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் அவர்கள் சொன்னார். சென்ற வருஷத்தில் இது ஆரம்பமாவதற்கு முந்தி ஒரு டபேதார் இந்த பியூன்களுக்கு மாதம் 1-க்கு ரூபாய்க்குஇரண்டணு வட்டிவீதமும்இன்னொருவன்ஓரணு வட்டிவீதமும் கடன் கொடுத்துவந்தது வழக்கம். இப்பியூன்கள் வாங்கும் கடன்கள் சுமார் 1000 வரையில் இருந்தனவாகத் தெரியவந்தது. அந்த டபேதார்களுடைய பிடிப்பிலிருந்து இந்த பியூன்களை விடுவிக்கத் தீர்மானித்து இந்த லீக் அவர்களைச் சேர்த்து ஒரு கோவாபரேடிவ் சொஸைடியாக ஏற்படுத்தி ஆரம்பதனமாக ரூ. 500 சேகரம் செய்து அதை 7½ வட்டிக்குக் கடன்களாகக் கொடுத்து அச்சங்கம் வெகு திருப்திகரமாக வேலை செய்கிறது. அதனுடைய மாதிரி எங்கும் விசாலமாய் பின்பற்றததக்கது. பிறகு கீழ்ச்சேரி யூனியனுடைய ரிபோர்ட்டை அதனுடைய செகரிடேரி மிஸ்டர் சவுரய்யா நாயுடுகாரு படித்தார். கும்பகோணம் முனிசிபல் சிப்பந்திகளின் சங்கத்தின் ரிபோர்ட்டை தஞ்சாவூர் டி. ஆர். ஸ்ரீனிவாச அய்யங்காரும், கம்புளியம்பட்டி கிரய விக்கிரய சொஸைடியின் ரிபோர்ட்டை ராவ்சாஹேப் கே. எம். சின்னரங்கய கௌண்டரும் படித்தார்கள்.

### தீர்மானங்கள்.

1. சீர்திருத்தச் சட்டம்

"சீர்திருத்தச் சட்டத்தைத் தான் அங்கீகரித்ததாக நமது மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தியவர்கள் பகிரங்கப்படுத்தியதற்கு இவ்விராஜதானியிலுள்ள கூட்டுறவினர்கள் இம்மீட்டிங்கு மூலமாய் தங்களுடைய நன்றியறிதலோடுகூடிய தாழ்மையான வந்தனைகளைப்புரிகிறார்கள். மேலும் இந்தியாவின் கூட்டுறவு இயக்கம், இப்பகிரங்கத்தினாலும்: சீர்திருத்தச் சட்டத்தினாலும் விசேஷமாய் பலப்பட்டு முன்னுக்குவரும் என்று நம்புகிறார்கள்."



இத்தீர்தானத்தைக் கொண்டுவருகையில் அக்கிராசனாதிபதி அதை சிலாகித்துப்பேச அநேகவார்த்தைகள் அவசியமில்லையென்றார். தர்க்கத்திற்கிடமான தேசீய விஷயங்களில் தலையிடாவண்ணம் சௌகரியமான தடை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தீர்மானவிஷயம் மிகவும் கவனிக்கத்தக்கது. இந்த பகிரங்கப்பேச்சு 1857-ம் வருஷத்தில் காருண்ய சக்ரவர்த்தினியார் விக்டோரியா மஹா இராணியார் அவர்களின் பகிரங்கப் பேச்சுக்கு அடுத்த படியாகப் புகழத்தக்கது. காருண்ய சக்ரவர்த்தியின் வார்த்தையினால் தங்களுக்கு அந்தரங்கமான உருக்கம் ஏற்படவில்லையென்று யாராவது சொன்னால் அது தவறு. ஆகையால் இத்தீர்மானத்தை அங்கீகரிக்கச் சொல்ல தனக்கு மிகச் சந்தோஷமுண்டாகிறதென்று சொன்னார். இத்தீர்மானம் ஏகோபித்து நிறைவேற்றப்பட்டது.

### II. இளவரசரின் விஜயம்.

" சட்டசபைக் கூட்டத்தை, 'சீர்திருத்த ஆக்டு'ப்பிரகாரம் அமைப்பதற்காக நமது சக்கிரவர்த்தி, சமீபத்தில் இளவரசரை இந்தியாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்திருப்பதைக் கேட்க இக்கான்பரன்சு மிகவும் சந்தோஷப்படுகிறதுடன் இளவரசருக்கு பக்தி பூர்வமான நல்வரவு கூறுகின்றது."

இத்தீர்மானங்கூட அக்கிரசனாராலேயே பிரரேபணைசெய்யபட்டது. தற்போதைய அரசர் பெருமான் இந்தியாவுக்கு வந்து இந்தியர்களுடைய நிலைமையைநேரில் தெரிந்துகொண்ட பிறகே தன்னுடைய இராஜசபைப் பேச்சில், இந்நாட்டின் ஆளுகையை வகித்தவர்களைப்பார்த்து, நம் நாட்டாரிடம் கருணை காட்டச்சொன்னார்.—நமது இளவரசரின் விஜயத்தாலும் அவ்வாறே கவனிக்கத் தக்க வார்த்தைகள் ஏற்படுமென்றும் அதனால் அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நன்மையை அதிகமாய் சிலாகிக்க முடியாதென்றும் சொன்னார்.

இத்தீர்மானம் ஏகோபித்து நிறைவேற்றப்பட்டது.

### III. காலஞ்சென்ற ஸர். வி. ஸி. தேசிகாசாரியார்.

"ஸர் வி. ஸி. தேசிகாசாரியின் மரணத்தைக் குறித்து இக்கான்பரன்ஸ் மிக்க அனுதாபம் காட்டுகிறது. இவ்விராஜதானியின் கூட்டுறவு நிதியை ஏற்படுத்துவதில் அவர் செய்த வேலைகள் வெகு காலம் வரைக்கும் நன்றியறிதலோடு நினைக்கப்படும்."

இத்தீர்மானமும் அக்கிரஸனாராலேயே பிரரேபணை செய்யப்பட்டது. ஸர். வி. ஸி. தேசிகாசாரியரின் வாழ்நாளில் பல நிலைமைகளில் மிஸ்டர்

டிஸ் சேஷகிரி ஐயருக்கு பரிசயமுண்டு. காங்கிரஸிலும், ஹைகோர்டு வக்கீலாகவும், ஒருவாறு கூட்டுறவினராகவும் வெகு காலம் அவர்கள் சகபாடிகளா யிருந்தார்கள். கூட்டுறவு இயக்கம் அடைந்த நஷ்டத்தையும் கூட்டுறவினர்களுடைய துக்கத்தையும் தகுந்த மாதிரியாக வெளிப்படுத்த இத்தீர்மானம் போதாதென்று அக்கிராசனர் அபிப்பிராயப்பட்டார். கூட்டுறவினர்களுள் அவர் இராஜாவாக யிருந்தார். அவருடைய நஷ்டம் ஈடுபடுத்தத் தக்கதன்று.

எல்லோரும் நின்றுகொண்டு மௌனமா யிருக்க் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## IV. ஸ்திரீகளின் கூட்டுறவு.

"கூட்டுறவு இயக்கத்தைப் பூர்ண ஜயமடையச் செய்யும்பொருட்டு ஸ்திரீகளுடைய கூட்டுறவையும் இக்கான்பரன்ஸ் கோருகிறதுடன் சாத்தியமான இடங்களிலெல்லாம் அவர்களுக்காகவே தனியாக நாணயச் சங்கங்கள் ஸ்தாபித்தும் இது விஷயமாய் லேடீஸ் க்ளப்புகளின் ஆதரணையைப் பெறச்செய்தும் உபகரிக்கலாமென்று இக்கான்பரன்ஸ் சிபார்சு செய்கிறது."

மிஸ்டர் டி. கே. ஹனுமந்தராவ் இத்தீர்மானத்தைப் பின்வருமாறு பிரரேபித்தார் :—

"நமது இயக்கம் ஜயமடைய, ஸ்திரீகள் எடுத்துக்கொள்ளக்கூடிய வேலையைப்பற்றிப்பேசவருகிறேன். கூட்டுறவு முறையில் பேசுவோமானால் இந்தியாவில் ஸ்திரீகளின் கூட்டுறவு விசேஷ பாகமாகத்தானிருக்கிறது. பல மாதிரிகளில் கவனித்தாலும் உற்பத்தி செய்கிறவர்கள் கூட அவர்கள் தான். நமது தேசத்திற்கே ஆஸ்தியாயிருக்கும் சரக்கை அவர்கள் உண்டுபண்ணுகிறார்கள். அவர்களாலாகும் சரக்கு, போதிய அளவு நல்லதா யில்லாவிட்டால அக்குற்றம் உபாத்தியாருடையதே. ஜீவாதாரம் அவர்களே என்பது ஒவ்வொரு அருத்தத்திலும் பொருந்தும். ஒருக்கால் இக்கூட்டுறவு இயக்கம், குழந்தைகளைப் பெறுதல், அவர்களைக் காப்பாற்றுதல், அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்தல் முதலிய இவை ஒன்றிலும் சம்பந்தப்பட்டதல்ல. பண்டைய நாட்களில் எப்படி யிருந்ததென்று எனக்குத் தெரியாது. இப்பொழுதோ குடும்ப நிர்வாகம் முழுதும் அவர்கள் கையில்தான் இருக்கிறது. முக்கியமாய் ஒருவன் கடன் வாங்கப்போனால் அதற்குக் காரணம் அவன் சம்ஸாரம் தான் என்று நினைக்கிறேன். ஒருவன் பிரம்மசாரியா யிருந்தபொழுது சிக்கனமாயிருந்து வரவுக்குத் தக்கபடி செலவழித்துக்கொண்டிருந்தால் கலியாணமான பிறகு ஏன் அப்படி யிருக்கக்கூடாது? நான் ஒரு இங்கிலீஷ் பாடகனல்ல. ஆனால் ஒரு இங்கிலீஷ் பாட்டுத் தெரியும். அதாவது, "ஒருவன் பிரமசாரியா யிருந்த வரையில் சந்தோஷமாக யிருந்தான்.



ஆனால் கலியாணமான வுடன் 'வரவைவிட செலவு அதிகமாய்விட்டது' என்பதைக் குறிப்பதே. ஆகையால் 'கடனாளியாதல்' என்னும் விஷய சோதனை செய்வதில் ஸ்திரீகள் மிகவும் உபகரிக்கலாம். ஒருவேளை கடனாளியாவதற்கே அவர்கள் காரணமாகிறார்கள். ஆனால் தொழிலாளர் வகுப்பு ஸ்திரீகளைப்பற்றி இம்மாதி சொல்லமுடியாது. இங்கே கணவன் குடித்து மயங்கிக்கிடக்கிறான். ஸ்திரீகள் பாடுபட்டுச் சம்பாதிக்கிறார்கள். எப்படியானாலும் மத்திய வகுப்பு அல்லது தாழ்ந்த வகுப்பு ஸ்திரீகள் ஜனங்களின் பொருட்பாங்கில் விசேஷப் பொறுப்புள்ளவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் வேலை, கூட்டுறவில் சம்பந்தப்பட்ட வரையில் நான் ஒன்று சொல்லக்கூடும். எனக்கு நாணயச்சார்பைவிட, ஸ்டோர் சார்பாகத்தான் அதிகம் தெரியும். ஒருஸ்டோரை நிர்வாகம்செய்வது எப்பொழுதும் கடினம் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஒருஸ்டோரிலிருந்து மட்டச்சரக்காக வாங்கிவந்துவிட்டால் வீட்டிலிருந்து ஸ்திரீகள் அதைத் திருப்பிவிடுகிறார்கள். ஆகவே, நல்லசரக்குகளாகத் தேர்ந்தெடுப்பதில் அவர்கள் சமர்த்தர்கள். அப்படியிருந்தும் உண்மையில் அவர்களுக் குரித்தான ஸ்டோர் நிர்வாகத்தில் அவர்கள் சேர்க்கப்படாமலிருத்தல் பரிதபிக்கத்தக்கதே. தேசத்தின் பொருளபிருவித்தி விஷயமாக ஸ்திரீகள் விசேஷ சிரத்தை யெடுத்துக்கொண்டிருக்கும் இங்கிலாந்தில், ஸ்திரீகளின் கோவாபரேடிவ் கில்டுகளை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நான் பழைய சம்பிரதாயக் கட்டுள் அகப்பட்டவன். என்றாலும், உபயோககரமாகவும், இலாபகரமாகவும் அவர்கள் ஈடுபடக்கூடிய சிலவிஷயங்க ளிருக்கின்றன. அத்தகைய கில்டுகளில் இயக்கத்தின் ஒழுக்கங்களை எப்பொழுதும் மனதில் வைத்துக்கொண்டு விசேஷமான வேலை செய்கிறவர்க ளிருக்கிறார்களென்று கேள்விப்படுகிறேன். உதாரணமாக, மொத்த வியாபாரக் கூட்டுறவுச் சங்கத்தில், ஸ்திரீ வேலைக்காரர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று போராடி அப்படியே வாங்கிக்கொடுத்தார்கள். இந்தியாவிலும் அத்தகைய கிளர்ச்சி ஏற்படுவதில் இந்தயூனியனுக்கு சம்மதம் என்றும் அதன் சார்பாக ஆமோதிக்க அநேகர் இருக்கிறார்கள் என்று காட்டுவதற்கும், வருஷத்திற்கு ஒருமுறை தீர்மானம் மாத்திரந்தானா நாம் செய்கிறது? கும்பகோணம் உபாத்தியாயர்களின் கோவாபரேடிவ் சொஸைடியில் இரண்டு ஸ்திரீகள் மெம்பர்களா யிருக்கிறார்களென்றும் இன்னம் அநேகர் சேர விரும்புகிறார்களென்றும் சொல்ல எனக்கு திருப்தியாயிருக்கிறது. இவ்விஷயமாக இன்னம் அதிகப்பிரயத்தனங்கள் செய்யவேண்டியது அவசியம். முக்கியமாக ஸ்டோர் சார்பாகச் செய்யவேண்டும். ஸ்திரீகளும் சேர்ந்துழைக்கும்படி அவர்களுக்கு ஊக்கமுண்டாக்கவேண்டும்.

இத்தீர்மானத்தை மிஸ்டர் எஸ். கே. எக்ஞநாராயணய்யர் தமிழில் பின்வருமாறு ஆமோதித்தார். ஸ்திரீகளுக்கு தங்கள் விஷயங்களை நிர்வாகஞ் செய்து கொள்ளத்தகுந்த சமர்த்தியம் இருக்கிறதென்பதில் சந்தேகமே வேண்டாம். கலியாண சந்தர்ப்பங்களில் அவர்கள் கொடுக்கும் திட்டம் சரியாக இருக்கிறது. ஒருகாரியத்தை ஏற்படுத்தும் சக்தி அவர்களிடம் அருமையாயிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஸ்ரீகள் சீட்டுகள் ஏற்பாடுசெய்து சரிவர நடத்தி வருகிறார்கள். அவர்களிடம் பணத்தைக் கொடுத்து, நகைவாங்க எளிதாகப் பணம் கிடைக்கும்பொருட்டு கோவாபரேடிவ் சொஸைடியில் பங்கெடுத்துக்கொள்ளச்சொன்னால் நன்றாயிருக்கும் என்று இவ்வாறு சொன்னார்.

ராவ்சாஹேப் சேதுராமய்யர் இத்தீர்மானத்தைத் தமிழில் ஆதரித்துப்பேசி அவர்களுக்கு ஸ்டோர் ஸொஸைடிகளோடு, உற்பத்தி சொஸைடிகளும் ஏற்பாடு செய்ய்பலாம் என்றார். ஏனென்றால், அவர்கள் பசு, எருமை இவைகளைக்கூட வைத்துப் பராமரிக்கிற வழக்கமுண்டு. பண்டைய காலங்களில் புஷ்பச்செடி வளர்த்தல், துணி நெய்தல், முதலிய வேலைகளில்கூட ஸ்திரீகள் ஈடுபட்டிருந்தார்கள்.

இத்தீர்மானத்தை ‘வோட்’டுக்குக்கொண்டுவருமுன் பிரசிடெண்டவர்கள் கீழ்க்கண்டவாறு சொன்னார்—“ஸ்திரீகளுக்காக ஒருசங்கம் ஸ்தாபிக்கப்பட்டு அவர்களைக்கொண்டே அதற்கு முதல் ஏற்படுத்திக்கொள்ளும்படிசெய்தால் காலக்கிரமத்தில் அவர்களுடைய பணங்களை நகைளில் ஈடுபடுத்துவதற்கு பதிலாக கைத்தொழில்கள் முதலியவைகளின் விருத்திக்காக உபயோகிப்பார்கள்”என்பது எனது திண்மையான அபிப்பிராயம் என்றார்.

இத்தீர்மானம் மீட்டிங்கில் வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது

## V. கட்டடச்சங்கங்கள்.

பிறகு மிஸ்டர் வி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரரேபணை செய்தார்.—

“கிராமப்பரப்புகளிலும் நகரப்பரப்புகளிலும் கட்டடச் சங்கங்களை ஸ்தாபிப்பதற்காக ஒரு பிரத்தியேக உத்தியோகஸ்தர் அல்லது உத்தியோகஸ்தர்கள் நியமனமாக வேண்டுமென்று இக்கான்பரன்ஸ் சிபார்சு செய்வதோடுகூட, ஏழைவகுப்பினர்களின் சங்கங்களுக்காக ஆரம்பத்தில் இலகுவான வட்டியில் பணம் கிடைக்கச்செய்யும்படி இக்கான்பரன்ஸ் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகிறது.”

இதைப்பற்றித் தமிழில் பேசி, கோயமுத்தூர், உதகமண்டலம், மதுரை, மாம்பலம் ஆகிய இவ்விடங்களிலுள்ள கட்டடச் சங்கங்கள், சொல்லிக்கொள்ளும்படியாக ஒருவேலையையும் இதுவரையில் நிதரிசன



மாகச் செய்யவில்லை என்றார். கோயமுத்தூரில் வீடுகள் கட்டிக்கொள்வதற்கென்று கடன் மாத்திரம் கொடுத்தார்களேயொழிய கட்டிக்கொடுக்கவில்லை. உதகமண்டலத்தில் இவ்வளவு பெரிய ஏற்பாடு சாத்தியமில்லையென்று வேலை நடக்கவில்லை. மதுரையில் கொஞ்சம் நிலம் வாங்கினதோடு வேலை நின்று விட்டது. மாம்பலத்தில் உபயோககரமாக ஒன்றும் நடைபெறவில்லை. இதற்கெல்லாம் காரணம் சௌகரியக்குறைவே. இக்குறையில் முக்கியமானது இலகு வட்டியில் பணம் கிடைக்காமையே: அதாவது கோவாபரேடிவ் சொஸைடிகளிலிருந்து கிடைக்கக்கூடிய 100-க்கு 8 ரூ. அல்லது 9 ரூ. வட்டியை விட 2 ரூ. அல்லது 3 ரூ. வட்டி குறைவாகக்கிடைக்காமையே. இத்தீர்மானத்தின் நோக்கம் என்னவென்றால், கட்டடசங்கங்கள் ஸ்தாபிப்பதற்கென்றும் அதற்காக கவர்ன்மெண்டிலிருந்து இலகு வட்டியில் பணம் வாங்கிக் கொடுப்பதற்கென்றும் ஒரு தனி உத்தியோகஸ்தரை நியமிப்பதே. இந்தியா கவர்ன்மெண்டு ஏற்கனவே 1914-ம் வருஷத்தில் பணம் கொடுக்க உத்திரவளித்திருக்கிறார்கள். ஆனால் சண்டை அசந்தர்ப்பத்தினால் அதைப்பெற முடியவில்லை. ஏழைவகுப்பினர்களுக்கு வீடுகளமைக்கவென்று ஐந்து லக்ஷம் ரூபாய்கள் கொடுப்பதாக கவர்ன்மெண்டார் சம்மதித்திருந்தார்கள். ஆனால் எத்தகையோர்கள் ஏழைவகுப்பினர்கள் என்று நிர்ணயிக்கமுடியவில்லை.

ஏககாலத்தில் அநேக கட்டடச்சங்கங்களுக்கு கவர்ன்மெண்டு உபகாரம் செய்தல் எப்படி சாத்தியம் என்று என்னைக் கேட்டால், ஏழைகளுக்கு நல்ல வீடுகள் கட்டிக்கொடுக்கப்பணம் செலவழிப்பதனால் மருந்துகள் வாங்குவதிலும் ஆஸ்பத்திரிகளின் நிர்வாகத்திலும் ஏற்படும் அனாவசியச்செலவுகள் மிகுதிப்படுமென்பேன் என்றார். கட்டடச்சங்கங்களுக்காக கவர்ன்மெண்டார் ஸ்திரமாகப் பண உதவி செய்துகொண்டிருக்க வேண்டுமென்று அவர் அபிப்பிராயப்படவில்லை. சங்கங்களுக்குப் போதிய அளவு டிபாஸிட்டுப் பணங்கள் வந்துசேருகிறவரையில் மாத்திரம் உதவி செய்தால்போதும் என்றார்.—

கோயமுத்தூர் மிஸ்டர் சி. ஆர். இராமஸ்சாமி அய்யங்கார் இத்தீர்மானத்தைத் தமிழில் ஆமோதித்தார். கட்டடச்சங்கங்கள் ஏற்படுவது ஒரு அவசியமானவிஷயம்என்றார்.கோயமுத்தூரில் ஓட்டச்செக்கார் என்னும் ஒரு ஜாதியாருக்கு கவர்ன்மெண்டிலிருந்து இலகுவட்டியில் முனிசிபாலிடி மூலமாய் கடன் கிடைத்தது. அந்த மாதிரி ஏற்பாட்டில் ஒவ்வொரு இடத்திலும் சங்கங்கள் ஸ்தாபனமாகவேண்டும். இத்தகைய ஏற்பாடுகள் கவர்ன்மெண்டுக்கு சம்மதம் என்பது மிஸ்டர் பாடிஸன் துரையின் நியமனத்தினால் தெரிகிறது. ஆகையால் இத்தீர்மானம் நிறைவேறினால் விஷேசமாகப் பேசப்படுகிற வீடுகட்டும் விஷயம் திருப்திகரமாகவும் எளிதாகவும் முடியும். இவர்கள் கட்டடச்சங்கங்களுக்கென்று சாத்திய

மானவரையில் ஏராளமான டிபாஸிட்டுகளைப் பெறமுயலவேண்டும். பிறகு கவர்ன்மெண்டின் உதவியைக்கோரவேண்டும். மிஸ்டர் வி. வெங்கட சுப்பையா கீழ்கண்ட திருத்தத்தைப் பிரேரேபித்தார்:—

"ஏழைகளுக்காகவென்று உத்தேசிக்கிற கோவாபரேடிவ் கட்டடச் சங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் ஆரம்பத்தில் இலகுவட்டியில் பணம் கிடைக்கச்செய்து அத்தகைய சங்கங்களின் நிர்வாகச்செலவுகளுக்காகப் பொருளுதவியும் கூடச் செய்யவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது. மேலும் லோகல் போர்டுகளும் முனிசிபாலிடிகளும் கோவாபரேடிவ் கட்டடச்சங்கங்களுக்கு ஆதரவை புரியவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது."

இப்பிரேரபணை சம்பந்தமாய் அவர் சொன்னதாவது:—என்னுடைய திருத்தத்தீர்மானத்தின் நோக்கம் என்னவென்றால் ஒரு தனி உத்தியோகஸ்தரின் நியமனத்தை விலக்குவதே. ஒரு தனி உத்தியோகஸ்தரை நியமிப்பதென்றால் சுமார் ஆயிரம் ரூபாய் மாதம் ஒன்றுக்கு செலவாகும். அதாவது வருஷத்திற்கு பன்னிரண்டாயிரம் ரூபாய். இதைக் கட்டடச் சங்கங்களுக்கு இலகுவட்டிக்கடன்போலக் கொடுத்தால் வருஷம் 1-க்கு 100க்கு $1\frac{1}{2}$ ரூ. வட்டிவீதம் 8 லக்ஷம் ரூபாய்க்கு வட்டியாகும். இப்பொழுது கவர்ன்மெண்டு 100-க்கு $5\frac{1}{2}$வட்டி வீதம் கடன் வாங்குகிறது. தனி உத்தியோகஸ்தருக்காகத் தீர்மானிக்கும் பணத்தைச் சேர்த்து கட்டடச் சங்கங்களுக்கு 100க்கு 4 ரூ. வட்டிவீதம் 8 லக்ஷம் ரூபாய் கொடுக்கக்கூடும். இப்படிச் செய்தல் கட்டடச்சங்கங்களுக்குத் தனி உத்தியோகஸ்தரை நியமிப்பதைவிட விசேஷ உதவியாகும். தனி உத்தியோகஸ்தர்கள் மீது எனக்கு யாதொரு பொறாமையும் கிடையாது. தனி உத்தியோகஸ்தர்கள் நியமனமானாலும் கூட அவர்களுக்கு இலகுவாகப் பணம் கிடைக்காத வரையில் கட்டடச்சங்கங்கள் முன்னுக்கு வரும் என்று நிச்சயம் சொல்ல முடியாது. தற்காலம் இவ்விராஜதானியில் ஒருடஜன் கட்டடச்சங்கங்களுக்கு மேல் இருக்கின்றன. ஒரு ஸ்திரமான வேலையும் அவர்களால் செய்யமுடியாமற் போனால் அது தனி உத்தியோகஸ்தர் இல்லாக்குறையினாலல்ல. இலகுவாகப் பணம் கிடைக்காமையினாலேயே. ஒவ்வொரு அஸிஸ்டெண்ட் ரஜிஸ்ட்ராரும் ஒவ்வொரு கௌரவஸ்தாபகரும் கட்டடச்சங்கங்களை ஸ்தாபிக்க மிக்க ஆவலுள்ளவர்களாகத்தா னிருக்கிறார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் வேலை செய்வதுதான் கஷ்டம். உதாரணமாக சமீபத்தில் சென்னையில் ஒரு சங்கம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. ஆனால் அதன் வேலையை ஆரம்பித்தல் கஷ்டமாய்விட்டது. ஒரு தனி உத்தியோகஸ்தர் அம்மாதிரிச் சங்கங்களின் நோக்கங்களையும் ஆசைகளையும் பரவும்படி மாத்திரம் செய்யலாம். அவரை இலகுவட்டிக்குப் பணம்



வாங்கிக்கொடுக்கும்படி எதிர்பார்க்க முடியாது. இலகுவட்டிக்குப் பணம் கொடுக்கக்கூடிய ஒரே அதிகாரி கவர்ன்மெண்டே. ஆகையால் தனி உத்தியோகஸ்தரின் நியமனம் வேண்டுமென்று அவர்களைக் கேட்பதற்குப் பதிலாக இலகுவட்டிக்குப் பணத்தைக் கொடுக்கும்படி கேட்போம். 100க்கு 4ரூ. வட்டி வீதம் ஒவ்வொரு வருஷமும் 8 லக்ஷம் ரூபாய் கடன் கிடைத்தால் ஏழைகளுக்கு ஆயிரக்கணக்கான வீடுகளை வருஷாவருஷம் கட்ட முடியும்.

தீர்மானத்தைப்பற்றிய எனது திருத்தத்தின் பிற்பாகத்தில்(ஸப்ஸிடிகள்) இனாம்களைப்பற்றி பிரஸ்தாபிக்கிறேன். ஏனென்னறால், அத்தகைய உபகாரத்தொகையில்லாமல் ஏழைகள் கொடுக்கவேண்டிய வாடகை விகிதம் அதிகமாக ஆகும். நாட்டின் விசேஷத்தேவை அதிக வீடுகளும் குறைந்த வாடகைகளுமே. சென்னைநகரில் இரண்டு அல்லது மூன்று ரூபாய்கூட வாடகை கொடுக்க முடியாத குடும்பங்கள் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. உயர்ந்த வாடகைகளினால் விசேஷ நெருக்கமும் அதனாலாகும் தீமைகளும் பெருகுகின்றன. ஆகையால் நிர்வாகச் செலவுகளுக்கு நமக்கு (ஸப்ஸிடிகள்) இனாம் கிடைத்தால் கட்டடச் சங்கங்கள் எளிதாக நடைபெற்று ஏழைகள் மலிவும், சுகாதாரமுமான வீடுகளைப் பெறும்படி செய்யலாம். இது கோவாபரேஷன் கமிட்டியாரின் சிபார்சை அனுசரித்திருக்கிறது.

தெலுங்கு டெலிகேட்டுகள் கேட்டுக்கொண்டதன் பேரில் மிஸ்டர் வெங்கடசுப்பய்யா தன்னுடைய பேச்சைத் தெலுங்கு பாஷையில் விவரித்துச் சொன்னார்.

மிஸ்டர் மகமத் ஸாதுல்லாபாக்ஷா சாஹேப் இத்திருத்த தீர்மானத்தை ஆமோதித்தார்.

பிரசிடெண்டவர்கள் கீழ்க்கண்டவாறு:—தமிழில் பேசினார்:—"சென்றமார்ச்சு மாதத்தில் 'ஹௌஸிங் ஆக்டு என்னும் வீடுகட்டும் சட்டம் ஒன்று இங்கிலாந்தில் அமுலுக்குவந்தது, இச்சட்டப்படி (Public utility societies) பொதுப்பிரயோஜன சங்கங்கள் உண்டாக்கப்பட்டன. கோவாபரேடிவ் சொஸைடிகளில் சேருவதுபோல அநேக ஜனங்கள் இச்சங்கங்களில் சேர்ந்து ஏழைகளுக்கு வீடுகட்டிக்கொடுக்கும் வேலையை ஏற்றுக்கொண்டார்கள். 100-க்கு 5-வட்டி வீதம் இச்சங்கங்களுக்கு கடன் கொடுப்பதாய் கவர்ன்மெண்டார் வாக்களித்திருக்கிறார்கள். சங்கங்களுக்கு ஏற்படும் செலவுகளில் ஐந்தில் இரண்டுபங்கைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகக்கூட சொல்லியிருக்கிறார்கள். சுகாதாரமற்றதும் வியாதிகரமுமான கட்டடங்களில் வசித்தலினால் வரக்கூடிய அநேக நிவர்த்திக்கக்கூடிய வியாதிகள் அத்தகைய கட்டடச்சங்கங்களேற்படுவதனால் நாசமடையும். ஆகையால் இங்கிலாந்தில் செய்வதுபோலவே இவ்வி

டத்துக் கட்டடச் சங்கங்களுக்கு ஏன் இனும் கொடுக்கக்கூடாது? அப்படிப்பட்ட பிரஸ்தாபம் ஏன் இங்கே செய்யவில்லை. கவர்ன்மெண்டார் இனும் கொடுக்கமாட்டோம் என்று சொல்லமுடியாது. அவர்களுக்கு யாதொரு ஆக்ஷேபணையும் இருக்காது என்பதில் எனக்கு நிச்சயம்."

கோயமுத்தூர் மிஸ்டர் வி. வி. வெங்கடரமணய்யங்கார், தனி உத்தியோகஸ்தர் நியமனமாவதனால் கட்டடச் சங்கங்கள் விசேஷ விருத்தியடையக்கூடும் என்பதைக் காட்டினார். எப்படியென்றால், வருஷாந்தர ரிபோர்டு கவர்ன்மெண்டுக்கு அவர்கள் தாங்கள் செய்த வேலையைப்பற்றி கட்டாயமாய் அனுப்பவேண்டும். தற்காலத்திலுள்ள அஸிஸ்டெண்ட் ரஜிஸ்ட்ரார்கள் தாங்கள் செய்த நாணயச்சங்க வேலைகளைப்பற்றித்தான் ரிபோர்டு செய்து கொள்ளவேண்டியது.

தனி மாதிரியான சங்கங்களுக்காக தனி உத்தியோகஸ்தர்கள் வேண்டுமென்று கேட்பது உசிதமென்றுதன் மனதில் படுவதாக மிஸ்டர் வி. என். கிருஷ்ணசாமி அய்யர்சொன்னார். ஜனங்களுக்குப் போதிய அனுபவம் இருக்கிறதினால் நாணயச் சங்கங்கங்கள் விஷயமாக தனி உத்தியோகஸ்தர்கள் வேண்டியது அவசியமில்லை என்றார். தனி உத்தியோகஸ்தரின் நியமனம் எதற்கென்றால் கட்டடச் சங்கவேலைகளுக்கு அவரைப் பொறுப்பாளியாக்குவதற்கும் அவைகளை விருத்திசெய்யும் வழிகளையும் ஏற்பாடுகளையும் காட்டிக்கொடுக்கும்படி செய்வதற்குமே.

திருத்தத் தீர்மானம் முதலில் மீட்டிங்கில் வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

## VI. கூட்டுறவுப் பயிற்சி.

கீழ்க்கண்ட தீர்மானத்தை மிஸ்டர் வி. பி, சுந்தரராவ் பிரேரேபித்தார் :—

"உத்தியோகப்பற்றில்லாத" கூட்டுறவு நிர்வாகர்களைப் பழக்கவேண்டிய, அவசரத் தேவையை முன்னிட்டு எல்லா கிராம நாணயச் சங்கங்களும் ஸெண்ட்ரல் சங்கங்களும் தங்களுடைய நிகர இலாபத்தின் ஒரு அம்சத்தை நியதமாய் கொடுத்துவரும்படிக்கும் இவ்விஷயமாய் தகுந்த கணக்குகளை ஏற்படுத்த தகுதியான ஜனங்களை அதற்காக நியமனம் செய்யுமாறு ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனைக் கேட்டுக்கொள்ளும்படிக்கும் இதற்காக தாராளமாய் இனும் கொடுக்கும்படி கவர்ன்மெண்டைக்கேட்டுக்கொள்ளும்படிக்கும் இக்கான்பரன்ஸ் கோருகிறது."
ஒவ்வொரு சங்கத்தின் வேலையிலும் நான்கு முக்கிய அங்கத்தினர்கள் ஈடுபடுகிறார்கள் என்றார். முதலாவது 'ஜனரல் பாடி' என்னும் மகாநாடு, பிறகு நிர்வாகக் கமிட்டியார், பிறகு அதன் செக்ரிடேரி, கடைசியாக பிரசிடெண்டு. இவ்வங்கத்தினர் ஒவ்வொருவடைய கடமைகளும்



அவைகளின் வரம்பும், தங்கள்பொறுப்பு எம்மட்டிலிருக்கிறது என்பதும் தற்காலம் அவர்களுக்குத் தெரியவில்லை. வெறும் படிப்பு மாத்திரம் போதாது. தீர்மானத்தில் காட்டிய மாதிரிப் பழக்கம்வேண்டியது அவசியம். சங்கங்கள் திறமையாய் வேலைசெய்ய வேண்டுமானும் இது உடனே கவனிக்கப்பட வேண்டிய அவசியம்.

எது செய்யப்பட வேண்டுமென்பதை எளிதாகச் சொல்லிவிடலாம். ஆனால் அதை அனுபவத்திற்குக் கொண்டுவருதல் பழக்கத்தினால் தான் முடியும். இதற்காக பழக்குகிற மனிதர்களைக் கண்டு பிடிக்கவேண்டியது. பணத்தையும் சேகரித்துக் கொள்ளவேண்டியது. அப்பணம் சுமார் ரூ. 4000 ஆகும். தற்காலம் நிலைபெற்றிருக்கும் 4000 சங்கங்களும் தலைக்கு ரூ. 1-வீதம் கொடுத்தால் கூட இத்தொகை ஏற்பட்டுவிடும்.

மிஸ்டர் டி. ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார் இத்தீர்மானத்தைத் தமிழில் ஆமோதித்து பம்பாய் ஸெண்டிரல் கோவாபரேடிவ் இன்ஸ்டிட்யூட் செய்யும் வேலையை உதாரணமாகக்காட்டி இவ்விராஜதானியின் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன் பின்பற்றவேண்டிய மாதிரி இது என்றும் சொன்னார்.

தீர்மானத்தில் "கூட்டுறவு நிர்வாகிகளைப் பழக்கவேண்டிய" என்னும் வாசகத்திற்குப் பதிலாக "கூட்டுறவு ஊழியர்களைப் பழக்கவேண்டிய" என்று ஒரு திருத்தம் பிரஸ்தாபிக்கப்பட்டு பிரஸ்தாபகர் ஆமோதகர் இருவராலும் அங்கீகரிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை மிஸ்டர் என். பீமசேனராவ் தெலுங்கில் ஆதரித்துப் பேசினார்.

மிஸ்டர் சுதர்சன அய்யங்கார் இத்தீர்யானத்தை எதிர்த்து பின்வருமாறு பேசினார்:—"ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன் யாதொரு முன்னேற்ற வேலையும் செய்யவில்லை. சங்கங்கள், இப்பொழுது இருக்கும் சட்டப்படிக்கும் வேலை செய்யும் முறைப்படிக்கும் கூட, திருப்திகரமான டிவிடண்டைப் பெறுததினால் எவ்வளவு குறைவான பணத்தைக் கொடுக்கச்சொல்லிக் கேட்டாலும் அது அவர்களுக்கு பளுவாகத்தானிருக்கும். மேலும் சங்கத்தின் பல உத்தியோக நியமனங்கள் மாறிக்கொண்டே யிருக்கும். அதனால் யாருக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும். என்று சொல்வதும் கடினம்." என்றார்.

பட்டுக்கோட்டை மிஸ்டர் எஸ். வேணுகோபால நாயுடு தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். சங்கங்களின் பொது நலப்பண்டானது இப்பயிற்சி போன்ற விஷயங்களில் உபயோகப்படும்படி செய்வது கூட்டுறவு ஊழியர்களுக்கு ஒரு மாதிரியான போதனை என்றார்.

பிரஸிடெண்டு பின்வருமாறு பேசினார்:—"நான் ஸோஷியல்ஸர்விஸ் லீக்கில் சம்பந்தித்தவன். இந்தத்தீர்மானத்தில் கேட்கிறபடி பயிற்சி கொ

டுக்க வேண்டியது அவசியம் என்பது எங்க ளபிப்பிராயம். முதல் முதல் ஒரு இனும் (ஸப்ஸிடி) கொடுக்கும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்ளவேண்டியது. ஆனால் அதோடு நிற்காமல் செலவின் ஒரு பாகத்தை நாமும்ஏற்றுக்கொள்ளத் தயாரா யிருக்கிறோம் என்பதையும் கவர்ன்மெண்டுக்குத் தெரிவிக்கவேண்டியது. நீங்கள் தயவுசெய்து கொஞ்சம் பணம் சேகரம் செய்தால் அவர்களுடைய உபகாரம்ஏற்படும். இல்லாவிட்டால் அவர்களே ஆரம்பிக்கும் சிரத்தையை வகிக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்." என்றார்.

பிறகு சேர்மன் பின்வரும் விஷயங்களைத் தெரிவித்தார். வரித்தொகையானது இவ்வளவு என்று குறிப்பிட்டாவது, கட்டாயமாகவாவது ஏற்படுவதில் சிலருக்கு சம்மதமில்லை யென்றும் ஆனால் சங்கங்களின் சௌகரியம் சக்தி ஆசைகளுக்குத் தக்கபடி விடப்படவேண்டுமென்று அவர்களுக்கு அபிப்பிராயமிருக்கிறது என்றும் சொல்லி அதனால் "தங்களுடைய நிகர இலாபத்தின் ஒரு அம்சத்தை நியதமாய்க்கொடுத்து வரும்படிக்கும்" என்ற வாசகத்திற்கு பதிலாக "தங்களுடைய நிகர இலாபத்திலிருந்து அவர்களுக்கு இயன்றவரையில் ஏதோ ஒரு தொகையைக்கொடுத்து வரும்படிக்கும்" என்று வாசக மாற்றலைப் பிரஸ்தாபித்தார். திருத்தப்பட்டபடி அதன் வாசகம் பின் வருமாறு.

"உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவு ஊழியர்களைப்பழக்க வேண்டிய" அவசரத் தேவையை முன்னிட்டு எல்லாக்கிராம நாணயச்சங்கங்களும் சென்ட்ரல் பாங்கிகளும் தங்களுடைய நிகர இலாபத்திலிருந்து அவர்களுக்கு இயன்றவரையில் ஏதோ ஒருதொகையைக் கொடுத்து வரும்படிக்கும், இவ்விஷயமாய் தகுந்த கணக்குகளை ஏற்படுத்தி தகுதியான ஜனங்களை அதற்காக நியமனம் செய்யுமாறு ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனைக் கேட்டுக் கொள்ளும் படிக்கும் இதற்காக தாராளமாய் இனும் கொடுக்கும்படி கவர்மெண்டைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் எல்லோராலும் படிக்கும் இக்கான்பரன்ஸ் கோருகிறது."

இவ்விதம் மாற்றப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

## VII. யூனியன்கள் மேற்பார்வை செய்வதற்காக கவர்ன் மேண்டின் சகாயம்.

மிஸ்டர் ஓ. விஸ்வநாதராவ் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரரேபித்தார்.

"யூனியன்கள் மேற்பார்வை செய்வது அதிகத் திறமாகயிருக்கும் பொருட்டு, இவ்விஷயத்தில் உதவி செய்யக்கூடிய ஸெண்ட்ரல் பாங்கிகள் லோகல் யூனியன்கள், இல்லாவிட்டால், அந்த இடங்களுக்கு கவர்ன்மெண்டு ஒரு தற்கால இனும் ஒன்று கொடுக்கலாமென்று இக்கான்பரன்ஸ் சிபார்சு செய்கிறது."



கூட்டுறவுச்சங்கங்கள் ஜயகரமாய் வேலை செய்வதற்கு சூபர்வைஸிங் யூனியன்கள் இருக்கவேண்டியது அத்தியாவசியம் என்பது எல்லாருடைய சம்மதியையும்பெற்றவிஷயம் என்று தெலுங்கில் சொல்லி அத்தகைய லோகல் யூனியன்களின் உபயோகங்களையும் நோக்கங்களையும் அங்கீகரிக்குமாறு சிபார்சுசெய்து செய்தார்.

மிஸ்டர் ஐயாக்குட்டி ஐயங்கார் இத்தீர்மானத்தை ஆமோதித்தார். கூட்டுறவுச்சங்கங்களின் சங்கியை விருத்தியாக ஆக, லோகல் சூபர்வைசிங் யூனியன்கள் ஏற்படுதல் அவசியமென்றும் அதனால் மேற் பார்வையின் பொருட்டு சங்கங்கள் அவைகளோடு அணைக்கப்பட முடியுமென்றும் அவர்சொன்னார். அத்தகைய மேற் பார்வைக்கு அநேக இன்ஸ்பெக்டர்கள் நியமனமாவது சாத்தியமில்லை யென்பது தெரிய வேண்டியிருக்கிறது. அதனால் யூனியன்களிருத்தல் அவசிய மென்று ஏற்படுகிறது. இதற்காக குறைந்தபக்ஷம் 25 ரூ. சம்பளமும் 10 ரூ. படியுமுள்ள ஒரு சூபர்வைசர், தேவையாகிறது. அம்மாதிரி சூபர்வைசர்களின் நியமனத்திற்காக கவர்ன்மெண்டு இனும் பெற வேண்டி யிருக்கிறது. என்றார்.

"லோகல் யூனியன் களாவது இல்லாவிட்டாலும்," என்ற வார்த்தைகளுக்குப் பிறகு "அந்தப்பாங்கிகளாலும் யூனியன்களாலும் கொடுத்துதவ பணம் நிர்வகிக்க முடியாவிட்டால், என்று கூட்டி "உதவிசெய்யக் கூடிய" என்னும் பதங்களை எடுத்துவிடவேண்டும் என்று திருத்தம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

பிறகு கீழ்க்கண்ட திருத்தத் தீர்மானம் மீட்டிங்கில்வைத்து நிறைவேற்றப்பட்டது:—

"யூனியன்கள் மேன்பார்வை செய்வது அதிகத்திறமாயிருக்கும் பொருட்டு, சென்ட்ரல் பாங்கி களாவது லோகல் யூனியன் களாவது இல்லாவிட்டாலும், அந்தபாங்கி களாலும் யூனியன் களாலும் உதவி செய்ய பணம் நிர்வகிக்கமுடியா விட்டாலும், அத்தகைய இடங்களுக்கு கவர்ன்மெண்டு தற்கால இனுமொன்று கொடுக்கலாம் என்று இக்கான்பரன்ஸ் சிபார்சு செய்கிறது."

பகல் 2-45-க்கு சிற்றுண்டிஎடுத்துக் கொள்வதற்காக கான்பரன்ஸ் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.

சிற்றுண்டிக்குப்பிறகு கான்பரன்ஸ் 3-20-மணிக்கு கூடிற்று.

## VIII. பத்திரங்களை ரிஜிஸ்டர்செய்தல்.

கீழ்க்கண்ட தீர்மானத்தை மிஸ்டர் டி. ஆர். ஸ்ரீனிவாசய்யங்கார் கொண்டுவந்தார் :—

"கடன்வாங்கும் சங்கங்களின் சௌகரியத்தை அனுசரித்து அவைகளுக்குக் கடன் கிடைப்பது எளிதாக இருக்கும்பொருட்டு "முக்கியமாய்" குறுகிய காலக்கடன்கள் விஷயமாக லோகல் யூனியன்கள் சிபார்சு செய்கிற சந்தர்ப்பங்களிலெல்லாம், ரிஜிஸ்டர் செய்யப்படாத பத்திரங்களைக்கொண்டு, ஸெண்ட்ரல் பாங்கிகள் திருப்தியடையலாம் என்று இக்கான்பரன்ஸ் சிபார்சு செய்கிறது."

ரிஜிஸ்டர் செய்யப்பட்ட பத்திரத்திற்கும் செய்யப்படாத பத்திரத்திற்குமுள்ள வித்தியாசம் நன்கு விவரிக்கப்பட்டு விஷயாலோசனைக் கமிட்டியார்முன் வைக்கப்பட்டதென்றும் அவர்கள் இதைக் கான்பரன்ஸின்முன் வைத்து அவர்களின் சம்மதியைப் பெறவேண்டுமென்று தீர்மானித்தார்களென்றும் அவர் சொன்னார். பத்திரங்களை ரிஜிஸ்டர் செய்வதில் சில கஷ்டங்கள் சம்பவிக்கின்றன. அவைகளிலொன்று என்னவென்றால் பஞ்சாயத்தார்கள் கௌரவஸ்தர்கள். அவர்களெல்லாரும் ரிஜிஸ்ட்ராராபீசுக்குப் போகமுடியாது. இரண்டாவது, சில கிராமங்கள் ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீசிலிருந்து வெகு தொலைவிலிருக்கின்றன. கடன்வாங்கும் சங்கங்கள், பத்திரங்களை ரிஜிஸ்தர்செய்தல் வெகு அனாவசியமான பிரயாசத்தைக் கொடுக்கிறது. சென்ட்ரல் பாங்கிகளோ தாங்கள் கொடுக்கும் பணத்திற்கு பத்திரம் ரிஜிஸ்டராவது அவசியம் என்கிறார்கள். இவ்விரண்டிற்கும் மத்தியஸ்தமாக, குறுகிய காலக்கடன்கள் விஷயத்தில் லோகல் யூனியன்களினால் சிபார்சு செய்யப்பட்ட கிராம நாணயச் சங்கங்களுக்கு பத்திரம் ரிஜிஸ்தர் செய்வதை சென்ட்ரல் பாங்கி ஊர்ஜிதப் படுத்தவேண்டாமென்று அபிப்பிராயம் உண்டாயிற்று.

ஸ்ரீவில்லுப்புத்தூர் ஏ. ஸ்ரீனிவாச அய்யங்கார் இத்தீர்மானத்தை ஆமோதிக்கையில் பத்திரங்கள் ரிஜிஸ்தராவது அவசியம் தான் என்று தன்மனதில் பட்டதாகவும் ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் கட்டாயப் படுத்துவது அவசியமில்லை யென்றும் சொன்னார். ரிஜிஸ்டர் செய்வதும் இல்லாததும் பாங்கியின் இஷ்டப்படி விடவேண்டியது என்றார்.

ஆலங்குடி ஆபத்சகாய அய்யர் இந்தத் தீர்மானத்திலிருந்து "முக்கியமாய்" என்னும் வார்த்தையைத் தள்ளவேண்டுமென்று ஒரு திருத்தம் கொண்டுவந்தார். நீண்ட காலக்கடனுக்கும் குறுகிய காலக்கடனுக்கும் வித்தியாச மிருப்பதாகத் தனக்குத் தெரியவில்லை, யென்றார். எத்தகைய கடனாக விருந்தாலும் குறுகிய கா்லக்கடனுக்கு ஒவ்வொரு 6 மாதத்திலும் நீண்டகாலக் கடனுக்கு ஒவ்வொரு வருஷத்திலும் வட்டியும் முதலில் ஓர் பாகமும் கடன் வாங்கின ஒவ்வொரு சங்கமும் கொடுக்கவேண்டியது. எந்தப் பத்திரமாயிருந்தாலும் அம்மாதிரி வரவுவைத்த தேதி முதல் மூன்று வருஷம் அது செல்லும். ஆகையால் காலாவதி தோஷம் கற்பிக்க



முடியாது. மேலும் ஒரு ஸெண்ட்ரல் பாங்கும் மூன்று வருஷம் வரையில் யாதொரு வசூலும் செய்யாமல் இருக்காது. ஆகையால் தீர்மானத்திலிருந்து "முக்கியமாய்" என்னும் வார்த்தையை ஒழிக்கலாமென்பது தனதபிப்பிராயம் என்றார்.

இந்தத் திருத்தத்திற்கு ஆமோதகர் ஒருவருமில்லாததினால் தீர்மானம் கவனிக்க முடியவில்லை.

தீர்மானம் மீட்டிங்கில் வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## IX. விக்கிரயக் கூட்டுறவு.

மிஸ்டர் வி. என். கிருஷ்ணசாமி அய்யர் கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொண்டுவந்தார்:—

"விக்கிரயக்கூட்டுறவு இன்னும் அதிக சீக்கிரமாக விருத்தியடையும் பொருட்டு, க்ஷேமநிதிகள், 'மெம்பரல்லாதாருக்குவிற்றல், முதலிய விஷயங்களில் பம்பாய் கவர்ன்மெண்டார் காட்டி வருகிற சௌகரியத்தை நமது கவர்ன்மெண்டும் அனுசரிக்குமாறு இக்கான்பரன்சு சிபார்சு செய்கிறது."

அவர் சொன்னதாவது:—

ஆக்டின்படி நிகர இலாபத்திலிருந்து 100க்கு 15 விழுக்காடு க்ஷேம நிதிக்காக எடுத்துவைத்தபிறகும் சிப்பந்திச்செலவுகளைக் கொடுத்த பிறகும் மிகுதியிருப்பதை பங்குக்காரர்களுக்குள் ஒரு இனாமாகப்பகிர்ந்து கொடுத்தல் வழக்கமாயிருக்கிறது. நிகரஇலாபத்திலிருந்து 100-க்கு 25 எடுத்துவைத்தல் மிகவும் கடுமையென்று கருதப்படுகிறது. அதுவும் ஸ்டோர் சொஸைடிகளில் மிகக்கடுமையாதலால் அவைகள் திருப்திகரமாய், விருத்திக்கு வரமுடியாது. கோவாபரேடிவ் ஸ்டோரின் நோக்கம் ஏராளமான இலாபம் சம்பாதிப்பதற்கல்ல. அதன் மெம்பர்களுக்கு கலப்பில்லாத நல்ல சரக்குகளை நாணயமான விலைக்கு ஸப்ளைசெய்வதே. ஸ்டோர் சொசைடிகளைப்பரவவைக்கும் பொருட்டு பம்பாய் கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் நிறைவேற்றி யிருக்கிறார்களென்று தெரிகிறது அதாவது க்ஷேமநிதிக்காக நிகர இலாபத்திலிருந்து 100-க்கு 10 வைத்தால் போதுமென்றும் பாக்கியை மெம்பர்களுக்கு போனஸாகப்பகிர்ந்து கொடுக்கலாமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். மிஸ்டர் ஓ. விஸ்வநாத ராவ் இத்தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்தார். அதாவது 'மெம்பரல்லாதாருக்கு விற்றல் முதலிய' என்னும் பதங்களை விலக்க வேண்டும் என்பதே. இத்திருத்தத்தை மிஸ்டர் பரமசிவ அய்ய ஆமோதித்தார்.

பிரேபகரும் இதை அங்கீகரிக்க தீர்மானம் திருத்தப்படி நிறைவேற்றப்பட்டது.

## X. மாணவர்களுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள்.

*மிஸ்டர் என். பரமசிவ அய்யர் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரே ரேபித்தார்.*

"இனிவரும் சந்ததிகளுக்குள் இவ்வியக்கம் பழக்கமாகவேண்டுமென்னும் நோக்கத்துடன் "பள்ளிக் கூடங்களிலும் காலேஜுகளிலும் மாணவர்களின் கோவாபரேடிவ் சங்கங்கள் ஏற்படவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் சிபார்சு செய்கிறது."

*தீர்மானத்தை பிரரேபணைசெய்கையில் பின் வருமாறுச்சொன்னார்.* மாணவர்களின் சங்கங்கள் ஏற்கனவே மங்களூரிலும், கும்பகோணத்திலும்இன்னும் இரண்டொரு இடங்களிலும்ஏற்பட்டிருக்கின்றன. அச்சங்கங்களில் சில மெம்பர்கள் 18 வயதுக்குள் திருப்பதால் அவைகளை ரிஜிஸ்டர் செய்ய முடியவில்லை. இச்சங்கங்கள் நன்றாய் வேலை செய்கின்றனவென்று கேள்வி. பள்ளிக் கூடங்களிலும் காலேஜுகளிலும் அத்தகைய சங்கங்களிருத்தல் அத்தியாவசியம் என்பது எனதபிப்பிராயம். அதனால் கூட்டுறவின் நிர்வாகத்தில் பையன் நேரில் ஈடுபட்டு அதைப்பற்றிய படிப்பையும் பழக்கத்தையும் அனுபவமாய் கற்றுக்கொள்ளலாம். பையன்கள் மெம்பராவதற்கு, வயதைப்பற்றிய கேள்வி தடையாக வந்தால் அத்தகைய சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டாம். ரிஜிஸ்டர் செய்யப்படாத சங்கங்களாயிருந்து வேலை செய்யலாம். காலேஜ் விஷயங்களில் இது ஒரு தடங்கலாக இருக்காது. அங்கே எல்லாரும் அநேகமாய் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள். நோட்டுப்புஸ்தகங்கள், ஸ்டேஷனரிகள் இவைகளை வாங்குவதில் வெகு பிரயாசைப் படுகிறார்கள். சராசரியில் சுமார் ரூ. 2000 முதல் ரூ. 5000. வரையில் விலையுள்ள ஸ்டேஷனரிகள் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் செலவாகின்றன. அதன் எல்லா இலாபமும் அதாவது சுமார் ரூ. 500 தற்காலம் கடைக்காரர்களுக்குச் சேருகிறது.

தவிர ஏழைப்பையன்கள் தங்கள் படிப்பை நிறுத்தாமல் படித்து வரும் பொருட்டு அவர்களுக்குஉபகாரம் செய்யும்படி கவர்ன்மெண்டார் கொஞ்சம் பணம் கொடுத்துவந்தார்கள். ஆனால் ஏதோ துரதிருஷ்டவசத்தினால் இவ்வுபகாரம் நிறுத்தம் செய்யப்பட்டது. ஒரு பள்ளிக்கூடச் சங்கம் ஏற்பட்டால் அது மேற்கூறிய ரூ. 500 இலாபத்தைப் பெற்று அதைக் கொண்டு ஏழைப்பையன்களின் படிப்புக்கு உதவச் செய்யலாமென்று என் மனதில் படுகிறது என்றார்.

*மிஸ்டர் நாகருஜய்யர் இத்தீர்மானத்தை ஆமோதித்தார்.* ஏராளமான இலாபத்தைப் பெறுவதோடு கூட அத்தகைய சங்கங்கள் பையன்களைப் பழக்கும் அஸ்திவாரமாகயிருந் [illegible] ட்களில் திறமை